24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 163 சித்திரை 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை 10 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# ஈனக் கும்பலை இனி உருவெடுக்கவிடோம்

## முஸ்லிம் தலைமைகள் சபதம்



யாழ்ப்பாணம், மே 10

ஈனத் தனமான தாக்குதலில் ஈடுபட்ட கும்பலைப் போன்றொரு கும்பல் முஸ்லிம் சமூகத்தினுள்ளே இனிமேல் தலையெடுத்துவிடாது. அதை முழுமையாகக் களைபிடுங்கும் முயற்சியில் நாங்கள் முற்றுமுழுதாகவே ஈடுபட்டுள்ளோம் என்று சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தலைவரும், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவுப் ஹக்கீம் தெரிவித்தார். 19

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி!

கொழும்பு, மே 10
எந்தவொரு காலத்திலும் இடம்பெறாத அளவு ரூபாவின் வீழ்ச்சி இந்த 4 வருடங்களிலே ஏற்பட்டிருக்கின்றது. அதனால் அரச சுற்றுலா துறையினர் நாட்டுக்கு வருவதை நிறுத்தி பயங்கரவாதிகள் நாட்டுக்குள் வரும் வழியையே ஏற்படுத்தி இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் 19

## பனையால் வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 10
சீவல் தொழில்செய்யும் நபரொருவர் பனையால் வீழ்ந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் அராலியில் நேற்று இடம்பெற்றது. மாணிக்கம்ஞானேஸ்வரன் (வயது - 55) என்ற நபரே அவ்வாறு உயிரிழந்தவராவார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவரு 19

## முஸ்லிம்கள் கொடுமையானவர்களென சித்திரிப்பதை உடனடியாகக் கைவிடுக

### அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, மே 10
பாதுகாப்புத் தரப்பினரின் தேடுதலில் கண்டெடுக்கப்படும் வாள்கள், கத்திகளை வைத்து ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினரும் கொடுமையானவர்கள் என்று சித்திரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.
நாட்டிலுள்ள சகலரையும் வெட்டுவதற்கும். குத்துவதற்கும் முஸ்லிம் சமூகம் தயாராக இருக்கின்றது என்ற பிழையான அர்த்தப்படுத்தல் 19

## அகமதிய முகமதியரை இங்கு வரவேற்று விருந்தோம்புவோம்

### சிவசேனை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 10
பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து அரசியல் தஞ்சம்கோரி இலங்கையில் குடியேறிய அகதிகளை, நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பாதுகாக்கும். 19

## பள்ளிவாசல்களில் இருந்து எடுக்கப்படுகின்ற வாள்கள் அனைத்தும் ஒரே மாதிரியானவை!

### பின்னணிகள் விசாரிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்துகின்றார் செகான் செமசிங்க

கொழும்பு, மே 10
பாதுகாப்புப் படைகளின் சுற்றிவளைப்பில் பள்ளிவாசல்களில் இருந்து எடுக்கப்படும் வாள்கள் அனைத்துமே ஒரே வகையானவையாக இருக்கின்றன. அப்படியென்றால் இந்த வாள்களின் பின்னணியில் பெரிய திட்டமொன்று இருந்துள்ளதா? என்பதை அரசு விசாரிக்க வேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் செகான் செமசின்க சபையில் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சிறப்பு வியாபாரப் பண்ட அறவீடுகள் கட்டளைச்சட்ட ஒழுங்குவிதிகள்.மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஊடாக சோதனை நடவடிக்கைகளின் போது கைப் 06

## மின் விநியோகத்தை வழங்குவதில் சிக்கல்

### மின்சக்தி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மே 10
மின்சார விநியோகத்தைத் தொடர்ச்சியாக வழங்குவதில் சவாலை எதிர்நோக்கியுள்ளதாக, 19

### மாணவர்கள் விடுவிப்புத் தொடர்பில்

## பல்கலை மாணவர்கள் அரச தலைவர் மைத்திரி இன்று சந்தித்துப் பேச்சு

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியங்களின் பிரதிநிதிகளுக்கும் அரச தலைவர் 19

## கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் தாக்குதல் நடத்தியவரின் சகோதரர் கைது!

கொழும்பு, மே 10
கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்திய பயங்கரவாதியின் சகோதரர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக நீதிமன்ற விசாரணை இடம்பெற்ற போதே குற்றத்தடுப்பு பிரிவினர் நீதிமன்றில் இதனை தெரிவித்துள்ளனர். ஈஸ்டர் தினத் 19

## 50 தற்கொலைதாரிகள் தயார் நிலையிலுள்ளனர்

### பொதுபலசேனா எச்சரிக்கை

கொழும்பு, மே 10
தற்கொலைக் குண்டுதாக்குதல்களை மேற்கொள்ள இன்னும் 50 பேர் தயாராகவுள்ளனர் 19

DFCC தங்கவரம்
தங்க நகை அடகுச் சேவை



இப்போது முற்பணத்தை நாம் மேலும் அதிகரித்துள்ளோம்!

கரட் 24 ரூ. 48,000/-
கரட் 22 ரூ. 45,000/-

இச் சேவையைப் பெறுவதற்கு அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு இன்றே வாருங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி

# விகாரி வருட தமிழ்ப் புத்தாண்டு பொதுப் பலன்கள்




**மற்றவர்களை மகிழ்வித்து மகிழ்பவர்களே!**

செவ்வாய் 3இல் வலுவாக இருக்கும் வேளையில் புத்தாண்டு பிறப்பதால், புதிய முயற்சிகள் வெற்றி பெறும். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். சொந்தங்கள் உங்களின் பெருந்தன்மையைப் புரிந்து கொள்வார்கள்.

வருடம் முழுவதும் சனி பகவான் 10ஆம் வீட்டிலேயே தொடர்வதால் எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். உடல் ஆரோக்கியம் சீராகும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு கூடும். வேற்று இனத்தவர்கள் உதவுவார்கள். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். என்றாலும் வேலைச் சுமை இருந்தபடி இருக்கும்.

வருட்ம் முழுவதும் ராகு 4இலும் கேது 10இலும் தொடர்வதால் மனதில் இனம்புரியாத பயம். முடிவு எடுப்பதில் தடுமாற்றம் வந்து செல்லும்.

பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். பூர்வீக சொத்தைப் பெறுவதில் பிரச்னைகள் வந்து நீங்கும். யாருக்காகவும் கையெழுத்து போடாதீர்கள்.

14.4.2019 முதல் 18.5.2019 வரை குரு பகவான் அதிசாரமாக உங்கள் ராசிக்கு 10ஆவது வீட்டில் தொடர்வதால் அதுவரை வேலைச்சுமை அதிகமாக இருக்கும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். சில காரியங்களை போராடி முடிக்க வேண்டி வரும். நெருக்கமானவர்களிடம் கூட குடும்ப விஷயங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம். மறைமுக எதிர்ப்புகளும், இடமாற்றங்களும் வரக் கூடும்.

19.5.2019 முதல் 27.10.2019 வரை ராசிநாதன் குருபகவான் 9ஆம் வீட்டில் நிற்பதால் உங்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியடையும். அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். புது வீடு கட்டி, கிரகபிரவேசம் செய்வீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். குடும்பத்துடன் சென்று குலதெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள்.




28.10.2019 முதல் 27.3.2020 வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 10 இல் இருப்பதால் சிறு சிறு அவமானங்களும், விமர்சனங்களும், வீண்பழியும் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் குற்றம், குறைகளை அடிக்கடி சொல்லிக் காட்டவேண்டாம். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

17.8.2019 முதல் 9.9.2019 வரை சுக்கிரன் 6இல் அமர்வதால், அந்தக் கால கட்டத்தில் கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதங்கள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைக்குச் சிறு சிறு அறுவை சிகிச்சை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புள்ளது. 12.11.2019 முதல் 27.12.2019 வரை செவ்வாய் 8இல் அமர்வதால் சகோதரர்களுடன் சண்டை சச்சரவுகள் ஏற்படக்கூடும். செலவுகள் அதிகரிக்கும்.


மாணவர்களுக்குப் பாடங்களில் ஆர்வம் உண்டாகும். உயர்கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெற்று பெற்றோரை மகிழ்விப்பீர்கள். நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் தேவை.

வியாபாரத்தில் நீங்கள் தொட்டது துலங்கும் காலம் இது. உங்கள் நிலை உயரும். இழந்த செல்வாக்கை மீட்பீர்கள். தேங்கிக் கிடக்கும் சரக்குகள் விற்றுத் தீரும். பழைய மீதிகள் வசூலாகும். விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். சித்திரை, ஆவணி, தை மாதங்களில் எதிர்பாராத இலாபம் கிடைக்கும். பெரிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் நிலை உயரும். புதிதாகப் பொறுப்பேற்கும் உயரதிகாரி உங்களைப் புரிந்துகொள்வார். முக்கியப் பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைப்பார். ஆவணி, புரட்டாசி, தை மாதங்களில் பொறுப்புகள் அதிகரிப்பதுடன், சம்பளமும் உயரும்.

கலைஞர்களுக்கு வாய்ப்புகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். பொது நிகழ்ச்சிகளில் தலைமை தாங்கும் அளவுக்குப் பிரபலமடைவீர்கள்.

இந்தப் புத்தாண்டு உங்களை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்வதுடன் உறவினர்கள் வியந்து மதிக்கும்படி வாழவைக்கும்.

# எங்கு பல்லி விழுந்தால் என்ன பலன் தெரியுமா?



- தலையின் இடது பக்கம் பல்லி விழுந்தால் துன்பம் தலையின் வலது பக்கம் பல்லி விழுந்தால் கலகம்
- நெற்றியின் இடது பக்கம் பல்லிவிழுந்தால் கீர்த்தி நெற்றியின் வலது பக்கம் பல்லிவிழுந்தால் லக்ஷ்மிகரம்
- வயிற்றின் இடது பக்கம் பல்லி விழுந்தால் மகிழ்ச்சி
- வயிற்றின் வலது பக்கம் பல்லி விழுந்தால் தானியம்
- முதுகு: இடது பக்கம் பல்லி விழுந்தால் கவலை
- முதுகு : வலது பக்கம் பல்லி விழுந்தால் நஷ்டம்
- கண் : இடது பக்கம் பல்லிவிழுந்தால் பயம்
- கண்: வலது பக்கம் பல்லிவிழுந்தால் சுகம்

**பல்லி விழும் பலன்கள்**

| உறுப்பு | இடம் | வலம் |
|---|---|---|
| தலை | கலகம் | துன்பம் |
| வயிறு | தானியம் | மகிழ்ச்சி |
| கண் | சுகம் | சிறைபயம் |
| பிருஷ்டம் | சுகம் | செல்வம் |
| காது | ஆயுள் | லாபம் |
| கணைக்கால் | பிரயாணம் | சுகம் |
| மணிக்கட்டு | பீடை | கீர்த்தி |
| நகம் | செலவு | நஷ்டம் |
| மார்பு | தனலாபம் | சுகம் |
| நெற்றி | லட்சுமிகரம் | காரியசித்தி |
| முதுகு | நஷ்டம் | கவலை |
| உதடு | கஷ்டம் | வரவு |
| முழங்கால் | நஷ்டம் | பந்தயம் |
| தோள் | வெற்றி | போகம் |

- தோல் : இடது பக்கம் பல்லி விழுந்தால் வெற்றி
- தோல் : வலது பக்கம் பல்லி விழுந்தால் வெற்றி
- பிருஷ்டம்: இடது பக்கம் பல்லி விழுந்தால் செல்வம்
- பிருஷ்டம் : வலது பக்கம் பல்லி விழுந்தால் சுகம்
- கபாலம் : இடது பக்கம் பல்லி விழுந்தால் வரவு
- கபாலம் : வலது பக்கம் பல்லி விழுந்தால் வரவு
- கணுக்கால் : இடது பக்கம் பல்லி விழுந்தால் பயணம்
- கணுக்கால் : வலது பக்கம் பல்லி விழுந்தால் செலவு
- மூக்கு ; இடது பக்கம் பல்லிவிழுந்தால் கவலை
- மூக்கு ; வலது பக்கம் பல்லி விழுந்தால் வியாதி
- மணிக்கட்டு : இடது பக்கம் பல்லிவிழுந்தால் கீர்த்தி
- மணிக்கட்டு : வலது பக்கம் பல்லி விழுந்தால் பீடை
- தொடை : இடது பக்கம் பல்லி விழுந்தால் சஞ்சலம்
- நகம் : இடது பக்கம் பல்லி விழுந்தால் நஷ்டம்
- நகம் : வலது பக்கம் பல்லி விழுந்தால் செலவு
- காது : இடது பக்கம் பல்லி விழுந்தால் லாபம்
- காது : வலது பக்கம் பல்லி வீழுந்தால் ஆயுள்
- மார்பு : இடது பக்கம் பல்லி விழுந்தால் சுகம்
- மார்பு : வலது பக்கம் பல்லி விழுந்தால் இலாபம்
- கழுத்து : இடது பக்கம் பல்லி விழுந்தால் வெற்றி
- **கழுத்து : வலது பக்கம் பல்லி விழுந்தால் பகை**

எமது புராணத்தில் விலங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதில் ஊர்வன வகைகளில் ஒன்றான பல்லியின் செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதில் அந்த பல்லி எழுப்பும் சப்தம் மற்றும் அது நம்மீது விழுந்தால் ஏற்படும் பலன்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

எமது பண்டைய புராணத்தில் இதற்கெனவே ஒரு படிப்பு உள்ளது என்பது தெரியுமா? அது தான் பல்லி சாஸ்திரம். இந்த பல்லி சாஸ்திரத்தில், பல்லி கத்துவது, பல்லி நம் உடலில் விழுந்தால் என்ன பலன் என்பது குறித்து கொடுக்கப்பட்டுள்ளது.

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி சாந்தினி அருந்தவபாலன்

[ ஓய்வுநிலை ஆசிரியை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ]

| உதிப்பு | உதிர்வு |
|---|---|
| 25.11.1955 | 06.05.2019 |

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒருபழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை.

பாசம் உலவிய கண்களும் எங்கே ?
பார்த்து துளாவிய கைகளும் எங்கே ?
தேசம் அளாவிய கால்களும் எங்கே ?
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே ?

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல மா மருந்து இல்லை

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரைதொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதிமழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்டமானுடன் மயங்குவதென்ன

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்களே கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடி வந்துசேரும்

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீர முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக்கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

**V.M.K. ஜூவல்லர்ஸ் - அமரர் க.புலேந்திரன் குடும்பம்**

**அம்பிகா டிஸ்பென்சரி - ஸ்ரீராம் சில்க்**
**ரஞ்சனாஸ் புடைவையகம் நிலாரெக்ஸ்**
**விமலாஸ் சங்கரன்ஸ்**
**வாமனன் பெயின்ற் சென்ரர்**

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

வவுனியா வடக்கு வலயத்திலுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலைகளில் அதிபர் வெற்றிடத்தினை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

இப்பதவிகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தி யோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை வவுனியா வடக்கு வலய பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ பிரிவில் பெற்று எதிர்வரும் 2019.05.25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரில் அல்லது **“ வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு, புளியங்குளம்”** என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருட காலமேனும் சேவை யாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. வ/ பெரியகுளம் அ.த.க.பா. வ/வேடர் மகிழங்குளம் அ.த.க.பா ஆகிய இரு பாடசாலைகளுக்கும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்க ளில் வவுனியா வடக்கு வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சேவை யாற்றும் இ.அ.சேவை தரம் III இனைச் சேர்ந்தவர்களின் விண்ணப் பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. வ/ கொல்லர் புளியங்குளம் ஸ்ரீராமகிருஸ்ணா வித்தியாலயம். வ/ மாமடு ஸ்ரீவாணி வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுக்கும் ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டு தற்போது மீளக்கோரப்படு வதால் இந்நிபந்தனை ஏற்புடையதாகாது.

**வெற்றிட விபரம்**

| இல | பாடசாலை பெயர் | பாடசாலை வகை | வெற்றிடத்துக்கான பதவி |
|---|---|---|---|
| 01 | வ/பெரியகுளம் அ.த.க.பா | III | அதிபர் |
| 02 | வ/ வேடர் மகிழங்குளம் அ.த.க.பா | III | அதிபர் |
| 03 | வ/மாமடு ஸ்ரீவாணி வித்தி (மீள் விண்ணப்பம் கோரல்) | III | அதிபர் |
| 04 | வ/கொல்லர் புளியங்குளம் ஸ்ரீராமகிருஸ்ணா வித்தி (மீள் விண்ணப்பம் கோரல்) | III | அதிபர் |

**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**வவுனியா வடக்கு.**

(IN/10088)(11,17)




# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
# கடைகள் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான கேள்வி அறிவித்தல்

சுன்னாகம் உப அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய நான்கு கடைகள் அட்டவணையில் விவரிக்கப்பட்டவாறு வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** | **: 10.05.2019 தொடக்கம் 24.05.2019 பி.ப 3.00 மணி வரை.** |
| **கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி** | **: 27.05.2019 பி.ப 2.00 மணி** |
| **கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி** | **: 27.05.2019 பி.ப 2.00 மணி** |
| **கேள்வி திறக்கப்படும் இடம்** | **: தலைமை அலுவலகம், வலிதெற்கு பிரதேச சபை.** |

| கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT &NBT தவிர) | கேள்விவைப்பு பணம் (மீளளிக்ககூடியது) | கேள்வி படிவகட்டணம் (மீளளிக்க முடியாது) (VAT &NBT தவிர) |
|---|---|---|---|
| மேல்மாடி கடை இல : 1 | 1,320,000.00 | 26,100.00 | 1,000.00 |
| மேல்மாடி கடை இல : 2 | 1,320,000.00 | 26,100.00 | 1,000.00 |
| மேல்மாடி கடை இல : 3 | 1,320,000.00 | 26,100.00 | 1,000.00 |
| மேல்மாடி கடை இல : 4 | 1,320,000.00 | 26,100.00 | 1,000.00 |


**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி. இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனி கடித உறையில் இட்டு **“செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்”** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி. இணைப் பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகை பணத்தினை ஒவ்வொரு மாதம் 31 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10 வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
5. கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தை செய்து கொள்ள வேண்டும்.
6. சித்திகர குத்தகைகாரர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கு இணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
7. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
8. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிம சான்றிதழையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
9. கேள்விப்பத்திரத்தினை எற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு / தவிசாளருக்கு உண்டு.
10. மேலதிக விவரங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(IN/10136)(11,17)

# வீண் உபதேசம்



ஒரு காட்டில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன.
குளிர்காலத்தில் ஒருநாள் மிகவும் கடுமையான குளிராக இருந்தது. குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை கொஞ்சம் நெருப்பு கிடைத்தால் சருகுகளைப் போட்டுத் தீமூட்டி குளிர் காயலாம் என்று ஒரு கிழக்குரங்கு கூறியது.
நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்தபோது ஒரு மின்மினிப் பூச்சி பளிச் பளிச் சென்று மின்னியவாறு பறந்து சென்று கொண்டிருந்தது.
அதைக் கண்ட ஒரு குரங்கு அதோ நெருப்பு போகிறது என்று கூறியது. மற்றொரு குரங்கு அந்த மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது. மற்ற குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூளங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சிமீது போட்டன.
பிறகு குரங்குகள் நெருப்பு கொழுந்து விட்டு எரியப் போகிறது என எதிர்பார்த்து சூழ்ந்து அமர்ந்து கொண்டன.
ஆனால் தீ எரியும் வழியைக் காணோம் பிறகு குரங்குகள் வாயினால் குப்பையை ஊதி நெருப்பை எரிய விடும் முயற்சியில் ஈடுபட்டன.
மரத்தில் அமர்ந்து குரங்குகளின் கோமாளிக் கூட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பறவை கலகலவென்று சிரித்தபடி மரத்தை விட்டிறங்கி கீழே வந்து அமர்ந்தது.
பிறகு குரங்குகளை நோக்கி நண்பர்களே மின்மினிப் பூச்சியை நெருப்பு என்று எண்ணிக் கொண்டு தீ மூட்ட வீண் பிரயாசை எடுக்கிறீர்கள். நீங்கள் என்னதான் வாயால் ஊதினாலும் மின்மினிப் பூச்சியிடமிருந்து நெருப்பு வரவே வராது. வீண் வேலையை விட்டுவிடுங்கள் என்று புத்திமதி கூறியது.
உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக்கொண்டு உன் வேலையைப் பார் என்று கூறிவிட்டு குரங்குகள் மறுபடியும் குப்பையை வாயால் ஊதித் தீ உண்டாக்க முயற்சி யெடுத்தன.
பறவை, குரங்குகளின் முட்டாள்தனத்தை எண்ணிப் பரிதாபப்பட்டு திரும்பத் திரும்ப குரங்குகளுக்கு புத்திமதி கூறிக் கொண்டிருந்தது. இதனால் கோபமுற்ற குரங்குகள் பறவை மீது பாய்ந்து அதனைப் பிடித்து தரையில் மோதிக் கொன்று விட்டன.

## வாடகைக்குண்டு

புத்தூர் சுன்னாகம் றோட்டில் வாகையடி என்ற இடத்தில் மில் நடத்துவதற்கோ, பொருள்கள் களஞ்சியப்படுத்துவதற்கோ உரிய கட்டடம், நீளம் 200 அடி அகலம் 40 அடி கொண்டது. மில்வேலைக்கான தளம் தொட்டி என்பன உண்டு. புத்தம் புதிய கட்டடம், கட்டத்துக்கு இரண்டு பக்க பாதையுண்டு வாடகைக்கு கொடுக்கப்படும்.

076 978 9438

## மரண அறிவித்தல்

### சிவசம்பு பாலேந்திரன்

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு பாலேந் திரன் நேற்று (09.05.2019) வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ர புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அருட்சக்தி தம்பதிகளின் மருமகனும் பாலசரஸ்வதியின் (சரசு) அன்புக்கணவரும் விக்கினேஸ்வரன் (விக்கி), கேதீஸ்வரன் (கேதீஸ்), பகீரதி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் செந்தூரன் (செந்தா), கவிப்பிரியா (பிரியா) ஆகியோரின் மாமனாரும் அருட்சோதி (சோதி), வேதநாயகன் (வேதா) ஆகியோரின் மைத்துனரும் சாய்நாத், சாய்ராம் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2019) வெள்ளிக் கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பி.ப 1.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி. இராஜினிதேவி செல்வராஜா
(இளைப்பாறிய ஆசிரியர் புனித யாழ் கென்றியரசர் கல்லூரி)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும். இல 1A. அத்தப்பத்து மாவத்தை மற்றும் பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இராஜினிதேவி செல்வராஜா அவர்கள் 07.05.2019 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் ரோசம்மா தம்பதிகளின் புதல்வியும். கணபதிப்பிள்ளை செல்வராஜாவின் அன்பு மனைவியும். பிறேமினி (USA). அபிராமி (Uk). கௌசிகா ஆகியோரின் அருமைத் தாயாரும். சிவரூபன். புவனன். சுதர்சன். ஆகியோரின் மாமியாரும். துவாரகன். அபயன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை 11.05.2019 பகல் 10.00 மணி முதல் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. ஞாயிறு காலை 10.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று. மதியம் 01.00 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்

தொடர்பு: 0777758952, 0772724892

# யானை -சில சுவையான தகவல்கள்

யானை நாம் எல்லாரும் நேசிக்கும் விலங்கு. பெரிய கால் கள், அகன்ற காதுகள், துதிக்கை, தந்தம் என பார்ப்பதற்கு முரடாக இருந்தாலும், 'மதம்' பிடிக்கும் காலத்தை தவிர, மற்ற நேரங்களில் பரம சாது. இந்தோனேஷியா, மலேசியாவில் காணப்படும் யானைகள் மிகவும் குள்ளமானவை. யானையைப் பற்றிய மேலும் சில தகவல்கள்;

- நான்கு கோடி ஆண்டுகளுக்கு முன் நைல் நதிக்கரைகளில் மெயெரித்திரியம் என்ற விலங்கு தோன்றியது. அது ஒரு பன்றியின் அளவாக இருந்தது. அதில் இருந்து இன்றைய யானைகள் உருவாகியதாக உயிரியலாளர்கள் கூறுகின்றார்கள்.
- பூமியில் வாழும் விலங்குகளில் மிகவும் புத்திசாலியான விலங்கு யானை.
- யானை சுறுசுறுப்பானது அத்துடன் பெருந்தன்மை மிக்கது.
- யானையிடம் நீங்கள் அன்பு காட்டினால் அதனை எப்போதும் அது மறப்பதில்லை. பத்து, இருபது வருடங்கள் சந்திக்காமல் இருந்தாலும் அது உங்களை அடையாளங் கண்டு சந்தோஷப்படும்.
- மனிதனைப் போலவே யானைகளும் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்றன.
- யானை 22 மாதங்கள் கருவைச் சுமக்கிறது.
- மணிக்கு நாற்பது கிலோமீற்றர் வேகத்தில் யானைகளால் ஓட முடியும்.
- யானைக்குத் தும்பிக்கை தான் முக்கியமானது. இதன் மூலமே யானைகள் சுவாசிக்கின்றன. நீரை உறிஞ்சி வாய்க்குள் பீச்சிக் குடிக்கின்றன. தழைகளையும், குழைகளையும் ஒடித்து வாயில் போட்டுக் கொள்ளுகின்றன. அது மட்டுமல்ல சேற்றை வாரித் தமது முதுகில் போட்டுக்கொள்ளவும் தும்பிக்கைகளைப் பயன்படுத்து கின்றன.
- தண்ணீர் இருப்பதைசுமார் 5கிலோமீட்டர் தூரத்தில் வரும் போதே வாசனை மூலம் தெரிந்துகொள்ளும்.
- யானையின் பற்கள் சுமார் 5 கிலோ எடை வரை இருக்கும்.
- யானையானது 24 மணிநேரம் தண்ணீர் அருந்தவில்லை என்றால் உயிரை விட்டுவிடும்.
- தாய்லாந்து நாட்டின் தேசிய விலங்கு யானை.

## மரண அறிவித்தல்

### கனகசபாபதி கமலநாதன்



கொக்குவில் கிழக்கு நத்தாவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கு ஒஸ்கா லேனை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி கமலநாதன் கடந்த (08.05.2019) புதன்கிழமைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, பூமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை இராஜலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் பவானி கமலாவின் அன்புக்கணவரும் சிந்துஜன், நர்த்தனா, ஜீவனா, ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கனகேந்திரன், (அவுஸ்திரேலியா), உதயகுமார் (அவுஸ்திரேலியா), யோகமாலா, நீதிராசா (கனடா), கவிச்சந்திரன் (கனடா), ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மகேஸ்வரி (அவுஸ்திரேலியா), விஜயலட்சுமி (அவுஸ்திரேலியா), பரமநாதன், மதிவதனா (கனடா), நிலாஜினி (கனடா), செல்வராணி, சிவகுமார் (ஜேர்மனி), சிவயோகம், உதயகுமாரி, அனுஷா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஜன், கிதன், சிந்து ஆகியோரின் சித்தப்பாவும் மகிந்தன், அருணன், காருண்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்தனா, நிவேதிகா, நிதர்சனா, ரதன், லெனின், கெவின், ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஒஸ்கார் லேன்,
உரும்பிராய் தெற்கு. உரும்பிராய்

தகவல்: குடும்பத்தினர்.
0214915414

## ஆங்கிலத்திற்கு NO.1 பயிற்சி மையம்

உங்கள் ஆங்கிலப்புலமைக்கு ஓர் முழுமையான ஆங்கிலக்கற்கை நெறி

IELTS
• Unique Test Tips
• Latest course Materials

IELTS
Life Skills
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.




DIPLOMA IN ENGLISH
Spoken English

Dip.in English மற்றும் Spoken English கற்கைநெறிகளுக்கான மே மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | சண்டிலிப்பாய் |
|---|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 4.00 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Wed,Fri 9:30 a.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat, Sun 10.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m<br>Sat, Sun 3.30 p.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun 10.00a.m | Mon,Wed,Fri 10.00 a.m |

DMI COMPUTER EDUCATION

DMI COMPUTER EDUCATION

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி சயன்ஸ் ஹோல் அருகாமை<br>யாழ்ப்பாணம்<br>Tel.: 021-222 4403 | M.M.V.வீதி<br>நெல்லியடி<br>Tel.: 021-226 2470 | No.174 கண்டி வீதி, HNB வங்கி அருகில்<br>சாவகச்சேரி<br>Tel.: 021-227 0775 | No.130 K. K. S வீதி, NSB வங்கி அருகில்<br>சுன்னாகம்<br>Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக)<br>கிளிநொச்சி<br>Tel.: 021-228 5655 | சீரணிச்சந்தி<br>சண்டிலிப்பாய்<br>Tel.: 021-225 5556 |

**வீடு காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன் கொக்குவிலில் 2பரப்பு காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

**076 702 3565**

**தேவை**

கிழவம் கதியால் வேண்டும்.

**076 688 8366** (CS/23220)(11,17)

## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்
## பெறுகைகளுக்கான அழைப்பு

### பாதுகாப்பு சேவை - 2019/2020

1. தலைவர், வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள அலுவலகங்களுக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்வி தாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | பெறுகை இல. | சேவையின் விவரம் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01. | NP/30/02/02/SS/2019 | பாதுகாப்பு சேவை | 60,000.00 |

2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - a) கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - b) அத்துடன், பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சினுடைய அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - c) அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை **ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாள்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளர் அலுவலகத்தில் பரிசீலிக்க முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **ஆணையாளர், வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சிஅமமன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் வேலை நாள்களில் 10.05.2019 ஆம் திகதி தொடக்கம் 23.05.2019 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.1000.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
7. கேள்வி ஆவணங்கள் 24.05.2019 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு முன்பதாக **ஆணையாளர், வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. சகல கேள்விகளுடனும் ரூபா. 60.000.00 பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலை கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தி.விஸ்வரூபன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி :- 021-205-7102 தொலைநகல் 021-205-7103** (IN/10135)(11,17)

## மரண அறிவித்தல்
# வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்



பிறப்பு 03.04.1934 இறப்பு 07.05.2019

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் கடந்த (07.05.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் செல்வகுமார் (லண்டன்), திருவருட்செல்வி (பிரான்ஸ்), காலஞ்சென்ற திலகவதி, மஞ்சுளா (நீர்வேலி), சாந்தகுமார் (பிரான்ஸ்), கிருஷ்ணகுமார் (சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்புத்தந்தையும் தட்சிணாமூர்த்தி, புவனேஸ்வரி, மணிமேகலை மற்றும் காலஞ்சென்றவர்களான திருப்பரஞ்சோதி , பூபாலசிங்கம், சின்னத்தம்பி, அசலாம்பிகை, நகுலாம்பிகை, கனகாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் அருளானந்தம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மைதிலி (லண்டன்), சுதாகரன் (பிரான்ஸ்), அஞ்சலோரவீன் (நீர்வேலி), மயூரா (பிரான்ஸ்), நிசாந்தினி (சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்தன், கிந்துசன்,நிதுசா, நிதுசன், கீர்த்தனா, தீபனா, அனோஜன், அயேதன், அயிந், அஷ்விதா, வவுஷா, சபீனியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்வேலி மேற்கு,நீர்வேலி** **தகவல்: குடும்பத்தினர்**

**077 839 8695, 077 662 3777**

# சிரிப்பு

**ஒரு நேர்காணலின் போது...**

மேலாளர்: நான் சொல்றதுக்கு எதிர் வார்த்தையைச் சொல்லுங்க..!
பையன்: சொல்லுங்க நான் முயற்சி செய்கிறேன்..!
மேலாளர்: நல்லது...!
பையன்: கெட்டது...!
மேலாளர்: நான் இன்னும் ஆரம்பிக்கவில்லை
பையன்: நான் இப்போது தான் ஆரம்பித்தேன்!
மேலாளர்: இல்லைங்க...
பையன்: ஆமாங்க..!
மேலாளர்: நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டிங்க...
பையன்: நீங்க சரியா புரிஞ்சுகிட்டிங்க..!
மேலாளர்: பேச்சை நிறுத்து...
பையன்: தொடர்ந்து பேசு..!
மேலாளர்: இப்போ வாயை மூடுறியா இல்லையா...
பையன்: இப்போ பேசுறியா இல்லையா..!
மேலாளர்: நிறுத்துடா... எல்லாத்தையும்...
பையன்: தொடங்குடா... எல்லாதையும்...!
மேலாளர்: வெளியே போ...
பையன்: உள்ளே வா..!
மேலாளர்: யு ஆர் ரிஜக்டட்...
பையன்: ஐ ஆம் செலக்டட்...!

## Chundikuli Girls' College Jaffna

Applications are invited from qualified candidates for the post of Teacher of Economics.

**Requirements:**

* **Should possess a degree in the relevant field.**
* **Should be able to teach Economics for A/L English and Tamil Medium classes and History and Citizenship Education for Grs. 6 -11.**

Salary is negotiable and will commensurate with qualifica tions and experience.

Apply before 20 th May 2019 with the names of two non - related referees.

Only shortlisted candidates would be called for an interview.

**Principal**
**Chundikuli Girls' College,**
**Jaffna.**
**E.mail: forwardcgc@yahoo.com** (in.10137)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 11 . 1940



மறைவு 10 . 04 . 2019

# சத்தியபாமா பாலகிருஷ்ணன்
## (பேபி அக்கா)

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும், நேரிலும் தொலைபேசி மூலம் மற்றும் சமூகவலைத் தளங்களுடாகவும் அனுதபாத்தை தெரிவித்ததுடன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்தவர்க்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (10.05.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**காங்கேசன்துறை வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(CS/23449)(11,17)

## லேலையாள்கள் தேவை

ஆடை உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு கணினி, ஆங்கிலம் தெரிந்த HNDA/HNDM/AAT/CIMA/ Chartered Following தகுதி உடைய உதவிக்கணக்காளர் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**தொடர்பு - 077 470 1495**



**யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2019**

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரியின் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.
(விண்ணப்பங்களுடன் தகைமை சான்றிதழ்களின் பிரதியினை இணைத்து அனுப்பி வைக்கவும்)

**01. பதவி : நூலக உதவியாளர்** (Asst. Librarian) ஒப்பந்த அடிப்படை
**தகைமை:**
i) கல்விப்பொதுத்தராதர (சா/த) சித்தி 6 பாடங்கள்
ii) கல்விப் பொதுத்தராதர (உ/த) சித்தி
iii) 2 வருட துறைசார் அனுபவம்
iv) நூலக விஞ்ஞான பாடம் கற்றிருத்தல் விரும்பத்தக்கது
**வயது எல்லை :** 10.05.2019 அன்று 21 வயதுக்கு குறையாமல் 45 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
மாதாந்த கொடுப்பனவு: 19,700/=

**02. பதவி: சாதாரணதொழிலாளி** (Office Labourer) ஒப்பந்த அடிப்படை
**தகைமை :**
ஆண்டு 8 சித்தி
**வயது எல்லை :** 10.05.2019 அன்று 18 வயதுக்கு குறையாமல் 45 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
மாதாந்த கொடுப்பனவு: 16,330/=

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 24.05.2019 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் - 2019"** எனக்குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-**
தலைவர், வட இலங்கை சுதேச மருத்துவ சபை
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி,
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.



**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1567 | சீட்டிழுப்பு திகதி 09.05.2019
வெற்றி இலக்கங்கள் 22 31 32 70 Q
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.30, 670, 280/=

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 605
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.05.09
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,000,000/-
வெற்றி இலக்கங்கள் 01 10 15 68 R
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**ராசி அதிர்ஷ்டம்**
திகதி 09.05.2019 | வெற்றி வாரம் 2514 | வர்ணம் கபிலம்
இடபம்
வெற்றி இலக்கங்கள் 19 20 22 32
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,012,926 /=
10.05.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



**உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய **அந்தோணிப்பிள்ளை இராசதுரை தேவதாசன்** அவர்கள் கடந்த 05.04.2019 **யா/ பூம்புகார் அ.த.க. பாடசாலையில் பதில் அதிபராகப்** பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் இவர் கல்விச் சேவையில் பல பட்டங்களைப் பெற்று வாழ்வில் சிறந்து விளங்கிட உளமார வாழ்த்துகின்றோம்.



A.R. தேவதாசன்
(BA, PGDE, Med, SLPS III)

**வாழ்த்துவோர் :-** ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்


*பள்ளிவாசல்களில்...*

பற்றப்படும் ஆயுதங்கள் தொடர்பான காட்சிகளை வெளியிடாத வகையில் ஊடகங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக கைப்பற்றப்படும் ஆயுதங்களை காண்பிப்பதனை தடை செய்து மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

பாடசாலைகளுக்கு மாணவர்களை வரவழைப்பதற்காகவே இவ்வாறாக ஊடக தடைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக பிள்ளைகளின் உயிருடன் விளையாட வேண்டாம். பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பக்கூடிய வகையில் பெற்றோர் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய வகையிலான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதனை தவிர்த்து ஆயுதங்களை ஊடகங்களில் காட்சிப் படுத்துவதனை தடைசெய்து நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது. இதனால் கல்வி அமைச்சர் பாடசாலைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு தரப்பினர் அதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதனால் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புமாறு அடிக்கடி கூறுகின்றார். எவ்வாறாயினும் அரசால் வழங்கப்படும் உறுதி மொழியை ஏற்றுக்கொள்வதற்கு மக்கள் தயாராக இல்லை. நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்ற நம்பிக்கையை மக்களிடையே ஏற்படுத்த முடியாது போயுள்ளது - என்றார்.

(ம-31)


**தேவை**

உரும்பிராயில் சைவ வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிக்க இந்து பெண் பராமரிப்பாளர்கள் தேவை. பகுதி நேர பராமரிப்பாளர்களும் வீட்டில் இருந்து பராமரிக்க விரும்புவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(CS/25221)(1.17) **077 276 5413**
**இராசலிங்கம் இந்திராணி**



# P.P.T EXPRESS

# இரவு பகல் சேவை




| | | |
|---|---|---|
| பருத்தித்துறை | - | 7:00 A.M |
| யாழ்ப்பாணம் | - | 8:00 A.M |
| வெள்ளவத்தை | - | 7:00 A.M |
| கொட்டாஞ்சேனை | - | 8:00 A.M |

**Colombo - Jaffna Buss Services**
**International Parcel Service**

HOTLINE Colombo - 077 575 5175, 076 440 8951 Jaffna - 077 573 1318, 076 440 8947

## ஆறுதல் சொல்ல ஒன்றும் இல்லை ஐயா!



விடுமுறையைக் கொண்டாட
வீட்டை விட்டுப் புறப்பட்டவன்
எத்தனையோ நாடிருக்க
இலங்கைக்கு ஏன் வந்தான்

ஈழத்தின் பேரழகை
இணையத்தில் பார்த்திருப்பான்
அமைதியான தேசமென்று
அடிமனதில் நினைத்திருப்பான்

கடற்கரையில் குளிக்கலாம்
காற்று வாங்கிக் களிக்கலாம்
மலைத்தொடரை ரசிக்கலாம்
மழைத்துளியைப் பிடிக்கலாம்

மனைவியோடு பிள்ளையை
மகிழ்வித்துச் சிரிக்கலாம்
என்றெல்லாம் எண்ணியே
இலங்கைக்கு வந்திருப்பான்

குருவியோடு குஞ்சுதனைக்
கூட்டிக் கொண்டு வந்தவனை
குலைத்துவிட்ட மாபாதகரே
கொதிக்குதையா என் மனது

கொண்டு வந்த உறவுகளைக்
குண்டு தின்று போனதனால்
கண்டு வந்த கனவெல்லாம்
கண்ணீராய்ப் போனதனால்

நேற்றுவரை இவனுக்கு
நிலவாகத் தெரிந்த பூமி
ஈனர்களின் வன் செயலால்
இடுகாடாய்த் தெரிந்திருக்கும்

இதற்கு மேலும் எழுதினால்
என்விழி நீர் வடிந்தே
என் எழுத்து மறைந்துவிடும்

மண்டியிட்டுக் கேட்கின்றோம்
மன்னித்து விடும் ஐயா..!




## விஜய்சேதுபதியின் அடுத்தபடம் சங்கத்தமிழன்

'வாலு', `ஸ்கெட்ச்' ஆகிய படங்களை இயக்கியவர் விஜய் சந்தர். இதைத் தொடர்ந்து விஜய் சேதுபதியை வைத்து `சங்கத்தமிழன்' என்ற படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். இந்தப் படத்தின் முதல் சுவரொட்டி தற்போது வெளியாகி உள்ளது.

இதில் முறுக்கு மீசையுடன் வித்தியாசமான தோற்றத்தில் விஜய் சேதுபதி உள்ளார். விஜய் சேதுபதி நடிப்பில் அடுத்ததாக `சிந்துபாத்', 'மாமனிதன்' என இரு படங்களும் ரிலீசுக்குத் தயாராக உள்ளது. இதற்கு நடுவே எஸ்.பி.ஜனநாதன் இயக்கும் 'லாபம்' படத்திலும் நடித்து வருகிறார்.







## twitter

mohanram.ko@mohanramko
கடமையை செய்
இன்க்ரீமென்ட்
எதிர்பார்க்காதே

Gurubaai@ItsGurubaai
பெண்ணின் வெட்கத்தை விட
ஆயிரம் மடங்கு அதிர்வலைகளைக்
கொண்டது ஒரு ஆணின் வெட்கம்



உள்ளூராட்டக்காரன்@shivaas_
ஒருத்தரை கலாய்க்கிறப்ப வர்ற
சந்தோஷம், நம்மை ஒருத்தர்
புகழும் போது கூட வராது..!

ச ப் பா ணி@manipmp
போனில் ஹலோ னு
சொன்னால்,பதிலுக்கு
ஹலோனு சொல்லாம
சொல்லு னு சொல்பவன்
எல்லாம் நம்மூர்க்காரங்கதான்

ச ப் பா ணி@manipmp
தானத்திலே சிறந்த தானம்
"சார்ஜர் தானம்!

காளையன்@Aruns212
இரண்டு மனம் 'வேண்டும்'
என்பதன் கொஞ்சம்
லேட்டஸ்ட் வெர்ஷன் தான்
'இரண்டு சிம்கார்டு வேண்டும்'
என்பது.

உள்ளூராட்டக்காரன்
கடுப்புன்னா என்னான்னு
தெரியுமா? நமக்கு பிடிச்ச டீம்
விளையாடுற அன்னைக்கு,
பாக்குறதுக்கு எல்லா வகையிலும்
நாம தயாரா இருக்கும் போது நம்ம
டீம் கேவலமா விளையாடுறது.



தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பயங்கரவாதத்தை அடியோடு நிராகரித்த முஸ்லிம்கள்!

இதற்குப் பிற்பாடும் இவ்வாறு மிலேச்சத்தனமான, படுமோசமான இந்தச் சமூகத்தின் நற்பேருக்குக் களங்கம் ஏற்படுத்துகின்ற வகையிலே ஈனத் தனமான தாக்குதலில் ஈடுபட்ட கும்பலைப் போன்றொரு கும்பல் எங்களுக்கு உள்ளே தலைஎடுத்துவிடக்கூடாது. அதை முழுமையாகக் களைபிடுங்க வேண்டும் என்கிற முயற்சியில் நாங்கள் எல்லோரும் முழு நம்பிக்கையோடு ஈடுபட்டிருக்றோம் என்று உறுதி கூறவிரும்புகிறோம்.

இது பயங்கரவாதத்தை முற்றாக மறுத்து இலங்கை மக்களுக்கு முஸ்லிம் சமூகத்தினர் விடுத்த அறிவிப்பு. உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் முஸ்லிம் மக்களின் நிலைப்பாட்டை விளக்கும் வகையில் கொழும்பில் முஸ்லிம் தலைவர்கள் கூடி நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

சந்திப்பில் கலந்துகொண்ட முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கண்ட கருத்துக்களை ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்டது ''ஈனத் தனமான'' குண்டு வெடிப்புக்கள் என்று கூறியதன் மூலம் தீவிரவாதச் சிந்தனைகளுக்குத் தமது சமூகத்தில் இடமேயில்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் முஸ்லிம் தலைவர்கள். இந்த விடயத்தில் அவர்கள் செய்திருக்கக்கூடிய, மிக மிகச் சிறப்பான இதைவிட வேறாக இருக்க முடியாது.

பயங்கரவாதத்தையும் படுகொலைகளையும் அடியோடு நிராகரித்ததன் மூலம் பயங்கரவாதிகளுக்கு மிக உறுதியான செய்தி ஒன்றையும் வழங்கியிருக்கிறது முஸ்லிம் சமூகம். இத்தகைய செயல்களைத் தாம் ஒருபோதும் ஆதரிக்கப்போவதில்லை என்கிற உறுதியான செய்தி, இனியும் பயங்கரவாதத்தை முன்னெடுத்துவிட முடியும் என்று நம்பக்கூடிய வர்களுக்கு விழுந்த மிகப் பெரும் அடி.

பயங்கரவாதத்தை நிராகரித்ததோடு மட்டும் நின்றுவிடாமல், உயிர்த்த ஞாயிறு போன்றதொரு தாக்குதலை நடத்தக்கூடிய கும்பல் மீண்டும் முஸ்லிம் சமூகத்திடையே எழுச்சி பெற்றுவிடாமல் இருப்பதை தாம் உறுதிப்படுத்துவோம் என்கிற உறுதிமொழியையும் முஸ்லிம் சமூகம் இலங்கை மக்களுக்குத் தந்திருக்கிறது.

நீரின்றி மீன்கள் வாழ முடியாது என்பதைப் போலவே முஸ்லிம் மக்களின் ஆதரவின்றி தீவிரவாதக் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்வதும் அதன் மத்தியிலிருந்து பயங்கரவாதச் செயல்களை முன்னெடுப்பதும் சாத்தியமானதல்ல. முஸ்லிம் சமூகம் தனது இந்த வாக்குறுதியை ஏற்கனவே செயல் வடிவத்திலும் காட்டியிருக்கின்றது. சாந்தமருதுவில் பயங்கரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் தங்கியிருந்த வீடு பற்றிய தகவல்களைப் பொலிஸாருக்கு வழங்கியதன் மூலம் பயங்கரவாதத்தைத் தாம் ஒருபோதும் ஆதரிக்கப்போவதில்லை என்கிற உறுதியான செய்தியை முஸ்லிம்கள் இலங்கை மக்களுக்கு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

நாட்டடின் தற்போதைய சூழலில் முஸ்லிம்களைப் பாதுகாக்கவும் இலங்கையைப் பாதுகாக்கவும் முஸ்லிம்கள் செய்திருக்கக்கூடிய மிகப் பெரும் அர்ப்பணிப்பு இது. இதனைப் புரிந்துகொண்டு நடக்க வேண்டியது அரசினதும் அரசபடையினரதும் தலையாய கடமை. முஸ்லிம்கள் நீட்டியிருக்கக்கூடிய கரங்களைப் பற்றிக்கொண்டு இலங்கையை நிரந்தரமான அமைதியை நோக்கி அழைத்துச் செல்வது இனிச் சிங்கள, தமிழ்த் தலைவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

சரியான வாய்ப்புக்களைப் பயன்படுத்தத் தவறுவதில் மன்னர்களான இலங்கைத் தலைவர்கள் முஸ்லிம்கள் வழங்கியுள்ள இந்த வாய்ப்பையும் வீணடித்துவிடாமல் அதனை உரிய முறையில் பயன்படுத்தி அனைத்து மக்களுக்கும் நன்மையை ஏற்படுத்துவதற்கு முன்வரவேண்டும்.

# பெயரளவு ஆட்சியாளர்களால் அப்பாவி மக்களுக்கு பாதிப்பு

சேரலாதன்



ஐ.எஸ்.ஐ.எஸின் கேந்திர நிலையமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி விளங்கியமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். முகாம் கண்டறியப்பட்டுள்ளது.
காத்தான்குடி முஸ்லிம் சமூகத்தினர் வாழுகின்ற பிரதேசம். கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா வின் கோட்டை. தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறும் வரையில் இந்த முகாம் தொடர்பான தகவல்கள் பொலிஸாருக்கும் புலனாய்வாளர்களுக்கும் எட்டாமல் இருந்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது.

### கல்வியியல் பாதிபப்பு

விடுதலைப்புலிகளும் பெரிய முகாம்களையும் பயிற்சித் தளங்களையும் அமைத்துச் செயற்பட்டனர். ஆனால் அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே இவை அமைந்திருந்தன. இவை தொடர்பான விவரங்கள் வெளியில் கசியாதவாறு பாதுகாக்கப்பட்டன.
உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதல்களில் ஒன்றுமறியாத அப்பாவி மக்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இந்தியாவின் றோ உளவு அமைப்பும் குண்டுத் தாக்குதல் தொடர்பாக அறிந்திருந்ததாகத் தெரிய வருகின்றது. இந்த நாட்டின் புலனாய்வாளர்க ளுக்கு ஏற்கனவே இந்த விடயம் தொடர்பாகத் தெரியாமல் போனதற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டியது அரசின் முக்கிய கடமையாகும்.
நாட்டின் இயல்பு நிலை இன்னமும் திரும்பாத நிலையிலேயே காணப்படுகின்றது. பாடசாலைகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்பி வைப்பது தொடர்பாக பெற்றோர் ஒரு உறுதியான முடிவை எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர். தெற்கில் மட்டுமல்லாது வடக்கிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது. இங்கு பொலிஸார் பாடசாலைகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர். சில பெரிய பாடசாலைகளின் பாதுகாப்புக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையான பெற்றோர் தினமும் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. தாக்குதல்கள் தொடர்பான அச்ச நிலை காரணமாகப் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டு விடுவோமென பெற்றோர்கள் கவலை கொள்வதையும் காண முடிகின்றது.



### குண்டுத் தாக்குதலின் எதிரொலியா வன்முறைகள்

குண்டுவெடிப்புக்களின் எதிரொலியாக நீர்கொழும்பில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் பள்ளிவாசல்களில் தஞ்சம் அடையும் அளவுக்கு நிலமை அங்கு மோசமாகிக் காணப்பட்டது. பொலிஸார் மற்றும் படையினர் பார்த்துக்கொண்டிருக்க வன்முறையாளர்கள் தாக்குதல்களில் ஈடுபட்டதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.
தமிழர்களுக்கு எதிரான கலவரங்களின் போது இதே நிலைதான் காணப்பட்டது. நாட்டின் வேறு பகுதிகளுக்கும் வன்முறைச் சம்பவங்கள் பரவுவதைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளை அரசு மேற்கொள்வது அவசியமானதாகும்.
நாட்டின் தற்போதைய சூழலில் தமிழ் இளைஞர்களுக்குத் தொல்லை கொடுப்பது நல்லதல்ல என்பதே பலரது அபிப்பிராயமாகும்.

> யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சோதனை நடத்திய படையினர் மாணவர்கள் இருவரையும் சிற்றுண்டிச்சாலையை நடத்தி வந்தவரையும் கைது செய்தனர். இவர்கள் தற்போது நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கைதுகள் தொடர்பாகப் பல்வேறு மட்டங்களிலும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை வழங்குவதில் தவறு விடுகின்ற எந்தவொரு நாட்டிலும் அமைதி நீடித்ததாகச் சரித்திரம் கிடையாது. தமது உரிமைகள் பறிக்கப்படும்போது அந்த இனத்தவர்கள் கிளர்ந்தெழுவது இயல்பானதொரு விடயமாகும். நீண்டதொரு போர் இடம்பெற்று முடிந்த பின்னரும் தமிழர்கள் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் விரக்தியுடன் வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம் மக்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டதை மறந்து விடமுடியாது. ஆட்சியாளர்கள் பிரச்சினை கள் வந்ததன் பின்னர் தீர்வு காண்பதை விடுத்து அவை வராமல் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கையாள வேண்டும். இனவாதம், மதவாதம் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது.
வெறுமனே பெயரளவுக்கு மட்டுமே ஆட்சியில் இருப்பவர்களால் அப்பாவி மக்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ முடியாது.

## குருநாகலில் 108 பேர் கைது; அவர்களிடம் விசாரணைகள்!

கொழும்பு, மே 10
குருநாகல் மாவட்டத்தில் 356 முஸ்லிம் கிராமங்களில் 108 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கைதானோரில் 44 பேர் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன் நேற்றும்நேற்றுமுன்தினமும் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## சீனா செல்கிறார் அரச தலைவர்!


கொழும்பு, மே 10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் சீனா செல்லவுள்ளார்.
15ஆம் திகதி பீஜிங்கில் நடைபெறும் நிகழ் வென்றில் உரையாற்றவுள்ள அரச தலைவர், பின்னர் அந்த நாட்டின் முக்கிய தலைவர்களை சந்திக்கவுள்ளார். இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களையடுத்து சீன முதலீடுகளில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் அரச தலைவரின் இந்தப் பயணம் முக்கியத்துவம் மிக்கதாகப் பார்க்கப்படுகின்றது. (ம)

# ஞானசாரதேரரை உடன் விடுவிக்கக் கோரிக்கை

*தவறின் போராட்டம் வெடிக்கும் என்றும் எச்சரிக்கிறது பொதுபலசேனா அமைப்பு*

கொழும்பு, மே 10
வெசாக் பண்டிகையின்போது பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரரை விடுவிக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்த பொதுபலசேனா, அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களை அணிதிரட்டி போராட்டத்தை முன்னெடுப்போம் என்றும் எச்சரித்தது.

ராஜகிரியவில் பொதுபலசேனாவின் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அந்த அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் விதாரந்தெனிய நந்த தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிரச்சினையை ஏற்படுத்தி ஞானசாரதேரரை விடுதலை செய்ய வைப்பது எமது எதிர்பார்ப்பல்ல. ஆனால் ஞானசார தேரரின் விடுதலை தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முன்பாக அவரின் விடுதலை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அரச தலைவரின் பொறுப்பாகும் என்றார். (ம)


ஞானசார தேரர்.

## வருந்துகிறோம்

உதயன் பத்திரிகையின் நேற்றைய பதிப்பின் 11ஆம் பக்கத்தில் ஒளிப்படமொன்று தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 'பாரம்பரிய உணவகத்தால் காரைநகர் வாசிகளுக்குப் பயன்' என்ற தலைப்புடன் தொடர்புடைய செய்தியுடன் வெளிவர வேண்டிய ஒளிப்படம், 'கொல்லப்பட்டவர்களின் 21ஆம் நாள் நிகழ்வுகள்' என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்கு உதயன் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றான். (ம)

## விற்பனை நிலையத்தில் தீ விபத்து பெறுமதியான பொருள்கள் எரிந்தன

வவுனியா, மே 10
அழகுசாதனப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.
வவுனியா கடைவீதியில் அமைந்துள்ள விற்பனை நிலையத்திலேயே நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
குறித்த நிலையம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது. எனினும் தீயணைப்பு பிரிவினர், பொலிஸார் மற்றும் அப்பகுதியில்நின்றிருந்தவர்களின் முயற்சியால் தீ ஒரு மணி நேரத்துக்குள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இதனால் ஏனைய வர்தகநிலையங்களுக்கு தீ பரவாமல் தவிர்க்கப்பட்டது.
இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-110)

*தெகியத்தகண்டிய பாடசாலைக்கு*
## அநாமதேயக் கடிதத்தால் மாணவர் வரவில் வீழ்ச்சி

பதுளை, மே 10
தெகியத்தகண்டிய சிங்கள தேசிய பாடசாலை அதிபருக்கு கிடைக்கப்பெற்ற அநாமதேயக் கடிதத்தையடுத்து, பாடசாலையின் மாணவர் வரவு, வெகுவாகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
760 மாணவர்கள் கற்கும் இந்தத் தேசிய பாடசாலையில் நேற்று 12 மாணவர்கள் மட்டுமே சமுகமளித்திருந்தனர். அந்தக் கடிதத்துக்கு உரிமைகோரும் கையெழுத்திடும் பகுதியில் 'தேசிய பாடசாலையின் நலன் விரும்பி' என்று எழுதப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
தெகியத்தகண்டிய சிங்கள தேசியபாடசாலைக்கும், தெகியத்தக்கண்டிய வாராந்த சந்தைத் திடலுக்கும், தேசிய தௌஹீத் அமைப்பினால் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்போவதாக, தனக்குத் தகவல் கிட்டியுள்ளது என்றும் அந்தத் தகவலை அறிந்ததும், பாடசாலை அதிபராகிய உங்களது கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
'இந்தப் பாடசாலைக்கு நேற்று (நேற்றுமுன்தினம்) 565 மாணவ, மாணவிகள் சமூகமளித்திருந்தனர். அநாமதேயக் கடிதத்துக்குப் பிறகு 12 மாணவர்கள் மட்டுமே இன்று (நேற்று) பாடசாலைக்கு வந்தனர். இது குறித்து தெகியத்தக்கண்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் அறிவித்துள்ளேன். தற்போது பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கின்றது' என்றார். அநாமதேயக் கடிதத்தை எழுதியவரைக் கண்டுபிடிக்க நடவடிக்கை இடம்பெறுகிறது என்று பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (கு)

## வெற்றிலைக்கேணி பகுதியில் படையினரால் ஒருவர் கைது!

*மர்மப் பொருள் பற்றி அறிவிக்கவில்லையாம்*

யாழ்ப்பாணம், மே 10
வெற்றிலைக்கேணியில் ஒரு வீட்டில் குண்டு போன்ற மர்மப் பொருள் ஒன்றை மீட்டோம் என்று தெரிவிக்கும் படையினர், அது பற்றித் தமக்கு அறிவிக்கவில்லை என்றுகூறி அங்கிருந்த கூலித் தொழிலாளியைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது.
அதே இடத்தைச் சேர்ந்த பழனி என்பவரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த வீட்டில் நீண்ட நாள்களாக உரிமையாளர்கள் இல்லை என்பதை காரணங்காட்டி வீட்டில் போதைப் பொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் முப்படையினர் தேடுதல் நடத்தினர். சந்தேகிக்கக்கூடிய வகையில் எவையும் காணப்படவில்லை. வளாகத்தில் தேடுதலில் ஈடுபட்டனர்.
அங்கு வேலை செய்யும் பழனி, வளவைத் துப்புரவாக்கும்போது பழுதடைந்த குண்டு போன்ற மர்மப் பொருள் ஒன்று காணப்பட்டது என்றும் அதனை வேலியோரமாக வீசியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
அதனையே படையினர் மீட்டனர். தொழிலாளியையும் கைது செய்தனர். குண்டு போன்ற மர்மப் பொருள் இருந்தது பற்றி தமக்கு ஏன் கூறவில்லை என்றே அவரைக் கைது செய்தனர் என்று படையினர் கூறியுள்ளனர்.
அவர் மேலதிக விசாரணைக்காக பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இது பற்றி வீட்டு உரிமையாளரின் மகனிடமும் பளைப் பொலிஸார் வாக்கு மூலம் பதிவுசெய்துள்ளனர்.
ஆனால் வெற்றிலைக்கேணியில் வீடும் அதனை அண்டிய பரந்த பகுதியிலும் மக்கள் மீள்குடியமர முன்னர் இராணுவத்தினரே கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். தற்போதும் அந்த வீட்டுக்கு முன்பாகக் கடற்படைத் தளம் அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (கு-70)

## பாதுகாப்பு நிலமைகள் சீரானால் 14ஆம் திகதியன்று பாடசாலை!

கொழும்பு, மே 10
நாட்டின் பாதுகாப்பு நிலமைகள் சீரானால் எதிர்வரும் 14ஆம் திகதி கத்தோலிக்க பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் என்று பேராயர் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.
பல்வேறு பாடசாலைகள் கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள போதிலும், கத்தோலிக்கப் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த நிலையிலேயே இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.
பேராயருக்கும் அரச தலைவருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றைய தினம் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பு முடிந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். திடீரென செல்வந்தர்களாக மாறிய அரசியல்வாதிகள் குறித்து விசாரணை அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

## கிங்ஸ்பெரி விடுதி தற்கொலைதாரியின் வாகனத்தில் பயணித்தார் அந்தோனியார் ஆலய தற்கொலைதாரி

கொழும்பு, மே 10
கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தற்கொலை குண்டுதாக்குதலை மேற்கொண்டவர் கிங்ஸ்பெரி ஹோட்டலில் தாக்குதலை மேற்கொண்டவரின் வாகனத்தில் தேவாலயத்துக்கு வந்தார் என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது என்று இலங்கை குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ள னர்.
குற்றப்புலனாய்வு பிரிவினர் தங்கள் விசாரணைகள் குறித்த விவரங்களை நீதிமன்றத்துக்கு நேற்று வழங்கினர். இதன்போதே கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தாக்குதலை மேற்கொண்டவர் அந்த இடத்துக்கு எவ்வாறு வந்தார் என்ற விவரத்தை குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
குறிப்பிட்ட பகுதியில் கிடைக்கப்பெற்ற மறைகாணி காட்சிகளை ஆராய்ந்த வேளை தாக்குதலுக்கு மறுநாள் கொச்சிக்கடையில் தேவாலயத்துக்கு அருகில் வெடித்த வாகனத்திலேயே முதல் நாள் தற்கொலை குண்டுதாரி வந்துள்ளமை தெரியவந்துள்ளது என்று சிஐடியினர் மேலும் தெரிவித்தனர். (ம)

# மாநகர சபையின் கம்பங்கள் ஊடாகவே கேபிள் இணைப்பு

## சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாண மாநகர சபையின் மின் கம்பங்களின் ஊடாக மட்டுமே கேபிள் இணைப்புகள் வழங்கமுடியும். தனியார் எவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்று யாழ்ப்பாண மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாநகர சபையின் இந்த வருட 5ஆவது அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் சட்டவிரோதமாக மின் கம்பங்கள் நடப்பட்டன. அதனை மாநகர சபை அகற்ற முற்பட்ட நிலையில் இது தொடர்பில் நீதிமன்றிலும் வழக்கு நடைபெற்று வருகின்றது.

இந்த்நிலையில் ஒரு நிறுவனத்துக்குக் கம்பம் நட அனுமதி வழங்கினால் கம்பம் நட விண்ணப்பிக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் கம்பம் நட அனுமதிக்கவேண்டும். அதில் 4 அல்லது 5 நிறுவனங்கள் கம்பம் நட வந்தால் ஒவ்வொன்றுக்கும் அனுமதி வழங்குவதா என்றும் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கேபிள் கம்பங்களை நடுவதற்கு கடந்த ஜூலைமாதம் 'ஆக்ஸ் மீடியா' நிறுவனமும் கடந்த நவம்பரில் 'ரைமாஸ்' நிறுவனமும் யாழ்ப்பாண மாநகரசபையிடம் அனுமதிக்கு விண்ணப்பித்திருந்தன.

கடந்த ஜனவரியில் 'ரைமாஸ்' நிறுவனத்தினரால் அனுமதி பெறப்படாமல் சட்டவிரோதமாகக் கம்பங்கள் நடப்பட்டன. அதனை யாழ்ப்பாண மாநகரசபை அகற்ற முற்பட்டது. அதற்கு முன்னர் விண்ணப்பித்த 'ஆக்ஸ் மீடியா' நிறுவனத்தின் மின்கம்ப உற்பத்தி நிறுவன வேலைத் தளத்தை யாழ்ப்பாண மாநகர சபையின் பொறியியல் பிரிவினர் சென்று ஆராய்ந்தனர்.

அது குறித்து நேற்றுமுன்தினம் குறிப்பிட்ட தலைமைப் பொறியியலாளர், குறித்த நிறுவனத்தினர் பொது மின் கம்பத்தில் தமது கேபிள்களைப் பொருத்த இணக்கம் வெளியிட்டிருக்கவில்லை. தொழில் போட்டி காரணமாக மற்றைய நிறுவனத்தினர் குந்தகம் விளைவிக்கக் கூடும் என்று அஞ்சுகின்றனர் என்று தெரிவித்தனர் என்று குறிப்பிட்டார்.

எனினும் இதனை ஏற்க முடியாது என்று தெரிவித்த மாநகர சபையினர், சபையின் கம்பத்தின் ஊடாகவே இணைப்புக்களைப்பொருத்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.

"இவை குறித்து ஆராய்ந்தேன். போட்டி காரணமாக ஒருவருடைய இணைப்புக்கு மற்றையவர் குந்தகம் விளைவித்தால் அதற்கெல்லாம் யாழ்ப்பாண மாநகர சபை பொறுப்புக்கூறிக் கொண்டிருக்கமுடியாது.

எனவே தனித்தனியாக கம்பங்கள் நட அனுமதி வழங்குவதே சரியானது" என்று முதல்வர் தெரிவித்தார்.

எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் கிருபாகரன் அதனை மறுதலித்து கருத்துக்கள் தெரிவித்தார்.

"நிறுவனம் ஒன்று நடும் கம்பங்கள் அனைத்தும் இலங்கை மின்சார சபையால் சேதமடைந்தவை எனக் கழித்துவிடப்பட்ட மின் கம்பங்களே. இவற்றால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு யார் பொறுப்பேற்பது? பதிலாக சபை திண்மக் கழிவுப் பொறிமுறையை நடைமுறைப்படுத்த கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ள நிலையில் கேபிள் கம்பங்களைச் சேதமாக்குவோர் குறித்தும் கண்காணிக்க முடியும். எனவே யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் கேபிள்களுக்கான மின்கம்பங்களை யாழ்ப்பாண மாநகர சபையே நட வேண்டும்" என்றார்.

அதையடுத்து அனைத்துக் கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்களும் யாழ்ப்பாண மாநகர சபையின் மின்கம்பத்திலேயே தமது கேபிள்களைப்பொருத்தவேண்டும் என்று சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-105)



# கல்லுண்டாய் குப்பை மேட்டில் ஒரே ஒரு ஆழ்துளைக் கிணறே

## மாநகர சபை த்ன்னிலை விளக்கம்

யாழ்ப்பாணம்,மே 10

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் குப்பை மேட்டடியில் ஒரே ஒரு ஆழ்துளைக் கிணறு மட்டுமே அவரச தேவைக்குப் பயன்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது. நான்கு கிணறுகள் அமைக்கப்பட்டது என்பது தவறானது என்று யாழ்ப்பாண மாநகர சபை தன்னிலை விளக்கம் அளித்துள்ளது.

குப்பை மேட்டில் ஏற்படும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக கல்லுண்டாய் திண்மக் கழிவு மேட்டில் யாழ்ப்பாண மாநகரசபையால் 4 ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கப்பட்டன.

கல்லுண்டாய் வெளியிலுள்ள குப்பை மேட்டில் இருவாரங்களுக்கு முன் பிடித்த தீயை அணைப்பதற்குத் தேவையான தண்ணீரை உடனடியாகப் பெற முடியாததால் தீயணைப்பதில் கால தாமதம் ஏற்பட்டது.

குப்பை மேட்டில் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகளாலும் அயல் கிராமங்களிலுள்ள கிணற்றுத் தண்ணீர் மாசடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே அயல் கிராமங்களில் வசிக்கும் மக்களின் நலன் கருதி உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்ற செய்தி பத்திரிகையில் பிரசுரமானது.

இந்தச் செய்தி தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபை தன்னிலை விளக்கம் அளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கல்லுண்டாய் வெளியில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு பெருமளவு தண்ணீர் தேவைப்பட்டது. சுமார் 12 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து தண்ணீரை பெற்று தீயை கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். இந்த சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் ஆழ்துளை கிணறு ஒன்று அமைக்க வேண்டும் என்பது தொடர்பில் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக அந்த இடத்தில் ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைக்கப்பட்டது.

நான்கு கிணறு என்பது தவறு. அதில் அவசர தேவைக்கு பயன் படுத்துவதற்காக ஒரே ஒரு ஆழ்துளை கிணறு மாத்திரமே அமைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக இதன் பாவனை அவசியமற்றது. இந்த கிணறு அமைக்கப்பட்டிருப்பதால் ஏதாவது பாதிப்புகள் ஏற்படும் என்று தொழில்நுட்ப ரீதியாக உறுதிப்படுத்துமிடத்து ஆழ்துளை கிணறை மூடுவதில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றுள்ளது.

அவசர நிலைமைக்கு மட்டும் அந்த ஆழ்துளை கிணற்றுத் தண்ணீரைப் பயன்படுத்தினால் அருகில் உள்ள தண்ணீர் ஊற்றுகளுக்கு பாதிப்பு ஏற்படாது. ஆனால் தொடர்ச்சியாக அந்த ஆழ்துளை கிணற்றில் இருந்து தண்ணீர் உறிஞ்சப்படுமானால் அருகில் உள்ள தண்ணீர் ஊற்றுகள் பாதிப்படையும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலய தொழில்நுட்பப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-7)

## சங்காபிசேகம்

யாழ்ப்பாணம்,மே 10

இருபாலை கிழக்கு அருள்மிகு சிறி வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் (சிவன் கோவில்) ஆலய வருடாந்த சங்காபிசேகம் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து திருக்கல்யாண திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி வீதி உலாவரும் காட்சி இடம் பெறும். (ஐ)

## விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, மே 10

வீதியின் குறுக்கே சென்ற ஈருருளியுடன் உந்துருளி மோதியதில் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி மருத்துவமனை முன்பாக இடம்பெற்றுள்ளது.

எழுதுமட்டுவாழ்தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபரான ஐயாத்துரை வரதராஜா ( வயது -67 ) என்பவரே காயமடைந்தார். இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஈருருளியில் சென்ற மாணவன் வீதியின் மறுபக்கம் செலுத்தியதால் இந்த விபத்து இடம்பெற்றதெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# இந்து ஆலயங்களும் பாதுகாப்பில் கவனம் கொள்வது மிக அவசியம்

## பன்னாட்டு இந்து மதகுருமார் ஒன்றியம் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 10

நாட்டில் தற்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ள நிலையில் இந்து ஆலயங்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் கவனம் எடுக்க வேண்டும். ஆலயத்துக்கு வரும் மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஆலய நிர்வாகங்கள் செயற்பட வேண்டும் என்று பன்னாட்டு இந்து மதகுருமார் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அந்த ஒன்றியம் இவ்வாறு கோரிக்கை விடுத்தது. ஒன்றியத்தின் தலைவர் ஐயப்பதாச சுவாமிகள் மற்றும் ஒன்றியத்தின் யாழ்ப்பாணத்துக்கான தலைவர் ஜெகதீஸ்வர சர்மா, நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:

தற்போது ஆலயங்களின் திருவிழாக் காலங்கள் ஆரம்பமாகியுள்ளன. திருவிழாக்களின்போது நாட்டின் தற்போதைய நிலமையைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

நாட்டின் தற்போதைய நிலமையால் மக்கள் மத்தியில் அச்ச நிலை காணப்படுகின்றது. ஆலய நிர்வாகத்தினர் திருவிழாக்களை நேர காலத்துடன் நடத்தி முடிக்க வேண்டும். ஆலயத்துக்கு வரும் மக்களின் பாதுகாப்பு முக்கியமானது. அதைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் அவசியம்- என்றனர். (எ-ரி1)

# செஞ்சிலுவை தினத்தில் பல்வேறு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே 10

பன்னாட்டு செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தால் மரநடுகை, குருதிக்கொடை நிகழ்வுகளுடன் கொடிவாரமும் கடைபிடிக்கப்பட்டன.

இம்முறை" மனித நேயத்தையும் சூழலையும் நேசிப்போம்" எனும் தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் நிகழ்வுகள் நடைபெற்றன.

கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை கொடிவாரம் கடைப்பிடிக்கப்பட்டது.

பளை மத்திய கல்லூரியில் மரநடுகையையும், பளை மருத்துவமனையில் குருதிக்கொடை நிகழ்வும் இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மருத்துவமனையிலும் குருதிக் கொடை நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க தலைவர் ச.சந்திரசேகரம்.செயலர் த.சேதுபதி, பொருளாளர் பொ.பத்மகாந்தன், கிளை நிறைவேற்று அலுவலர் சி.கிருஷ்ணராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-222)



# வீடமைப்பு அதிகார சபையின் இழுத்தடிப்பால் பாண்டியன்குளம் வீட்டுத் திட்ட மக்கள் நிர்க்கதி

*முல்லைத்தீவு, மே 10*

வீட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்ட வீட்டைக் கட்டுவதற்கான பணம் விடுவிக்கப்படாததால் முல்லைத்தீவு, பாண்டியன் குளத்தில் 18க்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. தேசிய வீடமைப்பு அதிகார சபையால் முல்லைத்தீவு, பாண்டியன் குளம் பகுதியில் மக்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. சொந்தக் காணி இருந்தும் வீடுகள் இன்றி தற்காலிக வீடுகளில் வசித்தவர்களுக்கே வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. ஏழு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகளே வழங்கப்பட்டுள்ளன.

அந்த வீடுகளைக் கட்ட ஆரம்பித்து இரண்டு மாதங்கள் கடந்துள்ளன. வீட்டைக் கட்டி முடிக்க வேண்டும் என்ற நோக்கோடு மக்கள் கடன் பட்டும், நகைகளை அடகு வைத்தும் வீடுகளைக் கட்ட ஆரம்பித்துள்ளனர். அத்திபாரத்தைக் கூட கடன்பட்டே கட்டியுள்ளனர்.

சிலர் வீட்டின் கூரை மட்டத்துக்கு வீட்டைக் கட்டியுள்ளனர். வீடு கட்ட ஆரம்பித்து ஒவ்வொரு கட்டம் நிறைவடைந்ததும் தேசிய வீடமைப்பு அதிகார சபை அந்தக் கட்டத்துக்கான நிதியை வைப்பில் இடும். ஆனால் இரண்டு மாதங்களாகியும், அதற்கான பணம் வங்கியில் போடப்படவில்லை என்று மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தமக்கான பணத்தை விரைந்து தருமாறு அந்தப் பகுதியில் உள்ள மூவர் உணவு ஒறுப்புப் போராட்டத்தையும் கடந்த வாரம் மேற்கொண்டுள்ளனர். எனினும் அந்தப் போராட்டத்தைத் தொடர முடியாது நிறுத்தியுள்ளனர்.

"அத்திபாரம் கட்டி முடித்தால் எவ்வளவு பணம் வைப்பில் இடுவார்கள் என்று அறிந்து பணத்தைத் திரட்டி அத்திபாரம் கட்டினோம். பணம் வைப்பிலிட்டதும் அதை திரும்பச் செலுத்துவோம் என்ற நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால் இதுவரை எமக்கான பணம் வைப்பிலிடப்படவில்லை. வீடுகளும் குறையில் இருக்கின்றன.

நாங்களும் கடனாளிகளாக்கப்பட்டுள்ளோம். பிரதேச செயலகத்துக்குச் சென்று கேட்டால் அவர்கள் தேசிய வீடமைப்பு அதிகாரசபை இன்றைக்குப் பணம் போடும், நாளைக்குப் பணம் போடும் என்று கூறுகின்றனர்.

எமக்குப் பணத்தைப் பெற்றுத் தருகிறார்கள் இல்லை" என்கின்றனர் பாதிக்கப்பட்ட மக்கள்.

பயனாளிகளைத் தெரிவு செய்வதும், கண்காணிப்பதையுமே நாம் செய்கிறோம், பணத்தை தேசிய வீடமைப்பு அதிகார சபை தான் வழங்கவேண்டும். அவர்கள் தான் அதற்கு பொறுப்பானவர்கள். மக்கள் அது தொடர்பில் பல முறை கூறியுள்ளனர், முறையிட்டுள்ளனர். நாமும் அது தொடர்பில் தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் பேசியுள்ளோம். அவர்கள் ஒவ்வொரு காரணங்கள் கூறுகின்ற னர். இறுதியாகக் கடிதம் அனுப்பியுள்ளோம். இதுவரை பதில் இல்லை.

உண்மையில் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் அந்த வீடுகளைக் கட்டுகிறார்கள்.

இவ்வாறு இனி நடைபெறும் எனில் மக்களை வீடுகளைக் கட்டுமாறு கூறமுடியாது என்று முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

மக்களுடைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விளக்கத்தை அறிவதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் கமகேயின் அலைபேசிக்கு அழைப்பு எடுத்தபோதும், அவர் அழைப்புக்குப் பதிலளிக்கவில்லை. (எ-21,26)

## இலவச ஆங்கில வகுப்புக்கள்

சாவகச்சேரி, மே 10

அமெரிக்கன் சிலோன் திருச்சபையின் நுணாவில் ஆலயத்தினர் அந்தப் பகுதியில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவச ஆங்கில வகுப்புக்களை ஆரம்பித்துள்ளனர்.

தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு பிரதி திங்கட்கிழமைகளில் மாலை 4 மணிக்கும், தரம் 8 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் மாலை 4 மணிக்கும் ஆங்கில வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன.

இந்த வகுப்புகளில் இணைய விரும்பும் மாணவர்கள் ஆலயப் போதகர் அருட்பணி ஜீ.டி.மைனசீலனுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (ஐ-9)





## பயணிகள் பேருந்து தரிப்பிடம் திறப்பு

வவுனியா,மே 10

வவுனியா செட்டிகுளம் நேரியகுளப் பகுதியில் பயணிகள் பேருந்து தரிப்பிடம் அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

பிரதேசசபை உறுப்பினர் சாந்தகுமாரி மகேந்திரலிங்கத்தின் சொந்தநிதியிலிருந்து குறித்த பேருந்துத் தரிப்பிடம் அமைக்கப்பட்டது.

நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச செயலர், பிரதேச சபை உறுப்பினர்கள், அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-110)



## குடிதண்ணீர்த் தாங்கி கையளிப்பு

வவுனியா,மே 10

வவுனியா தம்பனைச்சோலை பாடசாலைக்கு தமிழ் விருட்சம் அமைப்பால் நேற்று குடி தண்ணீர்த் தாங்கி வழங்கி வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி குடி தண்ணீர்த் தாங்கி ஒன்றை வழங்கிவைக்குமாறு பாடசாலை அதிபர் தமிழ் விருட்சம் அமைப்பிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து ஆஸ்திரேலியா நாட்டில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவின் நிதிப்பங்களிப்பில் இந்தக் குடிதண்ணீர்த் தாங்கி வழங்கிவைக்கப்பட்டது. (ஐ)



## இலவச யோகாப் பயிற்சி

கொடிகாமம், மே 10

செரண்டிப் சிறுவர் இல்ல நுண்கலைக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவச அடிப்படை யோகாப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

செரண்டிப் சிறுவர் இல்லத்தின் ஏற்பாட்டில் இல்லத்தின் கிளிநொச்சி வளாகத்தில் நேற்றுமுன்தினம் வரை ஒருவார காலப் பயிற்சியாக வழங்கப்பட்டது. (ஐ-159)

## குருதித்தானம் செய்யுங்கள்

மன்னார்,மே 10

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பொதுமக்கள் குருதித்தானம் வழங்க முடியும். இவ்வாறு மாவட்ட பொது மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் ஒஸ்மன் டெனி தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு தேசிய மட்டத்தில் குருதிக்கொடை நிகழ்வு அரசால் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மன்னார் மாவட்ட மருத்துவமனை அலுவலகர்களால் குருதித்தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நாளை பொதுமக்களுக்காக குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்துப் பொதுமக்களையும் வருகை தந்து குருதித்தானம் வழங்குமாறு அவர் அறிவித்துள்ளார். (ஐ-56)



## 44 மாணவர்களுக்கு ஈருருளிகள் கையளிப்பு

சாவகச்சேரி, மே 10

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 44 மாணவர்களுக்கு வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினரால் நேற்று ஈருருளிகள் வழங்கப்பட்டன.

பிரதேச சிறுவர் நன்னடத்தை அலகின் ஏற்பாட்டில் பிரதேசத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டது. மாணவர்களின் பெற்றோர்களிடம் ஈருருளிகள் கையளிக்கப்பட்டன.

வேள்ட் விஷன் நிறுவன பிரதிநிதியின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி விேனாஜிதா கலந்து கொண்டு ஈருருளிகளை வழங்கி வைத்தார். (ஐ-9)







# தரவன்கோட்டை கிராமத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு

## தடுத்து நிறுத்துங்கள் என பிரதேச மக்கள் கோரிக்கை

மன்னார், மே 10

மன்னார் நகருக்கு அண்மையில் உள்ள கிராமமான தரவன்கோட்டையில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அதிகளவு மணல் சட்டவிரோதமாக அகழப்படுகின்றது. அதைத் தடுத்து நிறுத்த முயன்றால் கொலை அச்சுறுத்தல் விடுகின்றனர் என்று கூறுகின்றார்கள் அந்தப் புகுதி மக்கள்.

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட நகருக்கு அண்மையில் உள்ள கிராமம் தரவன்கோட்டை. இந்தக் கிராமம் கடற்கரையோரமாக இருக்கின்றது. இங்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இன்றி மணல் சட்டவிரோதமாக அகழப்படுகின்றது. எந்தவித முன்யோசனையும் இன்றி மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையால் எதிர்காலத்தில் கடல் கிராமத்துக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கிறார்கள் இல்லை என்கின்றனர் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள்.

இந்த விடயம் தொடர்பாக நகர சபையினரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம். மணல் அகழ்வோரை நாம் தடுக்க முற்படும்போது அவர்கள் எமக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கின்றனர். உரிய அதிகாரி இந்த விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை மக்களின் முறைப்பாட்டைஅடுத்துநகர சபையினர் நேரில் சென்று நிலமைகளை அவதானித்தனர் என்றும், இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள்எடுக்கவுள்ளனர்என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-60)

## வெள்ளாங்குளம் பண்ணையை பகிர்ந்தளிப்பதற்காக நேர்முகம்

மன்னார், மே 10

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் படையினர் வசம் இருந்து மாந்தை மேற்கு பிரதேசச் செயலகத்திடம் கையளிக்கப்பட்ட வெள்ளாங்குளம் பண்ணையைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான நேர்முகத் தேர்வு நேற்று வியாழக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

படையினர் வசம் இருந்த வெள்ளாங்குளம் பண்ணைல் சுமார் 264 ஏக்கர் நிலம் அண்மையில் இராணுவத்தால் மாந்தை மேற்கு பிரதேசச் செயலரிடம் கையளிக்கப்பட்டது. அந்தப்பண்ணையைமுன்னாள் போராளிகள் மற்றும் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில், மாந்தை மேற்கு பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் நேர்முகத் தேர்வு இடம்பெற்றது. முன்னாள் போராளிகள், போரால் பாதிக்கப்பட்டவர்கள், போரால் கணவனை இழந்து பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட பெண்கள் என சுமார் 357 பேர் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டிருந்தனர். நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு வெள்ளாங்குளம் பண்ணையில் காணிகள் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாந்தை மேற்கு பிரதேச செயலர் தெரிவித்தார்.

(எ-56)







## கொல்லப்பட்டவர்களுக்கு புதுக்குடியிருப்பில் அஞ்சலி

கிளிநொச்சி, மே 10

நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கான அஞ்சலி நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் நேற்று இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது.

சபை அமர்வின் தொடக்க நிகழ்வில் சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் மெழுகுவர்த்தி ஏற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து நினைவுரையை பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந், பிரதேச சபை உறுப்பினர் ஆ.ஜேன்சன்,மற்றும் உபதவிசாளர் க.ஜெனமேஜனந், ஆகியோர் நிகழ்தினர். (ஐ-ரி3)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

மன்னாரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

நாடு பூராகவும் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயம் தோற்றம் பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் டெங்கு நுளம்பு அதிகரிப்பை தடுக்கும் விதத்திலும், டெங்கு நுளம்பு பெருகக்கூடிய தண்ணீர் நிலைகள் மற்றும் தண்ணீர் தேங்கியுள்ள பிரதேசங்களை.அடையாளப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.


கோப்புப்படம்

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனை ஊழியர்கள்மற்றும்சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக ஊழியர்கள் தலைமையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம் பெற்றது.

டெங்கு நோய்கள் பரவுவதற்கான ஏதுவான வாய்ப்புக்கள் காணப்படும் வீடுகளின் உரிமையளர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்படுவதுடன் நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாக காணப்படுகின்ற காரணிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்படுகின்றனர். (ஐ-56)

## பாடசாலைகளின் பாதுகாப்பை ஆசிரியர் பொறுப்பேற்க முடியாது

### ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவிப்பு

கொடிகாமம், மே 10

நாட்டிலுள்ள பாடசாலைகளின் பாதுகாப்பை அதிபர், ஆசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று, கல்வி அமைச்சு அண்மையில் விடுத்த சுற்றறிக்கையை முற்றாக எதிர்ப்பதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் செய்தியாளர் சந்திப்பு திருகோணமலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சங்கத்தின் பொதுச் செயலர் மகிந்தஜெயசிங்க, உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப், திருகோணமலை மாவட்ட தலைவர் ஜெயதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களின் விளைவாக மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டது.

உச்சகட்ட பாதுகாப்பை அரசு வழங்கியுள்ளது என்று கல்வி அமைச்சர் கூறிய போதும் நாட்டில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு 5 வீதத்துக்கும் குறைவாகவே காணப்படுகின்றது. அரசு தமது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள நாட்டு மக்களுக்கு பொய்களை கூறிய போதும் மாணவர்களும் பெற்றோர்களும்அதை ஏற்க தயாரில்லை என்பதை மாணவர்களின் பாடசாலை வருகையின் வீழ்ச்சி சுட்டிக்காட்டுகின்றது. அண்மையில் கல்வி அமைச்சு வெளியிட்டிருந்த சுற்றறிக்கையில் பாடசாலையின் பாதுகாப்பை அதிபர், ஆசிரியர்கள் பொறுப்பேற்கவேண்டும் என்ற கூற்றை முற்றாக எதிர்க்கிறோம்.

நாட்டின் சில பகுதிகளில் ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலமை காணப்படுகிறது. நேற்று முன்தினம் அவிசாவளை பகுதியில் அமைந்துள்ள புவக்பிட்டிய சி.சி. தமிழ் வித்தியாலயத்தில் கடமை புரியும் முஸ்லிம் ஆசிரியர்கள் அங்குள்ள ஒரு சில பெற்றோர்களால் பாடசாலைக்கு வரவிடாமல் தடுத்தமையானது கண்டனத்துக்குரிய செயல்.

மேலும் புவாக்பிட்டிய சி.சி. தமிழ் வித்தியாலயத்தில் கடமை புரியும் முஸ்லிம் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டமையானது மாணவர்களின் கல்வி நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே இடமாற்றத்தை இல்லாமல் செய்து அந்த ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பை வழங்கி அதே பாடசாலையில் மாணவர்களின் நலன் கருதி தமது சேவையை தொடர கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (ஐ-159)

## பெண் ஆசிரியர்கள், பெண் பிள்ளைகளின் பைகளை பெண்களே சோதிக்கவேண்டும்

### தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 10

பாடசாலைக்குச் செல்லும் பெண் ஆசிரியர்கள், பெண் பிள்ளைகளின் கைப் பைகளை பெண்களே பரிசோதிக்க வேண்டும். சில இடங்களில் ஆண்கள் பரிசோதிப்பதால் சங்கடமாக உள்ளதென்று பலர் முறையிட்டுள்ளனர் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. எனவே பெண்களே பரிசோதனை செய்ய வேண்டும் என்று சங்கம் வினயமாகக் கேட்டுக்கொண்டுள்ளது.

இது பற்றி சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

பெண்கள் தமது அத்தியாவசிய தேவைக்காகக் கொண்டு செல்லப்படும் பொருள்கள் அனைத்தும் முற்றாக வெளியில் கொட்டப்பட்டு சோதனை செய்யப்படுகின்றன. இதைவிட மாணவிகளின் தோழில் வைத்தே பைகள் பரிசோதனை செய்யப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பில் பலரும் தமது அதிருப்தியை வெளியிட்டு ஆண்கள் பரிசோதனையில் ஈடுபடுவதால் பலர் முன்னிலையில் சில விடயங்கள் தங்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

இவற்றைத் தவிர்க்க பாடசாலை சோதனை நடவடிக்கைகளில் மிகுந்த அவதானத்துடன் நடந்துகொண்டு தேவையற்ற விபரீதங்களைத் தவிர்க்குமாறு சங்கம் வினயமாக வேண்டுகோள் விடுத்துள்ளது. (த)

# சோதனைகளால் மக்களுக்கு நெருக்கடி என்பது தெரியும்

## கூட்டமைப்பின் கேள்விக்கு ரணிலின் பதில்

கொழும்பு, மே 10

நாட்டின் தற்போதைய சூழலில் சோதனைச் சாவடிகளால் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சபையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சுட்டிக்காட்டியது.



இந்தச் சோதனை நடவடிக்கைகளால் மக்கள் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்கின்றார்கள் என்பது தெரியும். விரைவில் ஒரு நிலைப்பாட்டுக்கு வரலாம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கேள்வி நேரத்தின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்,

"வடக்கில் உள்ள கூட்டுறவு பயிற்சி நிலையத்தை மறுவாழ்வு நிலையமாக இராணுவம் பயன்படுத்தி வருகின்றது. இன்று ஒரு போராளி மட்டுமே அதில் உள்ளார். அந்த நிலையத்தை இராணுவம் அபகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தை விடுவிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர் ரணில், வடக்கு மாகாண கூட்டுறவு பயிற்சி நிலையம், மறுவாழ்வு நிலையமாகச் செயற்பட்டு வருகின்றது என்று தெரியும். முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு வழங்கப் பயன்பட்டது. இப்போது ஒருவர் தான் உள்ளார் என்றாலும், எதிர்காலத்தில் அனுப்பப்படும் சந்தேக நபர்களுக்கு மறுவாழ்வு வழங்க இந்த நிலையம் அவசியம்.

போர்க்காலத்தில் சந்தேகத்தில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கையை அவர்களின் உறவினர்கள் முன்வைக்கின்றார்கள். அவர்களை விரைவில் மறுவாழ்வுக்கு உட்படுத்தி விடுவிப்பதே நோக்கமாக உள்ளது.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள நபர்களை உரிய வேலைத் திட்டங்களுக்கு உட்படுத்தி அவர்களைச் சமூகத்தில் வாழக்கூடிய சூழலை உருவாக்கிக்கொடுக்க வேண்டும் என்றே நாம் நினைக்கின்றோம். 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கில் இருக்கும் ஒரே மறுவாழ்வு நிலையமும் இது என்பதால் நாம் சகல தரப்புடனும் பேச்சு நடத்தி தீர்மானம் எடுப்போம் - என்றார். (ஒ.5,31)

## சிறுபோக உரமானியம் கையளிப்பு

தென்மராட்சி, மே 10

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட கமக்கார அமைப்புகளின் விவசாயிகளுக்கு சிறுபோக உரமானிய விநியோகம் இடம்பெறவுள்ளது.

நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை விநியோகிக்கப்படவுள்ளது.

13ஆம் திகதி கல்வயல், மட்டுவில் வடக்கு ஆகிய பகுதிகளுக்கும், 14.ஆம் திகதி கொடிகாமம் வடக்கு கெற்பேலி, மாசேரி, இடைக்குறிச்சி ஆகிய பகுதிகளுக்கும்,15. ஆம் திகதி மண்டுவில், நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, சரசாலை தெற்கு, சரசாலை வடக்கு ஆகிய பகுதிகளுக்கும், 16ஆம் திகதி மீசாலை மேற்கு இராமாவில், மீசாலை வடக்கு .அல்லாரை வெள்ளாம் போக்கட்டி, கச்சாய், பாலாவி ஆகிய பகுதிகளுக்கும், 17ஆம் திகதி உசன், கரம்பகம் ஆகிய பகுதிகளுக்கும், 21ஆம் திகதி மிருசுவில் வடக்கிலும், 22ஆம் திகதி எழுதுமட்டுவாழ் வடக்கு, எழுதுமட்டுவாழ் தெற்கு ஆகிய பகுதிகளுக்கும், 23ஆம் திகதி வரணி இயற்றாலை, தாவளை, இயற்றாலை ஆகிய பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

சிறுபோக உரமானிய விநியோகத்தின்போது பரப்பு ஒன்றுக்கான மானிய விலை ரூபா 40.83 அறவிடப்படவுள்ளது.

தேசிய அடையாள அட்டை 2019ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரிப்பற்றுச்சீட்டு, 2019ஆம் ஆண்டுக்கான சந்தாப்பணப் பற்றுச்சீட்டு ஆகிய ஆவணங்களை தவறாது கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-159,9)

## நெடுநேரம் பொதியுடன் நின்றவரால் பரபரப்பு!

சாவகச்சேரி, மே 10

பேருந்துத் தரிப்பிடத்தில் நீண்ட நேரம் பொதியுடன் நின்றவரால் பாடசாலையில் பெரும் பதற்றம் காணப்பட்டது. பொலிஸார் அங்கு வந்து பொதியைச் சோதனையிட்டு அதனுள் ஒன்றும் இல்லையெனத் தெரிவித்த பின்னரே பதற்றம் தணிந்தது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரியிலுள்ள பாடசாலையொன்றின் முன்பாக நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. ஏ-9 முதன்மைச் சாலையுடன் இணைந்துள்ள பேருந்து தரிப்பிடத்தில் பயணியொருவர் பொதியுடன் பேருந்தை எதிர்பார்த்து நீண்டநேரம் காத்திருந்துள்ளார்.

இதனை அவதானித்த மாணவர்கள் அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அதிபரும் பொலிஸாருக்கு அறிவிக்கவே அங்கு விரைந்து வந்த பொலிஸார் குறித்த நபர் வைத்திருந்த பொதியைச் சோதனையிட்டனர். பொதியில் அச்சப்படுவதற்கான எந்தப் பொருள்களும் காணப்படவில்லை என்று தெரிவித்தனர். அதன் பின்னர் மாணவர்கள், ஆசிரியர்களிடையே காணப்பட்ட பதற்றம் தணிந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# மக்களுக்கு அவசியமானவற்றை அறிந்து அபிவிருத்தி செய்யுங்கள்

## வேலணைப் பிரதேச சபையில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 10

வேலணை பிரதேச சபைக்கு உள்பட்ட இடங்களில் மக்களுக்கு மிக அவசியமான வேலைத் திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று சபை உறுப்பினர்கள் நேற்று வலியுறுத்தினர்.

வேலணை பிரதேச சபையின் சிறப்பு அமர்வு தவிசாளர் நமசிவாய கருணாகர குருமூர்த்தி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

"பல்வேறு அமைச்சுக்களின் நிதி மற்றும் சிறப்பு செயற் திட்ட நிதி சபைக்கு கிடைக்கின்றது.

மக்களுக்கு மிக அவசியமான சபை நிதியில் செய்து முடிக்காத வேலை திட்டங்களைத் தெரிவு செய்து இந்த நிதி மேற்கொள்ள வேண்டும். நிதி கிடைக்கிறது என்பதற்காக அவசியமாக உடனடியாக செய்ய வேண்டிய வேலை திட்டங்களை விட்டு விட்டு தேவையற்ற திட்டங்களை முன்மொழியக்கூடாது. வேலணைப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் குடிதண்ணீரைச் சீராக வழங்க வேண்டும். குழாய் மூலமான இணைப்பை ஏற்படுத்தி குடி தண்ணீரை வழங்குமாறு மக்கள் கேட்கின்றனர். ஆனால் அதற்கு அதிகம் செலவாகும். கிடைக்கும் நிதியை பயன்படுத்தி பவுசர் மூலமாக குடிதண்ணீர் வழங்கலைச் சீராக மேற்கொள்ள வேண்டும்.

### பற்றைகளால் சீர்கேடு

பொது இடங்களில் மயானம் ,பாடசாலை வளாகம், சபை உப அலுவலகம் போன்ற பல்வேறு இடங்களில் பற்றைகள் காணப்படுகின்றன. அங்கு கழிவுகள் கொட்டப்படுகிறன. சட்ட விரோத செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. பற்றைகள் வெட்டப்பட வேண்டும். இது தவிர வீதிகள் சீரமைக்கும்போது அநேகமானவை ஊரி வீதிகளாக அமைகின்றன. கிடைக்கும் நிதி மூலங்களைப் பயன்படுத்தி தார் வீதியாக மாற்றி அமைக்கும் முறைகளை மேற்கொள்ள வேண்டும். அதே போன்று கிராம உள் பகுதிகளில் குப்பைகள் அள்ளுவதற்குச் சபை வாகனங்கள் செல்வதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. சபையில் உள்ள சில வாகனங்கள் பழுதாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. அவற்றைச் சீர்செய்தால் திண்மக் கழிவகற்றல் சீரான முறையில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

### மக்களுடன் ஆலோசித்து அபிவிருத்தி செய்க

பல்வேறு வேலைத் திட்டங்கள் பொது அமைப்புகள் ஊடக மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. பிரதேச சபையும் மக்களும் இணைந்தால் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும். சன சமூக நிலையங்கள் அதன் நிர்வாக நடவடிக்கைகள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். அவர்கள் ஊடாக பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும். இவ்வாறு சபையால் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான வேலைத் திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதி கிடைக்கிறது என்பதற்காக மிக அவசியம் இல்லாத செயற்பாடுகளைச் செய்ய எத்தனிக்க வேண்டாம். நிதி இல்லை என்று சபையின் ஆளுகைக்கு உள்பட்ட மக்களுக்கு செய்ய வேண்டிய விடயங்களை செய்யாமலும் இருக்க வேண்டாம் என்று சபை அமர்வுகளில் உறவினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டுப் பின்னர் சபை கூட்டம் ஆரம்பமாகியிருந்தது. (எ-7)



## சாரதிகள் மூவருக்கு தண்டம்

சாவகச்சேரி, மே 10

அனுமதிப் பத்திரமின்றி டிப்பர் வாகனங்களில் மணல் ஏற்றிய 3 வாகனச் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மணலையும் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையைப் பயன்படுத்தி மணல் கடத்திச் சென்ற 3 டிப்பர் வாகனங்களைச் சாவகச்சேரிப் பொலிஸார் தனங்களப்பு, நாவற்குழி, கனகன்புளியடிச் சந்தி ஆகிய இடங்களில் வைத்து கடந்த திங்கட்கிழமை பிடித்துள்ளனர்.

வாகனச் சாரதிகள் மூவருக்கு எதிராக அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றதாக குற்றஞ்சாட்டி நீதிமன்றில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கு தலா 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதமும் மற்றவருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்து அவர் மதுபோதையில் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்ததால் ஆறு மாதங்கள் சாரத்திய அனுமதிப் பத்திரத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (ஜ-9)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சிவாஜிலிங்கத்தின் மீதும் வழக்கு

யாழ்ப்பாணம், மே 10

**வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளில் கேக் வெட்டி கொண்டாடினார் என்றும் விடுதலை புலிகளின் ஒளிப்படங்களை வைத்திருந்தார் என்றும் குற்றஞ்சாட்டியே வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

கடந்த நவம்பர் 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளில் வல்வெட்டித்துறை தீருவில் மயானத்தில் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடுவதற்கு சிவாஜிலிங்கம் முயற்சித்திருந்தார். எனினும் அப்போது பொலிஸார் அதனைத் தடுத்திருந்தனர். வழக்குப் பதிவுசெய்வோம் என்று பொலிஸார் கூறியிருந்தனர்.

தற்போது 4 மாதங்கள் கடந்திருக்கும் நிலையில் மேற்குறித்த குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிவாஜிலிங்கத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கான அழைப்பாணை நேற்றுமுன்தினமிரவு 9 மணியளவில் வழங்கப்பட்டுள்ளது. வீதியில் சென்றுகொண்டிருந்த சிவாஜிலிங்கத்தை வழிமறித்த பொலிஸார் அவற்றை வழங்கியுள்ளனர். இந்த அழைப்பாணை வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் கோ.கருணானந்தராசா மற்றும் நகர சபை உறுப்பினர் பொ.சிவஞான சுந்தரம் ஆகியோருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. (த-ரி1)

## சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க வங்கிக்கடன் வழங்க நடவடிக்கை

*நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, மே 10

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கவென ஒருவருட கால வங்கிக் கடன் உதவிகளைப் பெற்றுக்கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது. அதற்கமைவாக இரண்டுவருட கால கடனுக்கு 75 சதவீத வட்டிக் குறைப்பை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் குறித்த உதவிகளுக்கென அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நிதி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடங்களில் சுற்றுலாத் துறையின் வருமானத்தில் பெறுமளவு அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. அதனடிப்படையில் கடந்த வருடமும் சுற்றுலாத் துறையில் பெருமளவான வருமானம் எமக்கு கிடைக்க ப்பெற்றுள்ளது. சுற்றுலாத் துறையூடான வருமானத்தை இவ்வாண்டும் அதிகரிப்பதற்கான முயற்சிகள் அனைத்தையும் அரசு முன்னெடுத்திருந்தது. எனினும் கடந்த மாதம் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்களால் அரசின் திட்டங்களில் சிக்கல் நிலை எழுந்துள்ளது. நாட்டில் இவ்வாறான அச்சுறுத்தல் நிலைமைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை சடுதியாக வீழ்ச்சியடைவதுடன் துறைசார்ந்தவர்களின் வருமானமும் மந்த நிலையை அடைகின்றது. 30 வருடகால போரின் பின்னர் மீண்டு பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்தும் அனுபவம் எமக்கு உள்ளதால் இந்தப் பிரச்சினையிலிருந்து விரைவாக மீள முடியும் என எதிர்பார்க்கிறோம். சுற்றுலாத் துறைசார் ஊழியர்களும் பெரு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போதுள்ள சூழ்நிலைகளுக்கு அமைவாக சுற்றுலாத்துறைசார் வர்த்தகர்கள் உதவிகளை வழங்கவேண்டிய அவசியமும் எமக்குக் காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்தால் இயல்பாகவே சுற்றுலாத் துறைசார் வருமானங்களும் வீழ்ச்சியைச் சந்திக்கின்றன. அவர்களுக்கான உதவிகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளதோடு அதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளது.

முதலீட்டு வட்டி வீதத்தை அறவிடாமல் இருப்பதற்கு அனைத்து வங்கிகளுடனும் கலந்துரையாடல் நடத்தத் தீர்மானித்துள்ளோம். இந்தக் கடன் உதவிகள் எதிர்வரும் மார்ச் மாதம் வரை ஒரு வருட காலத்துக்கு செல்லுபடியானதாகவும் காணப்படும்.

என்டபிரைஸ் சிறிலங்கா வேலைத்திட்டத்தினூடாகவும் சுற்றுலா துறையினருக்கான கடன் உதவிகளை வழங்கத் தீர்மா னித்துள்ளோம் - என்றார். (த-31)

## மண்மேடு சரிந்து இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 10

பேராதனை ரணபிம கன்னொருவ பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

படிக்கட்டுமான பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

மண்சரிவுக்குள் சிக்கிய இவர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். (த-71)

*சிரியாவில் பயிற்சி எடுத்தாலும்*

# சட்டத்தை மீறாதவரை கைது செய்யமுடியாது

*சபையில் ரணில் தெரிவிப்பு*

கொழும்பு, மே 10



இலங்கையிலிருந்து சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் ஆயுதப் பயிற்சி பெற்ற பலர் நீண்ட காலமாக வசித்து வருகின்றனர். அவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன. இலங்கையின் தற்போதுள்ள சட்டங்களை மீறாதவரையில் அவர்களைக் கைதுசெய்ய முடியாது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கேள்வி நேரத்தின்போது, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாநகர முதல்வராகப் பணியாற்றிய அல்பிரட் துரையப்பா 1975ஆம் ஆண்டு ஜீலை மாதம் கொல்லப்பட்டார். பயங்கரவாதம் உருவாகிய அந்தக் காலத்தில் அதனைக் கட்டுப்படுத்த சிறப்பான சட்டங்கள் நாட்டில் இருக்கவில்லை. குற்றவியல் சட்டமே இருந்தது. இதன் பின்னர் 1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் உருவாக்கப்பட்டது. இலங்கைக்குள் மாத்திரம் மட்டுப்பாடானதாக இருந்தது. பன்னாட்டுப் பயங்கரவாதத்தின் பின்னர் இந்தச் சட்டங்கள் விரிவடைந்தன.

இன்று கொரில்லாப் போர் இல்லை. ஆனால் அதையும் தாண்டி பயங்கரவாதம் விரிவடைந்துள்ளது. அனைத்துக்கும் முகம் கொடுக்கும் வகையில் சட்டங்களை நாம் விரிவு படுத்த வேண்டும். பன்னாட்டுப்பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு எம்மால் நடவடிக்கை எடுக்க முடியும். பயங்கரவாதிகளுக்குச் சலுகை கொடுக்க நாங்கள் சட்டத்தை உருவாக்கவில்லை. பிரபாகர னுக்குப் பின்னர் கே.பியைக் கொண்டு வந்து சலுகைகளைக் கொடுத்ததுபோன்று எம்மால் பயங்கரவாதிகளைக் காப்பாற்ற முடியாது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் அப்படி எந்தச் சலுகைகளும் இல்லை.

பன்னாட்டுப் பயங்கரவாத அச்சுறுத்தல் 2014ஆம் ஆண்டு தொடக்கம் இருந்தது அனைவருக்கும் தெரியும். நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் பலர் பேசியுள்ளார்கள். சட்டத்தை மீறாத வரையில் அவர்களுக்கு எதிராகச் செயற்பட முடியவில்லை. சிரியா சென்ற பலர் இப்போது கைதாகியுள்ளனர். அவர்களுக்கு அப்பாலும் பலர் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள். இவர்களைக் கைது செய்யவேண்டும். அவசரகால சட்டத்தின் கீழேயே கைது செய்ய முடியும். சாதாரண சட்டத்தை இப்போது நிறைவேற்றி பின்னர் ஆழமாக இந்த விடயத்தில் கைவைக்கலாம் என்பது எமது கோரிக்கை - என்றார். (ஒ.5.31)

## திருகோணமலைக் கடலில் 41 மீனவர்கள் கைதாகினர்

கொழும்பு, மே 10

திருகோணமலையை அண்டிய கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மற்றும் கிண்ணியாவைச் சேர்ந்த 18 - 60 வயதுக்கிடைப்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 5மீன்பிடிப் படகுகளும், 5 வெளி இணைப்பு மோட்டர்களும், 225 மீட்டர் நீளமான 5 சட்டவிரோத வலைகள் மற்றும் 94 கிலோக்கிராம் மீன்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.

கடற்படையினர் சந்தேக நபர்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர். (த-71)

## அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம்

கொழும்பு, மே 10

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையில் சிறுவர்களுக்கு உதவுவதற்காகவே இந்த தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் எம்.எம். அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலை இரண்டாம் தவணை நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது இது அந்தப் பகுதி தொடர்பில் விழிப்புடன் மாணவர்கள் செயற்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-21)

# அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதான சிவில் செயற்பாட்டாளரை விடுவிக்குக

கொழும்பு, மே 10

குரல்கள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரும் சிவில் செயற்பாட்டாளருமான டில்சான் முகம்மடின் கைது சம்பந்தமாக குரல்கள் இயக்கம் ஆழ்ந்த கரிசனையும் கவலையும் கொள்கிறது. அவரை உடனடியாக விடுவிக்குமாறும் கோருவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குரல்கள் இயக்கம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அவசரகாலச் சட்டத்தின் கீழ் நுரைச்சோலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட டில்சான் முகம்மட் இன்றுவரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். நாட்டில் சட்டவாட்சியை நிலைநாட்டுதல், ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துதல், சமாதான சகவாழ்வு, மதங்களுக்கிடையிலான சகிப்புத்தன்மை போன்ற உன்னத நோக்கங்களுக்காக செயற்பட்டுக் கொண்டிருக்கும் குரல்கள் இயக்கத்தின் பல செயற்பாடுகளில் டில்சான் முகம்மட் காத்திரமான பங்களிப்புகளைச் செய்தவர். மிதவாதக் கருத்துக்களுக்கு எதிராக சமுக வலைத் தளங்களில் குரல் எழுப்பியவர். அவருடைய எழுத்துக்களே அதற்கு ஆதாரமாக இருக்கின்றன. குரல்கள் இயக்கத்தால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு 2017ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் முக்கிய வரைஞர்களில் ஒருவர் டில்சான் முகம்மட்.

அடிப்படைவாதக் கருத்துக்களை கடுமையாக எதிர்க்கும் டில்சான் முகம்மட் போன்ற சிவில் செயற்பாட்டாளர்களே கைது செய்யப்படின் அந்தக் கருத்துக்களை எதிர்ப்பதற்கு சமுகத்தில் எவரும் இல்லாத நிலையே ஏற்படும். மிதவாதக் கருத்துக்களுக்கு எதிராகப் பேசியும் எழுதியும் வரும் டில்சான் முகம்மட் போன்றவர்கள் கைது செய்யப்படக் கூடாது. மாறாக உற்சாகப்படுத்தப்பட வேண்டும்.

டில்சான் முகம்மட் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்று குரல்கள் இயக்கம் ஆணித்தரமாக வேண்டிக் கொள்கிறது. சந்தேகத்தின் பெயரில் அவசர காலச் சட்டத்தின் கீழ் கைதுகளை மேற்கொள்ளும் போது அப்பாவிகள் கைது செய்யப்படாமலும் பாதிக்கப்படாமலும் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ஒ.5)

# பயங்கரவாத நோக்கங்களுக்காக பரிவினையை ஏற்படுத்தக்கூடாது

## அரசதலைவர் கல்முனையில் உரை

கொழும்பு, மே 10

பயங்கரவாதம் உலகில் எங்குமே வெற்றிபெற்றதில்லை. அடிப்படைவாத பயங்கரவாத நோக்கங்களுக்காக இலங்கையரிடையே பிரிவினையை ஏற்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடாது என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



கல்முனை சாய்ந்தமருது பிரதேசத்துக்கு நேற்றுமுன்தினம் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டு, கிழக்கு மாகாண அரச அதிகாரிகள் மற்றும் மாகாணத்தின் முஸ்லிம் இளையோரைச் சந்தித்தபோதே அரசதலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்புத் தரப்பினர் வெற்றிகரமாக முன்னெடுத்துவருகின்றனர். இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கெண்டுவந்து மக்கள் மத்தியிலுள்ள அச்சத்தையும், சந்தேகத்தையும் போக்கி நம்பிக்கையைக் கட்டியெழுப்ப அரச அதிகாரிகள் முன்வர வேண்டும் - என்றார்.

முஸ்லிம் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை இஸ்லாமிய மதத் தலைவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்த அரசதலைவர்,

கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா தலைமையில் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிலையம் தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்தார்.

கல்வி அமைச்சினதும் உயர்கல்வி அமைச்சினதும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக தனியார் பல்கலைக்கழகமாக அதனை முன்னெடுத்து செல்வதற்கு எதிர்பார்ப்பதாகவும், இதன்போது அந்தக் கல்வி நிறுவனத்தில் முன்னெடுக்கப்படும் பாடநெறிகள் தொடர்பாக தெளிவான தீர்வுகளை மேற்கொள்ளவுள்ளேன் என்று தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேசத்துக்கு தனியானதொரு பிரதேச சபையை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய அவர், இந்தவிடயத்துடன் சம்பந்தப்பட்ட சகல பிரிவினருடனும் கலந்துரையாடுவதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், அமைச்சர் தயா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், மாகாண மக்கள் பிரதிநிதிகள், பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சாந்த கோட்டேகொட, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க, பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, உட்படப் பலர் கலந்துகொண்டனர் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (கு)

# மோதலுடன் தொடர்பென்று மாத்தளையில் ஐவர் கைது

கொழும்பு, மே 10

மாத்தளையிலுள்ள முஸ்லிம் மக்களுக்கும் தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் நபர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வரகாமுர பகுதியிலுள்ள தௌஹீத் ஜமாத் அமைப்பின் அலுவலகத்துக்கு முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் தௌஹீத் ஜமாத் அமைப்பின் மாத்தளை அமைப்பாளர்களாக கருதப்படும் நபர்கள், குடும்ப உறுப்பினர்களுடன் அங்கு ஒன்று கூடியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை அடுத்து மதத் தலைவர்களின் ஆலோசனைக்கிணங்க பெண்களுக்கான தொழுகைகள் தவிர்க்கப்பட்டு வருகின்றன. எனினும் நேற்றுமுன்தினமிரவு குறித்த அமைப்பினர் பெண்களுக்கான தொழுகையை ஏற்பாடு செய்யும்போது அந்த பகுதி முஸ்லிம் மக்கள் அதனைத் தவிர்க்குமாறு கேட்டுள்ளனர்.

இதன் காரணமாக இருதரப்புக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கம் வன்முறையாக மாறியிருந்தது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், இரண்டு தரப்பினரையும் அங்கிருந்துஅனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர். பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம்தொடர்பாக மாத்தளைப் பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி 5 பேரைக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றுபொலிஸார் தெரிவித்தனர். (கு)

# ஹபாயா அணிந்து சென்ற ஆசிரியைகளுக்கு சங்கடம்

## வேறு பாடசாலைகளுக்கு இடம் மாற்றினார் ஆளுநர்

கொழும்பு, மே 10

ஹபாயா மற்றும் ஹிஜாப் ஆடையுடன், அவர்கள் பணியாற்றும் பாடசாலைக்குள் நுழைய தடுக்கப்பட்டதன் காரணமாக, மேல் மாகாணத்திலுள்ள பாடசாலை ஒன்றில் பணியாற்றிய 10 ஆசிரியைகள், கடந்த செவ்வாய்க்கிழமை வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இது பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது என்று கூறப்படுகிறது.



அவிசாவளை புவக்பிட்டிய தமிழ் மகா வித்தியாலயத்தில் பணியாற்றும் முஸ்லிம் ஆசிரியைகள், பணிக்குச் சென்றபோது, ஹபாயா மற்றும் ஹிஜாப் அணிந்து கொண்டு பாடசாலைக்குள் செல்லக் கூடாது என்று, நுழைவாயிலில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அந்தப் பாடசாலையில் கற்கும் மாணவர்களின் பெற்றோரும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் இணைந்து அவர்களைத் தடுத்தனர் என்று மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலியின் முகப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியைகள் அனைவரும் ஹபாயா மற்றும் ஹிஜாப் அணிந்து பாடசாலைக்குச்செல்வது வழமை. கடந்த செவ்வாய்க்கிழமை "புடவை அணிந்து வந்தால் மாத்திரமே பாடசாலைக்குள் அனுமதிக்கப்படுவீர்கள்" என அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தங்களைப் பணி செய்யவிடாமல் திருப்பி அனுப்பப்பட்ட ஆசிரியைகள், தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக, மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலியிடம் முறையிட்டனர்.

இதனையடுத்து, மேல் மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாணக்கல்விஅமைச்சின் செயலர் மற்றும் புவக்பிட்டிய தமிழ் மகா வித்தியாலய அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளை நேற்றுமுன்தினம் அழைத்த ஆளுநர் இது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

தங்களை அவமதித்த பாடசாலைக்கு, இனி பணியாற்றச் செல்வதில்லை என்று, பாதிக்கப்பட்ட ஆசிரியைகள் உறுதிபடத் தெரிவித்து விட்டனர். அதனால் சம்பந்தப்பட்ட 10 ஆசிரியைகளுக்கும் ஆளுநரின் உத்தரவுக்கிணங்க அன்றையதினமே வேறு பாடசாலைகளுக்கு உடனடி இடமாற்றங்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பாடசாலைக்குள் நுழைவதற்குத் தடுக்கப்பட்டதைப் பாதிக்கப்பட்ட ஆசிரியைகளில் ஒருவர் தனது கைப்பேசியில் பதிவு செய்த காணொலி ஒன்று, சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகின்றது.

இந்த ஆசிரியைகளை பாடசாலைக்குள் நுழைய விடாமல் தடுத்தவர்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிற கருத்துக்கள், சமூக வலைத்தளங்களில் முன்வைக்கப்படுகின்றன.

கடந்த 21ஆம் தேதி இடம் பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களையடுத்து,

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலவரத்தைப் பயன்படுத்தி, முஸ்லிம்க ளின் கலாசாரங்களை ஒழிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றார்களா என்கிற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தின தற்கொலைக் குண்டு வெடிப்புகளுக்குப் பின்னர், தங்களின் அடையாளத்தை மறைக்கும் வகையில் முகத்தை மூடுவதற்கு அரசு தடை விதித்துள்ளது. இதன்படி புர்கா ஆடை அணிவதற்கு முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது. ஆயினும், ஹபாயா மற்றும் ஹிஜாப் ஆடைகளை அணிவதற்கு எவ்வித தடைகளும் இல்லை. (கு)

# சில்வா மீதான விசாரணையிலிருந்து மற்றைய நீதியரசரும் விலகினார்

கொழும்பு, மே 10

முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளைக் கொண்ட அமர்விலிருந்து நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட காரணங்களுக்காக விலகுவதாக நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார். இதனால் மனு ஜூன் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



இதேவேளை 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதி, உயர் நீதிமன்ற நீதிபதி பிரியந்த ஜயவர்தனவும் இந்த விசாரணையிலிருந்து விலகியிருந்தார்.

2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி மருதானை சந்தியில் வைத்து தேசிய ஒருமைப்பாட்டுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியில் உரையாற்றியபோது நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டார் என்று சரத் என் சில்வா மீது குற்றம் சாட்டி பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர உள்ளிட்ட மூவர் மனு தாக்கல் செய்திருந்தனர். (கு)

# சினிமா அரங்குகளில் மது விற்பனை தடை

## அமைச்சரவைப் பத்திரம் ஏற்பு

கொழும்பு, மே 10

சினிமா அரங்குகளில் எதிர்காலத்தில் மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களுக்கு பரிந்துரைக் கடிதம் வழங்கப்படுவதை இடைநிறுத்த தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக வீடமைப்பு, கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாச சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஆரம்ப காலத்தில் சினிமா மண்டபங்களில் மதுபானம் விற்பனை செய்யும் நிலையங்களை அமைப்பதில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் தலையீடு செய்யவில்லை.

பிந்திய காலப்பகுதியில் சினிமா திரையரங்குகளில் மதுபான விற்பனை நிலையங்களை அமைக்க இந்த கூட்டுத்தாபனத்தின் பரிந்துரைக் கடிதமொன்றைகலால் திணைக்களம் எதிர்பார்க்கின்றது.

திரையரங்குகளில் மதுபான விற்பனை நிலையங்களை அமைப்பதன்மூலம் சினிமா ரசிகர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்த போதிலும் மதுபானம் மற்றும் சிகரட் போன்றவற்றால் சிரமங்களுக்கு உள்ளாவதுடன் இதனால் திரையரங்குகளுக்கு வருகை தரும் ரசிகர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தரமான சினிமா கலாசாரத்தை உருவாக்கும் நடவடிக்கையாகவும் போதைப்பொருள் அற்ற நாடொன்றை கட்டியெழுப்புவதற்கான தேசிய வேலைத்திட்டத்துக்குப் பங்களிப்பு செய்யும் வகையிலும் எதிர்காலத்தில் பரிந்துரையை நிறுத்துவது என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

# பாதுகாவலருக்கே பாதுகாப்பா?



கடந்த 21ஆம் திகதி ஈஸ்ரர் வழிபாடு நடந்து கொண்டிருந்தபோது கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. பலர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தின் பின்னர் மூடப்பட்டிருந்த ஆலயம் கடந்த செவ்வாய்க்கிழமை மீளவும் திறக்கப்பட்டது. (ஒ.5)

### குண்டுத்தாக்குதல்:

# பொலிஸார் தேடிய மகளை நானே காட்டிக்கொடுத்தேன்

## லதீபாவின் தாயார் தெரிவிப்பு

கொழும்பு, மே 10

மகள் இருக்கும் இடத்தை பொலிஸாருக்கு நானே தெரியப்படுத்தினேன். தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முக்கிய நபர்களில் ஒருவரான பாத்திமா லதீபாவின் தாயார் தெரிவித்துள்ளார்.

குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையசந்தேகநபர்கள் சிலரின் ஒளிப்படங்களை பொலிஸார் வெளியிட்டிருந்தனர். அவர்கள் தேடப்படுவதாக அறிவித்திருந்தனர்.

தேடப்பட்ட பாத்திமா லதீபா, கடந்த 26ஆம் திகதி மாவனெல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

24 வயதுடைய பாத்திமா மாவனெல்ல பகுதியிலுள்ள புத்தர் சிலைகளை உடைத்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான 29 வயதுடைய மொஹமட் இப்ராஹிம் சாதிக் அப்துல்லாவின் மனைவி. மொஹமட் இப்ராஹிம் சாதிக் அப்துல்லா உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பாத்திமா லதீபா குறித்து அவரது தாயார் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தனது மகளின் பெயர் பாத்திமா லதீபா என்று ஊடகங்களில் வெளியாகிய போதிலும் பாத்திமா சஹீடா என்பதே அவரது உண்மையான பெயர்.

கடந்த 2015ஆம் ஆண்டு கிடைத்த வரனுக்கமைய பாத்திமாவுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. மகளின் மாமனார் மிகவும் நல்ல மனிதர். அவரது மகன் நாட்டுக்கு தீ வைப்பார் என்று நான் நினைக்கவில்லை. எனது மகளுக்கு எதுவும் தெரியாது. புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தின் பின்னர் எதுவும் சொல்லாமல் மருமகன் அவரை அழைத்துச் சென்றார்.

மகள் தொடர்பில் தகவல் அறிந்தால் அறிவிப்பதாக பொலிஸாருக்கு நான் கூறினேன். அதன் பின்னர் சிறிது நாள்களில் வீட்டின் பின்வாசல் வழியாக வந்த மகள், தந்தை எங்கே? தந்தையுடன் பொலிஸ் நிலையம் செல்ல வேண்டும் என்று கூறினார். மகளுக்கு ஒன்றும் தெரியாதென்பது அப்போது எனக்குத் தெரிய வந்தது.

மகள் என்னிடம், கணவன் மிகவும் கொடுமைப்படுத்தியதாகவும் தன்னை மனைவியாகவே பார்க்கவில்லை என்று கூறியதோடு, தான் செய்யும் விடயங்களை வெளியே கூறினால் கொலை செய்வேன் என்று அச்சுறுத்தி பல இடங்களில் அடைத்து வைத்ததாக மகள் கூறியதாகவும் பாத்திமாவின் தாயார் தெரிவித்துள்ளார்.

திடீரென அவருக்கு அதிகம் பணம் கிடைத்ததோடு, வீட்டுக்குத் தேவையான அனைத்துக்கும் அதிக பணம் செலவழித்ததாகவும் பாத்திமா தன்னிடம் கூறியதாக பாத்திமாவின் தாயார் தெரிவித்துள்ளார்.

பாத்திமாவின் தந்தையை அழைப்பதற்காக பள்ளிவாசலுக்கு சென்றதாகவும் அவருடன் பேசிய பின்னர் மகள் இருக்கும் இடத்தைப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதாகவும் பாத்திமாவின் தாயார் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மகள் கைது செய்யப்பட்டு 24 மணித்தியாலத்துக்குள் மருமகன் கைது செய்யப்பட்டாரென்றும் பாத்திமாவின் தாயார் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# பொலிஸ்மா அதிபர் மன்றில் என்ன சொல்லப்போகின்றார்?

## நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்று கூறுகிறார் மகிந்த அணி உறுப்பினர் மகிந்த யாப்பா

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர் நீதிமன்றில் என்ன கூறப்போகின்றார் என்பதை அறிந்து கொள்ள நாட்டு மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் காலத்தில் கூட மக்கள் சுதந்திரமாகவும், துணிவாகவும் செயற்பட்டார்கள். இன்று தேசிய பாதுகாப்பே முழுமையாக கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அரசுக்கு தாக்குதல் தொடர்பில் முன்னரே தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்கப்படாமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவல்களை, பொலிஸ்மா அதிபர் அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் வழங்கவில்லை என்று கூறப்படுகின்றது. பாதுகாப்புச் செயலரை அரச தலைவர் பதவி நீக்கம் செய்துள்ளார். அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் பொலிஸ்மா அதிபரை பதவி நீக்க அரச தலைவரை அனுமதிக்கவில்லை - என்றார். (ஒ.5.31)

### வீதியோரம் கைத்துப்பாக்கி மீட்பு

பதுளை, மே 10

வெலிமடை தம்பவின்ன பகுதியில் வீதியோர பற்றைக்குள்ளிருந்து கைத்துப்பாக்கி நேற்று மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். தமக்குக் கிடைத்த தகவலுக்கமைய அங்கு சென்று அதை மீட்டோம். அது இயங்கக்கூடிய நிலையில் உள்ளது.

இது குறித்து விசாரணை இடம்பெறுகிறது. எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# ஜமாத் உறுப்பினரை விடுவிப்பதற்கு கையூட்டு கொடுக்க முயன்றவர் கைது

கொழும்பு, மே 10

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினரை பிணையில் விடுதலை செய்யுமாறு கூறி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கையூட்டு வழங்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

ஹொரவப்பொத்தானை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டரை இலட்சம் ரூபா கையூட்டு வழங்க முற்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட அப்துல் மொஹமட் நியாஸ் எதிர்வரும் 14ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அடுத்த வழக்குத் விசாரணையின்போது அவருக்கு பிணை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டாம் என்று கோரியே கையூட்டு வழங்க முற்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஐந்து இலட்சம் ரூபாயை இலஞ்சமாக வழங்குவதாகக் கூறியுள்ள அந்த நபர் அதில் இரண்டரை இலட்சம் ரூபாவை உடனடியாக வழங்குவதாகக் கூறியுள்ளார். இதனையடுத்து இழஞ்ச ஒழிப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பலர் அன்றாடம் கைது செய்யப்பட்டு வருகின்றனர். தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் இணைந்து தாக்குதல்களை நடத்தினர் என்று தெரியவந்ததையடுத்து, சந்தேகத்தின் பேரில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். (த)



# சென்.செபஸ்டியன் ஆலயத்தில் வழிபாடுகள் நேற்று ஆரம்பம்

கொழும்பு, மே 10

இலங்கையில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களில் அதிக உயிரிழப்புகளைச் சந்தித்த நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய சென். செபஸ்டியன் தேவாலயத்தில் நேற்று வியாழக்கிழமை முதன்முறையாக வழிபாடு நடத்த அனுமதி வழங்கப்பட்டது. ஆலயத்தின் மறுசீரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில், ஆலய வளாகத்தில் நேற்றுக் காலை வழிபாடு நடத்த மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆலய பங்கு மக்கள் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே வளாகத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அதுமாத்திரமன்றி நீர்கொழும்பின் சகல வீதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, ஆலயத்தை அண்மித்த வீதியில் பயணிக்கும் சகல வாகனங்களும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. கடந்த 21ஆம் திகதி ஈஸ்ரர் ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில், சுமார் 250 பேர் உயிரிழந்தனர். அதில் கட்டுவாப்பிட்டிய சென். செபஸ்டியன் தேவாலயத்தில் மாத்திரம் 114 பேர் உயிரிழந்தனர். (ஒ.5)

# தாக்குதலில் காயமடைந்த அமெரிக்கவாசி உயிரிழப்பு

இலங்கையில் ஈஸ்ரர் ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் காயமடைந்த அமெரிக்க அதிகாரியொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அமெரிக்க பொது ஆலோசனை அலுவலகத்தின் வணிக சட்ட மேம்பாடு தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தின் பன்னாட்டு நிபுணர் செல்ஸா டெகமினாடாவே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சங்ரிலா நட்சத்திர விடுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் செல்ஸா கடுமையான காயங்களுக்கு உள்ளாகி, மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு கொண்டுசெல்லப்பட்டார். சிகிச்சை பலனின்றி அவர் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்ததாக அமெரிக்க பொதுத்துறை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. செல்ஸாவின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கும் அதேவேளை, இலங்கை உள்ளிட்ட உலகின் சகல நாடுகளும் கைகோர்த்து பயங்கரவாதத்தை முறியடிக்க வேண்டுமென அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# அடிப்படைவாதத்தைத் தவிர்த்து நல்லொழுக்கத்தை கற்பியுங்கள்

## பிரிகேடியர் அசாட் இசடீன் அறிவுரை

மூதூர், மே 10

முஸ்லிம்களின் மீது ஏற்பட்டுள்ள சந்தேக மான நிலமையை நாம் ஒன்றிணைந்து தீர்க்க வேண்டும். அடிப்படைவாதக் கருத்துக் களைப் பரவவிடாது நல்லொழுக்கங்க ளைக் கற்பிக்கும் இடமாகப் பள்ளிவாசல்கள் திகழ வேண்டும்.



இவ்வாறு கிழக்கு மாகாணக் கட்ட ளைத் தளபதி பிரிகேடியர் அசாட் இசடீன் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலமை தொடர் பாக திருகோணமலை வடகரை வீதி யில் உள்ள பள்ளிவாசலில் உலமா சங்கப் பிரதிநிதிகள், இஸ்லாமி பிரதிநிதிகள், இராணுவத்தில் உள்ள இஸ்லாமிய உயர் அதிகாரிகளுக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாட லின்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

இஸ்லாமியர்கள் இலங்கைத் தீவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ் கின்றனர். கடந்த காலங்களில் தீவிரவா தத்தை ஒழிப்பதற்கு அரசுக்கு நம்பிக் கைகுரியவர்களாக இருந்துள்ளனர். தற்போது நடந்துள்ள சம்பவங்கள் அவற்றை மாற்றியமைத்து முஸ்லி ம்கள் மீது சந்தேகக் கண்ணோட்டதை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் 22 லட்சம் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். ஆனால் இன்று எம்மி டம் ஒற்றுமை இல்லாது காணப்படுகின் றது. பல பிரிவுகளுக்கும் பல அடிப்படை வாதக் கருத்துக்களைப் பரப்பி வரு கின்றோம். இந்த நிலமை மாற வேண் டும். நாம் ஒன்றுமையாக வாழ்ந்து எம் மீது எழுந்துள்ள சந்தேகத்தை ஒரு சில ஆண்டுகளில் சீர் செய்ய வேண்டும்.

இப்படியான கலந்துரையாடல்களை நாம் கிண்ணியா, மூதூர் ஆகிய பகுதி களில் நடத்தினோம். அவற்றில் 40 முதல் 60 வயதானவர்களே கலந்து கொண்டனர். இளைஞர்களும் இன்று அடிப்படைவாதக் கருத்துகளுக்கு இலக் காகி வருகின்றனர். அவர்களுக்குத் தெளிவுபடுத்தி நல்ல விதத்தில் வழிந டத்த வேண்டும்.

இஸ்லாத் என்பது சிறந்த மதம். அதைக் கடைப்பிடிப்பவர்கள் நில அடிப்படைவா தச் செயல்களால் இந்த மதத்தைச் சிலர் தவறாகப் பேசுகின்றனர். இந்த நில மையை மாற்றி இனமாக இந்த நாட் டின் வாழும் நாம் பெரும்பான்மை இன மக்களோடு எவ்வாறு ஒன்றுமையாக வாழ்ந்து எமது உரிமைகளைப் பெற்று சுதந்திரமாகவும், சந்தோசமாகவும் வாழ வேண்டும் என்று போதிக்க வேண்டும். என்றார்.

இந்தக் கூட்டத்தில் இஸ்லாமிய இரா ணுவ உயர் அதிகாரிகளான கேணல் பௌமி கிஜிரான், மேஜர் றியாஸ் முக மட் உட்பட உயர்அதிகாரிகள்8பேர்கலந்து கொண்டனர்.

(எ-40,46)

## ஸஹ்ரானால் ஆபத்து என்று 2017ஆம் ஆண்டு கூறினோம்

### முஸ்லிம் அமைப்பு தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 10

ஸஹ்ரானைப் பற்றி அரசதலைவர், தலைமை அமைச்சர், உள்ளிட்டவர்களுக்கும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவி னருக்கும் எழுத்து மூலமாக அறிவித்தோம். ஸஹ்ரானின் நடவடிக்கை நாட்டுக்கு மோசமானது என்பதால் அவரைக் கைது செய்யுமாறு 2017 இல் மார்ச் 13 ஆம் திகதி காத்தான்குடியில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். ஆனால் எவரும் கண்டுகொள் ளவில்லை.

இவ்வாறு புதிய தகவலை வெளியிட்டுள்ளது, காத்தான்குடி யில் அமைந்துள்ள அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய் யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பு அமைப்பு.

காத்தான்குடியில் அமைந்துள்ள குறித்த நம்பிக்கைப் பொறுப்பு அமைப்பின் செயலர் மௌலவீ கே.ஆர்.எம். ஸஹ்லான் றப்பானீ நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தாக்குதல் சம்பவங்களில் முக்கிய சூத்திரதாரியான ஸஹ்ரான் 2011ஆம் ஆண்டு தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பை உருவாக்கினார். இவர் முஸ்லிம்கள் மத்தியி லும் ஏனைய சமூகங்கள் மத்தியிலும் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையிலும் வன்முறைகளைத் தூண்டும் வகையிலும் பரப்புரைகளை மேற்கொண்டார். இலங்கை நாட்டுக்கு எதிராகவும் பன்னாட்டுத் தீவிரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ்க்கு ஆதரவாகவும் பரப்புரை செய்தார்.

இவரது தேசவிரோத தீவிரவாத செயற்பாடுகளை கண்டித்து காத்தான்குடி முஸ்லிம் மக்கள் சார்பில் காத்தான்குடியில் 2017 மார்ச் 13ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

ஸஹ்ரானைக் கைது செய்யுமாறும் தேசிய தௌஹீத் ஜமாத்தைத் தடைசெய்யுமாறும் பொதுமக்களின் பாது காப்பை உறுதிப்படுத்துமாறும் கோரிக்கைகள் விடுத்தோம். அது தொடர்பான மனு ஒன்றை காத்தான்குடி பிரதேச செய லருக்கும், காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக் கும் கையளித்தோம்.

தேசிய தௌஹீத் ஜமாத்தினதும் ஸஹ்ரானின் தீவிரவாத செயற்பாடுகள் தொடர்பிலும் முறைப்பாடு ஒன்றை 2017 இல் மார்ச் 27 ஆம் திகதி அரசதலைவர், தலைமைஅமைச் சர், உயர் நீதிமன்ற நீதியரசர், நீதித்துறை அமைச்சர், சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சர், பாதுகாப்பு இரா ஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலர், சட்டமா அதிபர், பொலிஸ் மாஅதிபர், நீதிச் சேவை ஆணைக்குழு, பயங்கரவாதத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி அனைவரி டமும் நாம் காத்தான்குடி முஸ்லிம் மக்கள் சார்பில் கைய ளித்தோம்.

இவர்களது செயற்பாடுகள் காத்தான்குடியிலும் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களிலும் முஸ்லிம்களிடை யேயும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மக்கள் மத்தியிலும் மதக் கலவ ரத்தை ஏற்படுத்தும் என்று நாம் அச்சமடைந்தோம்.

இவர்களது வன்முறைகளும் அத்துமீறல்களும் நாட்டின் பாதுகாப்பையும், நல்லிணக்கத்தையும் பாதிக்கும் என்பது டன் மீண்டும் ஒரு வன்முறைக் கலாசாரத்தை ஏற்படுத்துவ தாக அமைந்துவிடும் என்று கவலைப்பட்டோம். இந்த விடயங்களை நாம் 2017ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதிய முறைப்பாடு ஒன்றில் தெளிவாகக் கூறியிருந்தோம் என்று தெரிவித்தார்.

பிற்காலத்தில் தோன்றிய இஸ்லாமிய பெயர் தாங்கிய சில இயக்கங்களின் அடிப்படைவாதப் போக்குகள் காரணமாக சமய, சமூக வேறுபாடுகள், இன அடிப்படை வாதம் என்பன தோற்றுவிக்கப்பட்டு இஸ்லாமிய சமாதான தத்துவங்க ளுக்கு உலகளாவிய ரீதியில் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. இலங்கை வாழ் முஸ்லிம்கள் வரலாற்றின் ஆரம்ப காலத் தில் இருந்தே ஒற்றுமையையும் சமாதானத்தையும் சகோ தரத்துவத்தையும் மத நல்லிணக்கத்தையும் பின்பற்றும் இஸ்லாமிய வழிமுறையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சார்ந்த ஸ_பித்துவ தரீகா வழிமுறையை அடிப்படையாகக் கொண்டவர்கள்.

தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த இஸ்லாமிய சாயம் பூசப்பட்ட சில தீவிரவாத அமைப் புகளே. அவர்கள் இஸ்லாத்தை தவறாகப் புரிந்துள்ளனர் - என்று மேலும் தெரிவித்தார்.

(த-46)

## கிழக்கைத் தாரைவார்த்ததே குண்டு வெடிப்புக்கு காரணம்

### ஈரோஸ் அமைப்பின் தலைவர் கூறுகிறார்

மட்டக்களப்பு, மே 10

முஸ்லிம்களுக்கு கிழக்கு மாகாணத்தைத் தாரைவாத் துக் கொடுத்ததன் விளைவு தான் இந்த அராஜகக் கும்பலு டைய நாசகாரச் சதி. தமிழ் மக்கள் கையில் வடக்கு, கிழக்கு, மலையகஅதிகாரம் இருக்குமென்றால் நாசகாரச் சதிக்கு இடமளித்திருக்கமாட் டோம். நாங்கள் தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பை நம்பி ஏமாந்தவர்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார், ஈழவர் ஜனநாயக முன்னணி அமைப்பின் (ஈரோஸ்) தலை வர் இ.பிரபாகரன்.

மட்டக்களப்பு கல்லடி வொய்ஸ் ஒவ் மீடியா நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப் பிலே அவர் மேலும் தெரிவித் ததாவது:


குருதி வெள்ளம் ஓடும் என்று கூறிய ஹிஸ்புல்லா விசாரிக்கப்பட வேண்டும். இவருக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண் டும்.

அரசியல் ரீதியாக உரிமைக ளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் அதிகாரங்க ளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் கடந்த மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப் புக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் 13 மாகாண சபை உறுப்பினர்களை வழங்கியிருந்தார்கள். தாம் ஆட்சியமைத்து கிழக்கு மாகா ணத்திலுள்ள அதிகாரங்கள் இங்கேயுள்ள தேவைகள் என் பவற்றை பூர்த்தி செய்யலாம் என்றே வழங்கினார்கள். ஆனால் முதுகெலும்பில்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 ஆசனங்களை வைத்துக் கொண்டு 7 ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட முஸ்லிம்க ளுக்கு கிழக்கு மாகாணத் தைத் தாரைவாத்துக் கொடுத் தது. இதன் விளைவுதான் இந்த அராஜகக் கும்பலுடைய நாசகாரச் சதி -என்றார். (து)

## தீவிரவாதிகளை அழிக்க ஆயுதப் பயிற்சி தாருங்கள்

### கிழக்கு இராணுவத் தளபதியிடம் பள்ளிவாசல் பேஷ் இமாம் கோரிக்கை

ஏறாவூர், மே 10



இஸ்லாமியர்கள் என்று கூறிக் கொள் ளும் தீவிரவாதிகளை ஒழிப்பதற்கு எனக்கு ஆயுதப் பயிற்சி தாருங்கள் என்று கோரிக்கை விடுத்துள்ளார் பள்ளிவாசல் ஒன்றின் பேஷ் இமாமான ஏ.சி. அப்துல் மஜீத். கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி பிரிகேடி யர் அசாத் அசாட் இசடீனுடனான சந்திப்பொன் றின்போது அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நெருக்கடியாகவுள்ள இயல்பு நிலைக்குத் திரும்ப மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் ஒரு பகுதி யாக படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமூக ஆர்வலர்கள் பங்குபற்றிய கூட்டம் நேற்று ஏறாவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் ஊர்ப் பிரமுகர்கள், பள்ளிவா சல் நிர்வாகிகள், மௌலவிகள், சமூக ஆர்வலர் கள், இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண் டனர்.

பிரிகேடியர் அஷாத் இஸ்ஸதீனிடம் ஏறாவூரின் பேஷ் இமாமான ஏ.சி. அப்துல் மஜீத் அங்கு தெரி வித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் ஏறா வூர்ப்பற்றுப் பிரதேசத்திலுள்ள சில கடும்போக்கா ளர்கள் அன்றாடங்காய்ச்சிகளான சிறிய இடம்பெ யர் முஸ்லிம் வியாபாரிகளை தமிழ்ப் பிரதேசங்களுக்குள் நுழையக் கூடாது என அச்சு றுத்துகின்றனர். இதனால் பல நூற்றுக் கணக்கா னோர் ஜீவனோபாயமின்றி வாடுகின்றனர்.

ஆனால் தமிழ் சகோதரர்கள் பல நூற்றுக் கணக் கானோர் முஸ்லிம் நகரப் பிரதேசங்களுக்கு வந்து தங்களது தொழில்களை மேற்கொண்டு வருமா னம் ஈட்டுவதில் எந்தவித தடங்கலோ அச்சுறுத்தல் களோ இல்லை. முஸ்லிம் ஏழைகளுக்குத்தான் இத்தகைய அநீதம் இழைக்கப்படுகின்றது.

நான் தற்சயம் 57 வயதைக் கடந்துள்ளேன். முஸ் லிம்களுக்குத் தலைக்குனிவை ஏற்படுத்திய தீவி ரவாதிகளை ஒழித்துக் கட்டுவதில் என்னாலான பங்களிப்பைச் செய்ய முடியும் என நம்புகின்றேன். அதற்காக எனக்கு ஆயுதப் பயிற்சி தாருங்கள் - என் றார்.

(எ-46)

## மகாநாயக்கர்களின் அசௌகரியங்களைத் தீர்க்க நடவடிக்கை

### புதிய தலைமை நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு, மே 10

நீதிமன்றச் செயற்பாடுகளின் போது மகா நாயக்கர்கள் எதிர்கொள்ளும் அசௌகரி யங்களை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்ப டும் என்று தலைமை நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய தலைமை நீதியரசராக நிய மிக்கப் பட்டுள்ள ஜயந்த ஜயசூரிய நேற்று கண்டி அஸ்கிரிய மகாநாயக்கரை சந்தித்து ஆசி பெற்றார். அதனைத் தொடர்ந்து மல் வத்து மகாநாயக்கர் திப்படுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரை சந்தித்தார். இதன்போது, நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்ந்து தாமதப்படுத்தப்படுவதன் கார ணமாக மகாசங்கத்தினர் கடுமையாக பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

மகா விகாரையால் வழங்கப்படும் தீர்ப் பைவிட நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பின் மீதே மக்கள் அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால், இடம்பெ றும் தாமதங்கள் காரணமாக புத்தசா சனம் அழியும் நிலையே காணப்படுகி றது எனக் குறிப்பிட்டனர்.

அதற்குப் பதிலளித்த தலைமை நீதியர சர், நீதிமன்றத்தில் பல்வேறு நபர்கள் முன்னிலையாகி வழக்கு தொடர்கின்ற னர். ஏற்படும் தாமதங்கள் காரணமாக மகாசங்கத்தினர் சிக்கலை எதிர்கொள் கின்றனர் என்பது உண்மையான விட யம். மகாசங்கத்தினர் எதிர்கொள்ளும் இன்னல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(ஒ,5)

# தற்கொலைக் குண்டுதாரிகள் இந்தியா சென்றமை உறுதி

கொழும்பு, மே 10

இலங்கையில் குண்டுத்தாக்குதலை நடத்தியவர்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு பெங்களூர், கொச்சி, சென்னை, மும்பை, டெல்லி போன்ற முக்கிய நகரங்களுக்குச் சென்றுள்ளமையை இந்திய புலனாய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

வர்த்தக நுழைவிசைவில் இந்தியாவுக்கு வந்துள்ளமையை உறுதி செய்துள்ள இந்தியப் புலனாய்வாளர்கள் அவர்கள் எந்தவித பயிற்சியும் பெறவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இந்தியப் புலனாய்வுத் துறை மேலும் தெரிவித்ததாவது:

இல்காம் அகமது மொஹமட் இப்ராஹிம், அவரது மூத்த சகோதரர் இன்சாப் அஹமட் ஆகியோரும் தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர்களில் அடங்குவர். இவர்கள் 2 பேரும், இந்தியாவுக்கு கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு 2012ஆம் ஆண்டில் வர்த்தக நுழைவிசைவில் வந்து சென்றுள்ளனர். பெங்களூர், கொச்சி, சென்னை, மும்பை, டில்லி ஆகிய நகரங்களுக்கு அவர்கள் வந்து சென்றுள்ளனர்.

இலங்கை இராணுவத் தளபதி தெரிவித்தது போல, இருவரும் காஷ்மீருக்கு வரவோ அல்லது பயங்கரவாத பயிற்சி பெறவோ இல்லை.

இவர்கள் 2 பேரின் தந்தை, இலங்கையில் மசாலா நிறுவனம் நடத்தி வருகிறார். கொழும்பை தலைமையிடமாகக் கொண்டு அந்த நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தையடுத்து, அவரை இலங்கைப் பொலிஸார் கைது செய்துவிட்டனர். அவரது நிறுவனம், இந்தியாவின் நம்பகமான வர்த்தக நிறுவனங்களின் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது. கேரளா முதல் டில்லி வரையிலும் அவரது நிறுவனத்துக்கு வர்த்தகத் தொடர்பு உள்ளது.

குண்டுவெடிப்புகளை நடத்திய பயங்கரவாதிகள், இந்தியா வந்து சென்றதாக இலங்கை தெரிவித்துள்ள நிலையில், அவர்களிடம் மேலும் இது குறித்து தகவல் இருக்கலாம் எனத் தெரிகிறது.

அந்தத் தகவல், தெற்காசிய பிராந்திய பாது காப்புக்கு உதவியாக இருக்கலாம். இதனால் அந்த 2 பேரும், இந்தியாவுக்கு வந்து சென்றது, எதற்காக வந்தனர் என்பது தொடர்பான விவரங்கள் இலங்கையிடம் கோரப்பட்டுள்ளது. - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## அடிப்படைவாதம் வளர்வதற்கு சமூக ஊடகங்களே காரணம்

### கண்டி இராணுவ பொறுப்பதிகாரி கூறுகிறார்

கொழும்பு, மே 10

அடிப்படை வாதம் வளர முக்கிய காரணம் சமூக வலைத்தளங்களே. இதனைச் சமூகத்தினர்தான் இல்லாமற் செய்ய வேண்டும். வீட்டில் அடிப்படைவாதி இருப்பாராயின் அதற்கு அனுமதியளிக்க வேண்டாம்.

இவ்வாறு கண்டி மாத்தளை மாவட்டங்களின் இராணுவப் பொறுப்பதிகாரி லெப்டினன் கேணல் டப்லியூ. எம். பி. டப்லியூ அலுவிஹார தெரிவித்தார்.

அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் ஏற்பாட்டில் அக்குறணையின் பாதுகாப்புத் தொடர்பாக அக்குறணை நகரிலுள்ள பள்ளிவாசல்களின் தலைமை நிர்வாகி மத்தியில் விளக்கமளிக்கும் நிகழ்வு அக்குறணை அஸ்னா ஜும்ஆப் பள்ளிவாசல் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தீவிரவாதச் செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் மிக சொற்பமான அடிப்படைவாதிகளே. முஸ்லிம்கள் 22 இலட்சம் பேர் உள்ளனர். சமூகத்துக்கு முரண்பாடாகச் செயற்படுபவர்கள் தமது சமயத்துக்குள் மார்க்க வழிமுறைகளுக்கு எதிராகச் செயற்படுபவர்களை கவனத்தில் கொள்ளவேண்டும். இவர்கள் தான் மிகவும் மோசமானவர்கள். இவர்கள் பற்றி அறிந்திருந்தால் பொலிஸாருக்கு தெரியப்படுத்தல் அவசியம்.

**சந்தேகத்துடனேயே பார்க்கவேண்டும்**

தற்போதுள்ள நிலையில் எந்த மனிதனையும் முழு நம்பிக்கையுடன் பார்க்க முடியாது. சற்றுச் சந்தேகத்துடன் பார்த்தல் வேண்டும். நாம் எப்படிப் பழகினாலும் மனதில் கொஞ்சம் சந்தேகம் வைத்துப் பார்க்க வேண்டும். நமக்குப் பார்க்கும்போது எல்லாம் நல்லது என்றுதான் தோன்றும். ஆனால் அவர் பின்னால் உள்ள விசயங்கள் எமக்குத் தெரியாது. அவர் பின்னால் வந்து குத்தும் போதுதான் தெரியவரும் - என்றார். (த)

## ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒவ்வொரு சட்டம்வேண்டாம்

### பொதுச் சட்டமே தேவை என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, மே 10

சட்டம் நாட்டில் உள்ள எல்லோருக்கும் ஒன்றாக இருக்கவேண்டும். ஒவ்வொரு பிரிவினருக்கும் சட்டம் ஒவ்வொரு விதமாக இருக்கமுடியாது. அடிப்படைவாதத்தை தோற்கடித்து நாட்டைக் கட்டியெழுப்ப பொதுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பின் பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. ஆனால், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தொடர்பிலேயே அதிகம் கதைக்கின்றார்.

தற்கொலைக்குண்டுதாரிகள் தேவாலயங்கள். ஹோட்டல்களுக்கு குண்டு வைக்கச் சென்ற வேகத்தை விடவும் அதிக வேகத்தில் இந்தச் சட்டவரைவை நிறைவேற்றவே தலைமை அமைச்சர் ரணில் முனைகின்றார்.

நாட்டில் இடம்பெற்ற தாக்குதலுடன் தொடர்புடைய இஸ்லாமிய அடிப்படைவாதக் குழு கடந்த 7 ஆண்டுகளாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இந்தக் காலப் பகுதியில் அவர்கள் தமது போதனைகளையும், அடிப்படைவாதக் கருத்துக்களையும் பரப்பி வந்துள்ளனர். அவர்கள் இவ்வாறு செய்யும்போது முஸ்லிம் மதத் தலைவர்கள் அது தொடர்பில் கதைக்கவில்லை. அது படிப்படியாக வளர்ச்சியடைந்து 300 உயிர்களை காவுகொள்ளும் வரையில் சென்றுள்ளது.

அடிப்படைவாதத்தை தோற்கடிக்கும் பொறுப்புக்கள் முஸ்லிம் மக்களிடமே இருக்கின்றது.

இனங்களை அடிப்படையாகக் கொண்டு கட்சிகள் உருவாக்கப்படும்போது வாக்குக்காக இனவாதத்தையே பயன்படுத்துவார்கள். கட்சிகள் பிளவுபடும்போது இனவாதம் மேலும் வளரும். இனவாதம் எங்கிருந்து வந்தாலும் இனவாதமே. இனங்களை அடிப்படையாகக் கொண்டு கட்சிகள் உருவாக்கப்படுவதை நிறுத்த வேண்டும்-என்றார். (ஒ.5.31)

## சுழிபுரத்தில் ஒரு குடும்பத்துக்கு ராணுவத்தால் வீடு கையளிப்பு



யாழ்ப்பாணம், மே 10

வறுமைப் கோட்டுக்குட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு சுழிபுரம் பகுதியில் இராணுவத்தினர் வீடு ஒன்றை அமைத்து வழங்கியுள்ளனர். சுழிபுரம் தொல்புரம் மத்தியில் உள்ள குடும்பம் ஒன்றுக்கே இராணுவத்தினர் வீடு அமைத்து நேற்றுக் கையளித்துள்ளனர். யாழ்ப்பாணப் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி நேரடியாகச் சென்று வீட்டைக் கையளித்தார்.

இலங்கையின் 15வது இராணுவ தேசிய பாதுகாப்பு படையினரின் முழுமையான சரீர உழைப்பின் மூலமாக வீடு கட்டப்பட்டது என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.

வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இராணுவம் மக்கள் மத்தியில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. வறுமைக் கோட்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவி வழங்குவதில் இருந்து ஆரம்பித்த இராணுவத்தினரின் உதவி, தற்போது மக்களுக்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வீடு கட்டிக் கொடுப்பது வரை நீண்டு செல்கிறது.

அரச அதிகாரிகளால் வீட்டுத் திட்டங்களில் புறக்கணிக்கப்பட்ட பலர் தங்களுக்கான வீடுகளை வேண்டி இராணுவத்தினரிடம் சென்றுள்ளனர். அவர்களை அரவணைத்து இராணுவத்தினரும் அவர்களுக்கான வீட்டை தமது சரீர உழைப்பில் அமைத்துக் கொடுக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் மக்கள் மத்தியில் அவர்களுக்கு வரவேற்பும் கிடைத்து வருகிறது. (எ-21)

## பயணிகளை இடைநடுவினில் விட்டுச் செல்லும் பேருந்துகள்

கிளிநொச்சி, மே 10

ஆனையிறவுச் சோதனைச் சாவடியில் சோதனைக்காக இறக்கப்படும்போது சிலரைப் பேருந்துகள் விட்டுச் செல்லும் நிலமை உள்ளது என்று பயணிகள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

கடந்த மாதம் நாட்டில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து வடக்கு மாகாணத்தின் பல இடங்களில் வீதிச் சோதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வாகனங்களில் செல்லும் பயணிகள் இறக்கப்பட்டுச் சோதனை செய்யப்படுகின்றனர். ஆனையிறவிலும் பேருந்துகள் நிறுத்தப்பட்டுச் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது. சம நேரத்தில் பல பேருந்துகள் நிறுத்தப்பட்டுச் சோதனை மேற்கொள்ளப்படுகின்றன.

விரைவாக முந்திச் செல்ல வேண்டும் என்ற அவசரத்தில் பயணிகளை விட்டுவிட்டுப் பேருந்துகள் சென்றுவிடும் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளன என்று மக்கள் கூறுகின்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை காலை வவுனியாவில் இருந்து வந்த பேருந்து 4 பயணிகளை இவ்வாறு விட்டுச் சென்றது என்றும், அவர்கள் அடுத்த பேருந்தில் ஏறி யாழ்ப்பாணம் வந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்தின் சாரதிகள், நடத்துநர்கள் பயணிகள் தொடர்பில் அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## கைக்குண்டுகள் கால்வாயில் மீட்பு

பதுளை, மே 10

பண்டாரவளை பனாகல கொந்தகெல முதன்மை வீதியோரம் கால்வாயிலிருந்து கைக்குண்டுகள் இரண்டு நேற்று மீட்கப்பட்டன.

தியத்தலாவை இராணுவத்தினர் அவற்றைச் செயலிழக்க வைத்தனர் என்று பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

எவரும் கைதுசெய்யப்படவில்லை. விசாரணை இடம்பெறுகிறது - என்றும் தெரிவித்தனர். (த)

## முஸ்லிம் மீதான தப்பபிப்பிராயத்தை சீர்செய்வது பற்றிச் சிந்திக்கவேண்டும்

கொழும்பு, மே 10

நாட்டில் அனைத்து இன மக்களுடனும் ஒன்றிணைந்து வாழ்ந்த முஸ்லிம் மக்கள் குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்போதைய சூழ்நிலையில் முஸ்லிம்கள் தொடர்பில் பரவலாக ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையீனத்திலிருந்து எவ்வாறு வெளிவருவது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் ஊடகப்பிரிவுச் செயலாளர் ஷேக் பஸில் பரூக் தெரிவித்திருக்கிறார்.

குண்டுத்தாக்குதல்களுக்கு ஏதுவான காரணங்கள் மற்றும் தீர்வுகள் குறித்து ஆராய்வதை நோக்காகக் கொண்டு பெலவத்த, பத்தரமுல்லையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியோலயத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களுக்கும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் சிவில் சமூகத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் புத்தஜீவி களுக்குமிடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது. தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி மாஸ் யூசுப், குண்டுத்தாக்குதல்கள் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒன்று. இத்தகைய பயங்கரவாதத்தை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு முஸ்லிம்கள் மாத்திரமன்றி அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் - என்றார்.

மருத்துவர் ரேய்ஸ் முஸ்தபா, இத்தகைய அடிப்படைவாதிகளின் செயற்பாடுகள் குறித்து முஸ்லிம் சமூகம் முன்னரேயே பாதுகாப்புப் பிரிவினருக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றது. அவர்கள் தொடர்பிலான தகவல்களை நாங்கள் வழங்க முடியுமே தவிர, அவர்களை எதிர்த்து நேரெதிராக நின்று சண்டையிட முடியாது. அவர்கள் பயங்கரவாதச் செயற்பாட்டில் ஒன்றிணைய அவர்களைத் தூண்டியது எது என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும் -என்றார். (த-61)

## ரூபாவின்...

விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சிறப்பு வியாபார பண்ட அறவீடுகள் கட்டளைச்சட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அமைதியான சூழல் இருந்துள்ள நிலையிலும் 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இருந்த 9 வீத பொருளாதார அபிவிருத்தியைவிட தற்போது 3.2 வீதமாக பொருளாதார அபிவிருத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நிலைமையே நாட்டில் இருந்தது. அப்படியிருந்தும் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது எப்படி என்று தேடிப்பார்க்கவேண்டும். நாங்கள் அன்று 9 வீத பொருளாதார அபிவிருத்தி வேகத்தை மேற்கொண்டு ஆசியாவில் சீனாவின் பொருளாதார வேகத்துக்கு பின்னால் இரண்டாம் இடத்தில் இருந்தோம். ஆனால் இன்று ஆசிய நாடுகளில் 28ஆம் இடத்துக்கு இவர்கள் நாட்டின் பொருளாதார அவிருத்தி வேகத்தை பின்னுக்கு கொண்டு சென்றுருக்கின்றனர். அதேபோன்று 2014, 2018 காலப்பகுதியில் நாட்டில் மக்கள் தொகை 8 இலட்சத்து 92ஆயிரமாக அதிகரித்திருக்கின்றது. ஆனால் இந்த காலப்பகுதில் 5 இலட்சத்து 39ஆயிரம் பேருக்கு தொழில் இழக்கப்பட்டிருக்கின்றது. மக்களின் வாழ்வாதாரத்தை இல்லாமலாக்கி இருக்கின்றனர்.

அத்துடன் ஆட்சியாளர்கள் கடந்த 4 வருடங்களில் ரூபாவின் பெருமதியை 20 வீதத்தால் தாழ்த்தியுள்ளனர். எந்தவொரு காலத்திலும் 4 வருடங்களில் நாட்டின் பணம் 20 வீத்தத்தால் குறைவடையவில்லை. போர்க் காலத்திலும் இந்த நிலை ஏற்படவில்லை. அதேபோன்று நாங்கள் ஆட்சியை ஒப்படைக்கும் போது நாட்டின் கடன் சுமை 70.1 வீதமாகவே இருந்தது. ஆனால் தற்போது கடன் சுமை 82.9 வீதமாக அதிகரித்துள்ளது. மகிந்த ராஜபக்ச ஆட்சி செய்த 9 வருடங்களில் பெற்ற கடனைவிட 4 வருடங்களில் அரசு கடன் பெற்றிருக்கின்றது. அதனால் பங்குச்சந்தை வீழ்ச்சியடைந்திருக்கின்றது என்றார். (ம-31)

## அகமதிய...

பராமரிக்கும் பொறுப்பை வடமாகானம் ஏற்க வேண்டும் என்று சிவசேனை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

முகமதியர்கள் கடந்த 150 ஆண்டுகளாகவே யாழ்ப்பாணத்தில் பெருமளவு வாழ்கின்றனர். ஐம்பதுகளில் அபுசாலி துணை முதல்வராக மாநகர சபையில் இருந்தார். காதர் முதல்வராக இருந்தார். வண்ணார் பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் முகமதிய மாணவர்களின் தொகை, இந்து மாணவர்கள் தொகைக்குச் சமமாக இருந்தது. அனைத்து உயர்கல்வி நிலையங்களிலும் முகமதிய மாணவர்கள் பயின்ற காட்சிகள், இணக்கமாக இருந்து வாழ்ந்த காட்சிகள், அனைவரின் நெஞ்சிலும் நிழலாடும்.

சிங்களவர் வெதுப்பகங்கள் நடத்தினர். வீடு வீடாகக் கூவி விற்றனர். நகைக் கடைகள் நடத்தினர். சிங்கள மாவித்தியாலயத்தில் அவர்களின் குழந்தைகள் பயின்றனர். ஆரிய குளம் என்றாலே சிங்களச் சமூகத்தின் நடுவமாகாதா? நாக விகாரை வழிபாட்டிடமாகாதா?

1970களின் பின்னர் யாழ்ப்பாணத்தவரின் கண்ணோட்டம் மாறியது. வெளிநாட்டவர் என்றாலே ஐயமுற்றனர். சிங்களவர் மீது வெகுண்டனர். எடுத்துக்காட்டுக்கு சொல்வதென்றால் யாழ்ப்பாணத்திற்கு அமைதியை பரப்ப வந்த யப்பானியப் புத்தத் துறவி ஒருவர் போர்க்காலம் தொடங்க முன்பே சுட்டுக் கொல்லப்பட்டார். போர்க் காலத்தில் பல்லாயிரவராய் முகமதியர்கள் ஒரே நாளில் வெளியேறினர். சிங்கள மகா வித்தியாலயத்தை மூடினர். யாழ்ப்பாணத்தின் புன்முகத் தன்மை வாடியது. பாதுகாப்பின்மையே ஈழத் தமிழரின் மனக் கோலமானது. அந்நியர் எவரும் ஐயத்துக்கு உரியவரானார்.

இந்த வாரம் பாகித்தானிய ஆப்கானித்தானிய ஏதிலிகளை வடக்கே அனுப்பக் கூடும் என்ற செய்தி பாவியது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பார்க்கிறார்கள். ஆங்கிலேயத் திருச் சபையினர், பாகித்தானிய ஆப்கானித்தானிய கிறித்தவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்தமை வரவேற்பதற்குரிய மனிதநேயம். மணிமேகலையே வரவேற்ற ஈழம், மாலிக்காபூர்ப் படையெடுப்பால் ஏதிலிகளானவரை வரவேற்ற ஈழம், பாகித்தானிய ஆப்கானித்தானிய ஏதிலிகளை வரவேற்கும், விருந்தோம்பும் பாதுகாக்கும்.

ஏறத்தாழ ஆயிரத்து அயிரத்து 700 ஏதிலியர். அவர்களுள் சில நூறு கிருத்தவர்கள். ஏனையோர் அகமதிய முகமதியர். யாழ்ப்பாணத் தெருக்களில் அகமதிய முகமதியர்கள் வணிகம் செய்த காலங்களில், வெள்ளைப் போர்வை உடையுடன் முகத் திரையுடன் அவ்வீட்டுப் பெண்கள் மகிழ்வாகப் பாதுகாப்பாக நடந்து திரிந்தனர்.

அகமதி முகமதியர்கள் எங்கிருந்தாலும் யாருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லாமல் வாழ்பவர். அவர்களுடைய கருத்தை மற்றவர்கள் மீது திணிக்காதவர்கள். சிறந்த வணிகர். அவர்கள் சமூக முகமே வாடிக்கையாளரை முகம் கோணாமல் பார்ப்பதுதான். அகமதிய முகமதியர் அயலாரை நேசித்தனர். அயலாரின் முகம் கோணாமல் நடந்து கொண்டனர்.

இத்தகைய முகமதியர்கள் தான் இப்பொழுது ஏதிலிகளாகப் பாகித்தானில் இருந்தும் ஆப்கானித்தானில் இருந்தும் இலங்கை வந்திருக்கிறார்கள். சைவத்துக்கும் தமிழுக்கும் அவர்களால் பாதிப்பு ஏதும் வராது. சைவத் தமிழர் விருந்தோம்பலில் மேன்மையானவர். அகமதிய முகமதியர்களை வரவேற்றுப் பாதுகாத்து அவர்கள் நாடு திரும்பும் வரை அவர்களுக்கு வாழ்வாதாரங்கள் கிடைக்க வழி செய்வது ஈழத் தமிழர் கடமை - என்றுள்ளது. (ம)

## பல்கலை...

மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இன்று சந்திப்பு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின்போது பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலர் ஆகியோர் கைது செய்யப்பட்ட நிலையில் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு மாணவர்களின் விடுதலை தொடர்பில் துரித நடவடிக்கையை கோரும் முகமாகவே இன்றைய தினம் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அரச தலைவரைச் சந்திக்கவுள்ளனர். (ம-105)

## 50...

என்ற தகவல் கிடைத்துள்ளது. இந்த விடயத்தை எளிதாக எண்ணாமல் பாதுகாப்புத் துறை அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பொதுபலசேனா சுட்டிக்காட்டியுள்ளது.

ராஜகிரியவில் அமைந்துள்ள பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பொதுபலசேனா அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் விதாரந்தெனிய நந்த தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

தேசிய பாதுகாப்பு இன்னமும் உறுதியான நிலையை அடையவில்லை. பொது மக்களின் பாதுகாப்பு இன்னும் முழுமையாக உறுதிப்படுத்தப்படவில்லை. மக்களின் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்த வேண்டிய அரசு தனது பொறுப்பை முறையாக நிறைவேற்றவில்லை.

பயங்கரவாத செயற்பாடுகள் நாட்டில் இருந்து இன்னும் முழுமையாக ஒழிக்கப்படவில்லை. தொடர் குண்டுத்தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய தற்கொலை குண்டுதாரிகளின் எண்ணிக்கையை வரையறுத்துக் குறிப்பிடவும் முடியாது. பன்னாட்டுச் சக்திகளின் உதவியுடன் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இந்தக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் - என்றார். (ம)

## மின்...

மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நீர்மின் உற்பத்தி நிலையத்தினூடான மின் உற்பத்தி வீழ்ச்சி மற்றும் மின்சாரத்துக்கான நாளாந்த கேள்வி அதிகரித்தல் ஆகிய காரணிகளால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக, அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார். இதனால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு மின்சக்தி அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. குறிப்பிடத்தக்களவு மழைவீழ்ச்சி பதிவாகிய போதிலும் நீர்மின் உற்பத்தி செய்யப்படும் நீர்நிலைகளில் 32 வீத நீர்மட்டமே காணப்படுவதாகவும் மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

## முஸ்லிம்கள்...

உருவாக்கப்பட்டு வருகின்றது. முஸ்லிம் பிரதேசங்களில் தேடுதல் நடத்துவதை போல ஏனைய பகுதிகளில் தேடிப்பார்த்தால் பல ஆயுதங்கள் கிடைக்கும் என்றும் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சிறப்பு வியாபார பண்ட அறவீடுகள் கட்டளைகளை அங்கீகரிப்பது மீதான விவாதம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 21ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் நாட்டில் உள்ள மக்கள் அச்சமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை அச்சுறுத்தும் வகையிலான சில செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. தேவையற்ற பதற்றங்களைக் குறைத்து சுமூக நிலையை ஏற்படுத்த வேண்டிய அவசர தேவை எழுந்துள்ளது. இந்த விடயத்தை கையாள்வதில் ஊடகங்களுக்கும் கணிசமான பொறுப்பு உள்ளது. தற்போதைய இலத்திரனியல் ஊடகங்களை எடுத்துக்கொண்டால் அவை சகல சம்பவங்களையும் மேலும் உணர்ச்சியூட்டும் வகையில் வெளியிடுகின்றன. மக்கள் மத்தியில் மேலும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலான செய்திகளையே அந்த ஊடகங்கள் தேடுகின்றன. மக்கள் மத்தியில் காணப்படும் பரபரப்பை குறைப்பதற்கான தேவையை உணர்ந்து ஊடகங்கள் செயற்படவேண்டியுள்ளது.

மேலும் சகல இடங்களிலும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சில பகுதிகளில் தேடுதல்களுக்குச் செல்லும் போது ஊடகங்களையும் அழைத்துச் செல்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். இவை தேவையற்ற அச்சத்தையும், பதற்றத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும். ஒவ்வொரு நிகழ்வையும் நாம் தேவையற்ற வகையில் உணர்ச்சியூட்டத் தேவையில்லை. இதனால் மக்கள் மத்தியில் அச்சம் உருவாகியிருப்பதுடன், பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வது உள்ளிட்டவை பாதிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புத் தொடர்பில் தேவையற்ற வகையில் எச்சரிக்கைகளை விடுப்பதால் நாட்டின் பொருளாதாரமும் பாதிப்புக்கு உள்ளாகிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அதேநேரம் பாதுகாப்புத் தரப்பினரும் தமது நடவடிக்கைகளின் போது சமநிலைத் தன்மையைப் பேணுவதன் ஊடாகவும் பதற்றங்களைத் தணிக்க முடியும். தேசிய பாதுகாப்பை குறைவாக மதிப்பிடாமல், தேவையற்ற பரப்புரைகளைத் தவிர்க்க வேண்டும். தேடுதல் நடவடிக்கைகளின் போது மீட்கப்படும் வாள்கள், கத்திகள் தொடர்பில் அதிகமாகப் பேசப்படுகிறது. இதில் எந்தவிதமான ஆச்சரியமும் இல்லை. குறிப்பாக முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது ஏதாவது வன்முறையான ஆயுதங்களை மீட்க வேண்டும் என்ற விசேடமான நோக்கமொன்று காணப்படுகிறது. தேடுதல்களில் மீட்கப்படும் ஆயுதங்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. ஆனால் இன்று நடைபெறுவது என்னவெனில், தேவையற்ற பரப்புரைகளால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் நாட்டிலுள்ள சகலரையும் வெட்டுவதற்கும், குத்துவதற்கும் தயாராக இருக்கின்றது என்ற பிழையான அர்த்தப்படுத்தல் உருவாகிறது. ஆனால் உண்மை வெகுதொலைவில் உள்ளது.

ஏனைய சமூகங்கள் வாழும் பகுதிகளிலும் இதுபோன்று தேடுதல்களை நடத்தினால் இதேயளவு ஆயுதங்கள் மீட்கப்படலாம். எல்லா சமூகத்திலும் குற்றங்களில் ஈடுபடும் தரப்பொன்று இருக்கத்தான் செய்யும். அவர்கள் தமது பாதுகாப்புக்காக இதுபோன்ற ஆயுதங்களை எப்பொழுதும் மறைத்துவைத்திருப்பார்கள். வன்முறைகளை எதிர்கொண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறான நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளோம். இதனை அடிப்படையாகக் கொண்டு சகலரும் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு காத்துக்கொண்டிருக்கின்றனர் என்ற அர்த்தப்படுத்தல் வழங்குவது முற்றிலும் தவறானது என்பதுடன் துரதிஷ்டவசமானது. சகலரையும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கையாளாமல், குறைந்த சந்தேகம் உள்ளவர்களை ஏனைய சட்டங்களின் கீழ் கையாள முடியும். நீண்டகாலம் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தால், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகள், சாதாரண சட்டத்தை மறந்துவிடுகின்றனர். முஸ்லிம் சமூகம் தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேவையற்ற சந்தேகப்பார்வையை நீக்குவதற்கு திறந்த பேச்சுக்களை நடத்துவதற்கு நாம் தயாராக இருப்பதுடன், எந்தவொரு பயங்கரவாத செயற்பாட்டுக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் என முஸ்லிம் மக்கள், மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களான நாம் உறுதிமொழி வழங்கியுள்ளோம். எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை சுமூகமாக்குவதற்கு சகலரும் இணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (ம-31)

## ஈனத்தனமான...

இலங்கையில் இயல்புநிலை விரைவில் திரும்புவதற்கு முஸ்லிம்கள் வழங்கிவரும் ஒத்துழைப்பு மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போலிப் பரப்புரைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பு மென்டெரினா ஹோட்டலில் நடைபெற்றது. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாங்கள் இந்தச் சந்தர்ப்பத்திலே மிகத் தெளிவாகச் சொல்லக் கூடிய ஒரு விடயம், இந்த நாடு மிகப்பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், மிக அவசரமாக இயல்பு நிலைக்குத் திரும்பவேண்டிய அத்தியாவசிய தேவைப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பது குறித்து நாங்கள் எல்லோம் மனங்கொள்ள வேண்டும்.

இது சம்மந்தமாக பாதுகாப்புத் துறையினரும், மிகத்தீவிரமாக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு, குற்றச் செயல்களோடு தொடர்புபட்டவர்கள் அடையாளம் காணப்படுவது பாராட்டத்தக்கது. அதேநேரம், சாதாரண சமூக மட்டத்திலே குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், ஈடுபடுபவர்கள் வைத்திருக்கிற வெவ்வேறு வகையான சில பொருள்கள் அகப்படுகின்ற போதும், தற்பாதுகாப்புக்காக வைத்திருக்கிற ஆயுதங்கள் அகப்படும் போதும் எல்லாவற்றையும் சேர்த்து பயங்கரவாதத்துக்கு தயாராகிற ஒரு சமூகமாக முஸ்லிம் சமுகம் சித்தரிக்கப்படுகின்ற அவல நிலையிலேயே நாங்கள் எல்லோரும் இருந்து கொண்டிருக்கிறோம்.

இது சம்மந்தமாக சகல சமூகத்தவரையும், இந்தநாட்டின்பாதுகாப்புத்துறையினரையும், மிக அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் நடுநிலைத் தன்மையுடன் இந்த விடயங்கள் பார்க்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம் - என்றார். (ம-21)

## கொச்சிக்கடை...

தன்று அலேதீன் அஹமத் முவாத் என்ற தற்கொலை குண்டுதாரி நடத்திய தற்கொலை குண்டு தாக்குதலால் புனித அந்தோனியார் தேவாலயத்தில் பலர் உயிரிழந்தனர். இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது. (ம)

## பனையால்...

வதாவது:

சீவல் தொழில்செய்யும் குறித்த நபர், நேற்று மாலை 5 மணியளவில் பனை மரத்தில் இருந்து வீழ்ந்துள்ளார். அவர் நோயாளர் காவு வண்டியில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் னகொண்டு செல்லப்பட்டபோது செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-26)

# ஈரானின் உலோக ஏற்றுமதிக்கு அமெரிக்கா தடை



வோஷிங்டன்,மே 10
ஈரான் மீது அமெரிக்கா மீண்டும் ஒரு பொருளாதாரத் தடையை விதித்தது. ஈரானின் உலோக ஏற்றுமதிப் பொருள்களான இரும்பு, அலுமினியம் போன்றவை அடங்கலாக இந்தத் தடை விதிக்கப்பட்டது. இதுகுறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறும்போது, உலோகங்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் ஈரானுக்கு அதிக வருவாமனம் கிடைக்கிறது. ஈரானின் பொருளாதாரத்தில் இது 10சதவீதம். எங்கள் நாட்டின் துறைமுகங்களில் ஈரான் நாட்டு உலோகங்களை அனுமதிப்பதை இனி ஏற்றுக் கொள்ள மாட்டோம்" என்று தெரிவித்தார். 2015ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டு அணு ஒப்பந்தத்தின் சில சரத்துகளை நிறைவேற்றுவதை நிறுத்தி வைப்பதாக ஈரான் அறிவித்ததையடுத்தே ஈரானின உலோகத் தொழிலைக் குறி வைத்துத் தடை விதித்தது அமெரிக்கா. இதற்கான உத்தரவில் கையெழுத்திட்ட ட்ரம்ப், ஈரான் தலைவர்களைச் சந்தித்துப் பேசி ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். எண்ணெய்க்கு அடுத்தபடியாக ஈரானின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் உலோகங்கள் ஆகும்.

**பின்னணி**
அமெரிக்கா உட்பட்ட சில நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே 2015ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அணு ஒப்பந்தம், ஈரானின் அணு ஆயுதத் திட்டங்கள் குறித்து எட்டப்பட்டதாகும். இந்த ஒப்பந்தத்தில் இருந்து கடந்த ஆண்டு அமெரிக்கா விலகிக்கொண்டது. அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை
முறிப்பேன் என்றும் அந்நாட்டுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் விமர்சித்தார்.
இதனைத் தொடர்ந்து ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. ஆனால், அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன.
ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது.



## குழந்தையை அறிமுகப்படுத்தியது பிரிட்டனின் அரச குடும்பம்

லண்டன், மே 10
பிரிட்டன் இளவரசர் ஹாரி மற்றும் அவரது மனைவி மெக்கல் ஆகிய இருவரும் தங்களது குழந்தையை நேற்று மக்களுக்கு அறிமுகம் செய்தனர். பிரிட்டன் இளவரசர் சார்லஸ், டயானா தம்பதியின் இரண்டாவது மகன் ஹாரி அமெரிக்க நடிகை மெக்கன் மார்கலைக் கடந்த வருடம் திருமணம் செய்துகொண்டார். இந்தத் தம்பதிக்குக் கடந்த திங்கட்கிழமை ஆண் குழந்தை பிறந்தது. தங்கள் குழந்தையை இளவரசர் ஹாரி- மெக்தல் ஆகிய இருவரும் நேற்று மக்களுக்கு அறிமுகம் செய்தனர்.

## வெனிசுலா சட்ட சபையின் உப தலைவர் கைதானார்

கராகஸ், மே 10
வெனிசுலாவின் சட்ட சபையின் உப தலைவரும், அந்த நாட்டின் எதிர்க் கட்சித்தலைவர் ஜுவான் குவைடோவின் உதவியாளருமான எட்கர் சம்ரானோ, நேற்று வெனிசுலா நாட்டின் 'செபின்' என்ற தேசியப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.
வெனிசுலா இராணுவத்துக்கு எதிரான சதி முயற்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட தேசிய சட்ட சபை அங்கத்தவர்கள் 7பேரைக் குறிப்பிட்டு அவர்களைக் கைது செய்யும்படி வெனிசுலாவின் உயர் நீதிமன்றம், அண்மையில் கட்டளையிட்டிருந்தது. இதன் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம் பெற்றது. கூட்டமொன்றில் கலந்து கொண்ட பின்னர் எட்கர் தனது மகிழுந்தில் ஏறியபோது அவரை அதிலிருந்து இறங்குமாறு புலனாய்வு அதிகாரிகள் கூறினர். அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்த நிலையில் அவரை மகிழுந்துடனேயே இழுவை வாகனமொன்றில் இழுத்துச் சென்றனர். அவர் சிறைப்படுத்தப்பட்டிருப்பார் என்றும், அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதியின் சூத்தரதாரி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் வெனிலா அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எட்கரின் மகிழுந்து இழுத்துச் செல்லப்பட்டமை ஓர் அபத்தமான செயல் எனக் குவைடோ தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## கனடா சென்றார் ஆசியா பீவி

இஸ்லாமாபாத்,மே 10
மத அவமதிப்பு வழக்கில் சாவுத் தண்டனை பெற்றுப் பின்னர் விடுவிக்கப்பட்ட பாகிஸ்தானைச் சேர்ந்த கிறிஸ்தவப் பெண்ணான ஆசியா பீவி, பாகிஸ்தானை விட்டு வெளியேறிக் கனடாவுக்குச் சென்றார். பாகிஸ்தானில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டு, 8 ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவரை உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் விடுதலை செய்தது.
அவர் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து அரசியல் கட்சிகள் மற்றும் மதவாத அமைப்புகள் பாகிஸ்தானில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டன. ஆசிபாவுக்கு சாவுத் தண்டனை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தின. ஆசியா பீவியின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதால், அவர் நாட்டை விட்டு வெளியேற முடிவு செய்தார். ஆனால் மறு ஆய்வு மனு மீதான தீர்ப்பு வெளியாகும் வரை ஆசியா பீவியை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க முடியாது என்று அரசு தரப்பில் கூறப்பட்டது.
அவருக்கு உயிர் அச்சுறுத்தல் நிலவியதால் அவரது இருப்பும் இரகசியமாகவே இருந்து வந்தது.
இந்த நிலையில் அவர் பாகிஸ்தானில் இருந்து வெளியேறிவிட்டதாகப் பாகிஸ்தான் அரச அதிகாரிகள் தெரிவித்தனர். அவர் எப்போது வெளியேறினார்? எங்கு சென்றார்? என்ற தகவலை அவர்கள் வெளியிடவில்லை. ஆனால் ஆசியா பீவி கனடா சென்று விட்டதாகவும் கனடாவில் அவரது மகள்களுடன் சேர்ந்துவிட்டதாகவும் ஆசியா பீவியின் வழக்கறிஞர் தெரிவித்தார். ஆசியாவுக்கு நீதி கிடைத்திருப்பதா கவும் அவர் கூறினார்.

## வடகொரியாவில் இருந்து உடல்கள் மீட்பதை நிறுத்தியது அமெரிக்கா

வோஷிங்டன்,மே 10
கொரியப் போரில் கொல்லப்பட்ட அமெரிக்கர்களின் உடல் எச்சங்கள் வடகொரியாவிலிருந்து மீட்கப்பட்டு வந்ததைத் தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவித்தது அமெரிக்கா. 1950ஆம் ஆண்டு தொடக்கம் 1953ஆம் ஆண்டு வரையான கொரியப் போரில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படைச் சிப்பாய்கள் 50பேரின் எச்சங்களை வடகொரியா கடந்த ஆண்டு அமெரிக்காவிடம் ஒப்படைத்தது. இது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புக்கும் வடகொரியா தலைவர் கிம் ஜோங் உன்னுக்கும் இடையேயான உறவு மேம்பட்டு வருவதைக் காட்டும் அறிகுறியாக இருந்தது. இந்த நிலையில் சமீபத்தில் இரு நாட்டு தலைவர்களிடையே நடந்த சந்திப்பு தோல்வியடைந்ததை அடுத்து வடகொரியாவிடம் இருந்து அமெரிக்கப் படைச் சிப்பாய்களின் எச்சங்களைப் பெறும் முயற்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்தது.
கொரியப் போரின்போது அண்ணளவாக 36 ஆயிரம் அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இதில் 5ஆயிரத்து 300 பேர் வடகொரியாவில் காணாமல் போனார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## பாலர் பாடசாலைக்குள் மகிழுந்து புகுந்து விபத்து

*2 குழந்தைகள் சாவு; 13பேருக்குக் காயம்*

டோக்கியோ,மே 10
ஜப்பானில் பாலர் பாடசாலை மாணவர்களுக்குள் மகிழுந்து புகுந்து விபத்துக்குள்ளானதில் 2 குழந்தைகள் பரிதாபமாகச் சாவடைந்தனர். ஜப்பானின் ஷிகா பிராந்தியத்தில் உள்ள ஓட்சு நகரில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நடந்தது. ஆசிரியர்கள் 3 பேர், 10க்கும் மேற்பட்ட மாணவர்களை அழைத்துக்கொண்டு பாடசாலைக்கு அருகே உள்ள வீதியோர நடைபாதையில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, வேகமாக வந்த மகிழுந்து ஒன்று மற்றொரு மகிழுந்துடன் மோதியது. அத்துடன் அந்த மகிழுந்து வீதியோரமாக நடந்து சென்ற பாலகர்கள் கூட்டத்துக்குள் புகுந்து அவர்களை மோதித் தள்ளியது. இதில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தூக்கி வீசப்பட்டனர். படுகாயம் அடைந்த குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் மீட்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். விபத்தை ஏற்படுத்திய மகிழுந்தைச் செலுத்திய 62 மற்றும் 52 வயதான 2 பெண்களைப் பொலிஸார் கைது செய்தனர். கடந்த மாதம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 82 வயதான முதியவர் செலுத்திய மகிழுந்து மக்கள் கூட்டத்துக்குள் புகுந்ததில் ஒரு பெண் மற்றும் அவரது 2 வயது குழந்தை சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது.



பாலஸ்தீனத்தில் அண்மையில் இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தியது. பாலஸ்தீனத்தின் காசா நகரில் இந்த வான்தாக்குதலால் அழிக்கப்பட்ட தமது வீட்டின் இடிபாடுகளிலிருந்து தனது உடமைகளை வெளியே எடுக்க முற்படுகிறார்கள் அந்தப் பகுதி மக்கள்.

## ராஜீவ் கொலை விவகாரம்

# விடுதலையை நிறுத்தக் கோரிய மனு தள்ளுபடி செய்யப்பட்டது




புதுடெல்லி,மே10

இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர்ராஜீவ்காந்தியின்கொலை வழக்கில்ஆயுள்தண்டனைபெற்றுச் சிறையில் உள்ள நளினி, பேரறிவாளன் உட்பட்ட ஏழு பேரையும் விடுதலைசெய்வதுஎன்றதமிழகஅரசின் தீர்மானத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரித் தொடரப்பட்ட வழக்கை இந்திய உச்சநீதிமன்றம் தள்ளுபடிசெய்தது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது உடன் இறந்த ஒருவரது மகனான எஸ்.அப்பாஸ்உள்ளிட்டவர்கள்இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தனர். தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலானமூன்றுநீதிபதிகள் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்பதா என்பதைப் பரிசீலித்தது.

பிறகு'இந்தமனுவில்விசாரணைக்கு ஏற்பதற்கு உரிய வாதம் ஏதும் இல்லை' என்று கூறி மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. ராஜீவ் கொலையில்உடன்இறந்தவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வேண்டும் என்றும் அப்பாஸ் இதில் கோரினார். ஆனால், இந்த விவகாரத்தில் அரசமைப்புச் சட்ட அமர்வு முடிவு செய்துவிட்ட நிலையில் மீண்டும் இந்த வழக்கை விசாரிக்கப் போவதில்லை என்று தலைமை நீதிபதி தெரிவித்தார்.

2018செப்ரெம்பர்மாதத்தில்,இந்தஏழு பேரையும் விடுதலை செய்யவேண்டும் என்று தமிழக அமைச்சரவை முடிவெடுத்து அதைத் தமிழ்நாட்டின் ஆளுநர் பன்வாரிலால் புரோ ஹித்துக்கு பரிந்துரையாக அனுப்பியது. இந்தப் பரிந்துரை மேல் முடிவெ டுப்பதை ஆளுநர் தாமதப்படுத்தி வருகிறார். இந்த நிலையில்தான், ஏழு பேரினதும் விடுதலையை நிறுத்த வேண்டும் என்று கோரித் தாக்கல் செய்தமனுவைஉச்சநீதிமன்றம்தள்ளுபடிசெய்துள்ளது.

# மீண்டும் ஏவுகணைச் சோதனை கொரியத் தீபகற்பத்தில் பதற்றம்

செயுள்,மே10

வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை ஒன்றில் ஈடுபட்டதாகத் தென்கொரியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகொரியாவின் வடமேற்கில் சினோரி பகுதிக்கு அருகில் நேற்று இது நடத்தப்பட்டுள்ளது என்று தென்கொரிய இராணுவத் தலைமையகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதல் குறித்த முழு விவரத்தைத் தென்கொரியா தரப்பு அளிக்கவில்லை.



கடந்த வாரம் ஜப்பான் கடற்கரைப்பகுதியில்குறுகியதூர ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்திருந்ததாகவும், அமெரிக்காவுடனான பேச்சு முடிவுகளில்ஏற்பட்டவெறுப்பின்வெளிப்பாடாக இந்தத் தாக்குதலை வடகொரியா நடத்தி இருக்கலாம் என்றும்தென்கொரியாதெரிவித்தது. தொடர்ந்து ஏவுகணைத் தாக்குதலில் வடகொரியா ஈடுபட்டுவருவதால்கொரியத்தீபகற்பப் பகுதியில் பதற்றம் உருவாகியுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## இன்றைய நாள்

**மேடம்:** மனதில் உற்சாகம் மிகுந்திருக்கும். வெகுநாள் திட்டமிட்ட நற்காரியம் நிறைவேறும் சூழல் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் பயன்படுத்துவீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**இடபம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும்.ஓய்வு நேரத்தில் இசைப் பாடலை ரசிப்பதால் மனம் இலகுவாகும்.

**மிதுனம்:** குடும்ப உறுப்பினர் அதிக பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் செழிக்க தகுந்த உபாயங்களை பின்பற்றுவீர்கள். உபரி பண வருமானம் உண்டு.

**கடகம்:** பழகுபவர்களிடம் தேவையற்ற கருத்துக்களை பேச வேண்டாம். தொழில், வியாபார அபிவிருத்தி செய்வதில் தாமதம் இருக்கும். புதிய வகையில் பணச்செலவு ஏற்படலாம்.

**சிம்மம்:**மனதில் உற்சாகமும், கலையுணர்வும் அதிகரிக்கும். எல்லாரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி திருப்திகரமாக இருக்கும்.

**கன்னி:** நண்பர் உங்களை புகழ்ந்து பேசுவர். விழிப்புணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், தாராள பணவரவும் கிடைக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** வாழ்வில் கூடுதல் வளம் பெற புதிய வழி பிறக்கும். பிறர் வியக்கும் வகையில் பணிகளை மேற்கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமான அளவில் இருக்கும். உபரி பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** செயல்களில் சிறுஅளவிலான குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்; எதிர்பார்த்த பணவரவு கிடைக்க தாமதம் ஆகலாம்.

**தனுசு:** செயல்களில் சிறுஅளவிலான குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்; எதிர்பார்த்த பணவரவு கிடைக்க தாமதம் ஆகலாம்.

**மகரம்:** மன்தில் புதிய நம்பிக்கை உருவாகும். கூடுதல் அக்கறையுடன் பணியாற்றுவீர்கள். தொழில், வியாபாரம் சிறந்து முக்கியஸ்தரின் பாராட்டு கிடைக்கும்.

**கும்பம்:** சிலர் உங்கள் பேச்சை தவறாக புரிந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் சில குறுக்கீடு வந்து சரியாகும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மீனம்:**அடுத்தவர் மீதான நம்பிக்கையில் மாற்றுச் சிந்தனை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். அளவான பணவரவு கிடைக்கும்.

# உலகக்கிண்ண கால்பந்துத் தொடரில் இலங்கை அணியில் ஐந்து தமிழர்கள்!



யாழ்ப்பாணம், மே 10

கட்டாரில் 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்துத் தொடர் மற்றும் 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசியக் கிண்ணத் தொடர்களுக்கான 31 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் ஐந்து தமிழ் வீரர்களுக்கு இடம் கிடைத்துள்ளது.

மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் அணியின் வீரரான டக்சன் பியுஸ்லஸ், இளவாலை யங்ஹென்றிஸ் அணியின் செபமாலை நாயகம் ஜூட் சுபன், மன்னார் சாவற்காடு கில்லறி விளையாட்டுக் கழக அணியின் செபஸ்ரியாம்பிள்ளை யேசுதாசன், நாவாந்துறை சென். மேரிஸ் அணியின் மரியதாஸ் நிதர்சன், பள்ளிமுனை சென். லூசியஸ் அணியின் சகயராஜா றோச் ஆகியோரே அவ்வாறு உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

டக்சன் பியுஸ்லஸ் 2012ஆம் ஆண்டு இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணிக்கு தெரிவானார். இவர் உபாதை காரணமாக அணியிலிருந்து விலகி மீண்டும் 2018ஆம் தேசிய அணியில் இடம்பிடித்தார். 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற கழகங்களுக்கு இடையிலான ஆசியக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் கொழும்பு எவ்.சி அணி சார்பில் விளையாடினார்.

ஜூட் சுபன், 2015ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்ட தேசிய கால்பந்தாட்ட அணியில் முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்டு வட கொரியாவில் இடம்பெற்ற 19வயது பாடசாலைகளுக்கு இடையிலான ஆசிய கால்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் பங்குபற்றினார். சீனா, பங்களாதேஷ் நாடுகளில் இடம்பெற்ற தொடர்களிலும் இவர் விளையாடியுள்ளார்.

செபஸ்ரியாம்பிள்ளை யேசுதாசன் 2015ஆம் ஆண்டு 23 வயதுப்பிரிவு தேசிய கால்பந்தாட்ட அணிக்கு தெரிவானர். இவர் 2019ஆம் ஆண்டு தொழில் முறையிலான கால்பந்தாட்டத்தில் இலங்கை வான்படையின் கால்பந்தாட்ட கழகத்துக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

மரியதாஸ் நிதர்சன் 2016ஆம் ஆண்டு 23 வயதுப்பிரிவு தேசிய கால்பந்தாட்ட அணியில் இணைந்து கொண்டார். 2018ஆம் ஆண்டு தேசிய கால்பந்தாட்ட அணிக்கு தெரிவானர்.

சகயராஜா றோச் 2016ஆம் ஆண்டுமுதல் தொழில் முறையிலான கால்பந்தாட்டத்தில்; கொழும்பு எவ்.சி விளையாட்டுக் கழக அணிக்காக விளையாடி வருகிறார். (ம-23)

# யூனியன் வி.கவை வீழ்த்தியது ஸ்கந்தா விளையாட்டுக் கழகம்

யாழ்ப்பாணம், மே 10

யூனியன் விளையாட்டுக் கழக அணியை 12 ஓட்டங்களால் தோற்கடித்தது ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

ஏபி விளையாட்டுக்கழகம் நடத்தும் துடுப்பாட்ட லீக் தொடரின் ஆட்டங்கள் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளை யாட்டுக்கழக அணி மோதியது. ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது. சயந்தன் ஆட்டமிழக்காமல் 158 ஓட்டங்களை விளாசினார். நிரோசன் 58 ஓட்டங்களையும், சிந்துஜன் 17 ஓட்டங்களையும், மிதுசன் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். யூனியன் விளையாட்டுக்கழகம் சார்பில் மோகன்ராஜ், ரகுபதி இருவரும் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

269 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக்கழகத்தினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். மோகன்ராஜ் 71ஓட்டங்களையும், ஆதிசன் 55 ஓட்டங்களையும், மது 27 ஓட்டங்களையும், தர்சன் 22 ஓட்டங்களையும், லவன் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் தனுசன் 3 இலக்குகளையும், சஞ்ஜயன், சோபிதன், சிந்துஜன் மூவரும் தலா ஒவ்வொரு இலக்கினையும்வீழ்த்தினார்கள். (ஒ.23)




# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 10

வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5 ஆவது ஆண்டாக நடாத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை ரேவடி விளையாட்டுக்கழக ஏ அணியைஎதிர்த்துசைனிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து றெயின்போ விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)

# ரேவடி ஏ அணி வெற்றி

யாழ்ப்பாணம், மே 10

வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5 ஆவது ஆண்டாக நடாத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ரேவடி விளையாட்டுக்கழக ஏ அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் புதன் கிழமை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக்கழக பி அணியை எதிர்த்து ரேவடி விளையாட்டுக்கழக ஏ அணி மோதியது.

2:1 என்ற கோல் கணக்கில் ரேவடி விளையாட்டுக்கழக ஏ அணி வெற்றி பெற்றது. ரேவடி விளையாட்டுக்கழக ஏ அணி சார்பில் சாயு, ரவி இருவரும் தலா ஒவ்வொரு கோலையும், இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி சார்பில் கண்ணன் ஓர் கோலையும் பதிவு செய்தனர். (ஒ.23)

# இணுவில் கலையொளி 9 இலக்குகளால் வெற்றி

யாழ்ப்பாணம், மே 10

காரை சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் இணுவில் கலையொளி விளையாட்டுக்கழக அணி 9 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

காரை சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் அணிக்கு 9பேர் பங்குபற்றும் தொடரில், அரையிறுதியாட்டத்தில் இணுவில் கலையொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நோ நேம் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நோ நேம் விளையாட்டுக் கழக அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிலோசன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழக அணி சார்பில் ஜிவிதன் 3 இலக்குகளையும், கோகுலராஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.

31ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலையொளி விளையாட்டுக் கழக அணியினர் 2.1 பந்துப் பரிமாற்றங்களில் நிறைவில் எதுவித இலக்கு இழப்புமின்றி 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சாந்தன் 17 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (ஒ.23)

# நேதாஜி வி.க. வெற்றி



யாழ்ப்பாணம், மே 10

வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5 ஆவது ஆண்டாக நடாத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேதாஜி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் நேதாஜி விளையாட்டுக்கழக அணி யை எதிர்த்து சைனிங்ஸ் விளையாட்டுக்கழக பி அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் நேதாஜி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. நேதாஜி விளையாட்டுக்கழக அணி சார்பில் கோபி ஓர் கோலைப் பதிவு செய்தார். (ஒ.23)



### உலகக்கிண்ணத்தில் இந்திய அணியினது ஆட்டத்துக்கு மவுசு!

இங்கிலாந்தில் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணி விளையாடும் ஆட்டங்களுக்கு அதிக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடருக்கான நுழைவுச்சீட்டுக்கள் தற்போதிருந்தே விற்கப்பட்டு வருகின்றன. இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்துக்கான நுழைவுச்சீட்டுக்கள் விற்றுத் தீர்ந்தன 'என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில்.

தற்போது இந்திய அணியின் ஆட்டங்களைக் காண்பதற்கு ரசிகர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் இந்திய அணியின் ஆட்டங்களுக்கான நுழைவுச்சீட்டுக்களுக்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இறுதிக்குச் செல்வது எந்த அணி

# சென்னை, டெல்லி இடையே மோதல்

ஐ.பி.எல். தொடரின் இறுதியாட்டத்தில் மும்பை அணியுடன் மோதப்போகும் அணி எது என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவும் நிலையில், சென்னை - டெல்லி அணிகள் இரண்டாவது தகுதியாட்டத்தில் இன்று பலப்பரீட்சை நடத்துகின்றன.

விறுவிறுப்பாக நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரின் லீக் ஆட்டங்கள் முடிவடைந்து பிளே ஓவ் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. முதலாவது தகுதியாட்டத்தில் மும்பை - சென்னை அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் மும்பை வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற விலகல் ஆட்டத்தில் டெல்லி - ஹைதராபாத் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் டெல்லி வெற்றி பெற்று ஹைதரபாத்தை வெளியேற்றியது. இதையடுத்து டெல்லி அணியும் சென்னை அணியும் இரண்டாவது தகுதியாட்டத்தில் இன்றையதினம் பலப்பரீட்சை செய்கின்றன. இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியே மும்பையுடன் இறுதியாட்டத்தில் மோதும் தகுதியைப் பெறும்.





**சென்னை அணி**

சென்னையைப் பொறுத்தவரையில் அணித்தலைவர் டோனி மட்டுமே ஆரம்பம் முதல் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். ஏனைய வீரர்கள் பெரிதாகப் பிரகாசிக்கவில்லை. அதிலும் குறிப்பாக ஆரம்ப வீரர் வற்சன் இந்தத் தொடரில் படுமோசமாக ஆட்டத்தையே வெளிப்படுத்துகிறார். அம்பதிராயிடுவும் எதிர்பார்த்த அளவுக்கு விளையாடவில்லை. பிளாசிஸ் ஓரளவு கைகொடுக்கின்றார். இதனால் இன்று துடுப்பாட்ட வரிசையில் டோனி ஓரிரு மாற்றங்களைச் செய்வார் என்று எதிர்பார்க்கலாம். கேதர் யாதவ் காயமடைந்த நிலையில் கடந்த ஆட்டத்தில் அவருக்குப் பதிலாக முரளி விஜய் களமிறக்கப்பட்டார். இன்று அவருக்குப் பதிலாக பில்லிங்ஸ் பரிசீலிக்கப்படலாம். அதுபோல சுழல்பந்து வீச்சாளர்களில் ஹர்பஜன் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக பிறிதொரு வேகப்பந்து வீச்சாளரை டோனி அணிக்குள் அழைக்க வாய்ப்புண்டு.

**டெல்லி அணி**

டெல்லி அணியின் பெரும் பலம் அதிரடி ஆட்டம் தான். தவான், பிருத்வி, ஸ்ரேயாஸ், பன்ட் என்று முன்வரிசை முழங்கித் தள்ளக்கூடியது. ஆனால் மத்திய வரிசையிலும், பின் வரிசையிலும் அந்த அணிக்கு பெரும் வலுநிலையோ அல்லது சமநிலையோ இல்லை. பந்துவீச்சைப் பொறுத்தவரையில் ரபாடா அணியில் இருந்து விலகியுள்ளமை பலவீனம்.

**ஆடுகளப் புரிதல்**

இன்றைய ஆட்டம் விசாகப்பட்டினத்தில் நடைபெறுகின்றது. சென்னை அணியின் தலைவர் டோனி பொதுவாக ஆடுகளங்களை அறிவதில் வல்லவர். ஆனால் கடந்த ஆட்டத்தில் (விலகல் ஆட்டத்தில்) ஹைதராபாத்தை இந்த மைதானத்திலேயே டெல்லி அணி எதிர்கொண்டது. இதனால் அந்த அணிக்குக் கூடுதல் சாதகம் உள்ளது என்று கருதப்படுகிறது. பார்க்கலாம் டெல்லியா அல்லது சென்னையா என்று. (ம)



### இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி பெறும்

*கபில் நம்பிக்கை*

உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணி அரையிறுதிக்குத் தகுதி பெறுவது உறுதி என்று தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் தலைவர் கபில் தேவ்.

உலகக்கிண்ணம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் கபில் தேவ். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகக்கிண்ணத்துக்கான இந்திய அணியில் இளம் மற்றும் அனுபவம் வாய்ந்த வீரர்கள் சம விகிதாசாரத்தில் இடம்பிடித்துள்ளனர். இந்த வகையில் மற்ற அணிகளை விட இந்திய அணி அதிக அனுபவம் கொண்டதாகும். வீரர்கள் கலவை சரிசமமான விகிதத்தில் உள்ளது. 4 வேகப் பந்து வீச்சாளர்க ளும், 3 சுழற்பந்து வீச்சாளர்களும், விராட் கோக்லி, டோனி ஆகியோரும் அணியில் அங்கம் வகிக்கிறார்கள்.

டோனியும், விராட் கோக்லியும் இந்திய அணிக்கு சிறப்பான பங்களிப்பை அளித்து வருகிறார்கள். 4 வேகப் பந்து வீச்சாளர்களும் நல்ல நிலையில் உள்ளனர். முகமது சமி, ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் மணிக்கு 145 கிலோமீற்றர் வேகத்தில் பந்து வீசி வருகிறார்கள்.

இங்கிலாந்து, நடப்பு சம்பியன் ஆஸ்திரேலியா அணிகளுடன் இந்தியாவும் அரையிறுதிக்குத் தகுதி பெறும். இந்திய அணி உறுதியாக அரையிறுதிக்கு முன்னேறும். அதன் பிறகு போட்டி நிச்சயம் கடினமாக இருக்கும். அரையிறுதிக்கு பிறகு முன்னே றுவதில் அதிர்ஷ்டமும், தனிப்பட்ட வீரர்கள் மற்றும் அணியின் கூட்டு முயற்சி யும் அவசியமானதாகும். இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா அணிகள் மற்ற அணிகளை விட வலுவானதாகும்.

கடந்த 10 ஆண்டுகளில் கிரிக்கெட்டில் நிறைய மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. தற்போதைய கால கட்டத்தில் தொடக்க ஆட்டக்காரர்கள் மட்டுமின்றி எவரும் நான்காவது வீரராக களமிறங்கி விளையாட முடியும். பாண்டியாவுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடாது. அவரிடம் நிறைய திறமை இருக்கிறது. அவர் தனது இயல்பான ஆட்டத்தை விளையாட விட வேண்டும். நான் எந்தவொரு வீரரையும், மற்றொரு வீரருடன் ஒப்பிட்டு பார்க்க விரும்ப மாட்டேன். ஏனெனில் அது அந்த வீரருக்கு நெருக்கடியை அளிக்கும். (ம)

## உபதலைவராக கிறிஸ்கெய்ல்

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரரான கிறிஸ் கெய்ல் உலகக் கிண்ணத் தொடருக்கான அந்த அணியின் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர் பன்னாட்டு ஒருநாள் அரங்குகளில் 289 போட்டிகளில் விளையாடி, 10,151 ஓட்டங்களை இதுவரை குவித்துள்ளார். இந்த உலகக் கிண்ணத் தொடரே இவர் பங்கேற்கும் இறுதி உலகக் கிண்ணத் தொடராக அமையும். இவர் தொடர்ச்சியாக 5 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பன்ட், பிருத்வியில் பெரும் நம்பிக்கை

## டெல்லியின் தலைவர் ஸ்ரேயாஸ் நம்பிக்கை

சென்னை அணிக்கு எதிராக இரண்டாவது தகுதியாட்டத்தில் இன்று களமிறங்கும் நிலையில், பன்ட், பிருத்வியில் பெரும் நம்பிக்கை தெரிவித்தார் டெல்லி அணியின் தலைவர் ஸ்ரேயாஸ்.

இன்றைய ஆட்டம் தொடர்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஸ்ரேயாஸ் தெரிவித்ததாவது:

ஹைதராபாத்துக்கு எதிரான வெற்றியால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். அணியில் உள்ள ஒவ்வொருவரது முகத்திலும் மகிழ்ச்சியைக் கண்டேன். இதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. வெற்றிபெற்ற பிறகு கொண்டாட்டம் தேவைதான். கப்ரிலின் அதிரடியான ஆட்டத்தால் ஹைதராபாத் அணி மிகப்பெரிய ஓட்டங்களை எடுக்கும் என்று கருதினோம். ஆனால் அமித் மிஸ்ரா பிரமாதமாக பந்துவீசினார். அனைவரது பங்களிப்பும் சிறப்பாக இருந்தது. ரிஷப் பன்ட், பிரித்வி ஷா அதிரடியாக ஆடினால் கட்டுப்படுத்துவது கடினம். அவர்கள் போக்கில் ஆடினால் வெற்றிக்கு அழைத்துச் செல்வார்கள். இரண்டாவது தகுதியாட்டத்தில் சென்னையை எதிர்கொள்கிறோம். அந்த அணிக்கு எதிராக வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை உண்டு - என்றார். (ம)




**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

**சமய பாட ஆசிரியர் தெரிவு**
சனி, ஞாயிறு
(9.30am - 3.00pm)
**வருமான பரிசோதகர் நீதிமன்ற, வடமாகாண முகாமைத்துவ உதவியாளர்**
பிரிவு-1(9.00am - 1.00) சனிக்கிழமைகளில்
பிரிவு-2(9.00am - 1.00) ஞாயிற்றுக்கிழமை
**நீதிமன்ற பதிவாளர்**
சனிக்கிழமைகளில்
(9.00am - 4.00pm)
**புள்ளிவிபரவியலாளர்**
சனிக்கிழமைகளில்
(9.00am - 3.00pm)
**சட்டமாணி நுழைவு**
சனிக்கிழமைகளில்
(9.00am - 3.00pm)
**SLAS (Open/Limited)**
ஞாயிற்றுக்கிழமைகளில்
(9.00am - 4.00pm)
**SLEAS (Open/ Limited)**
ஞாயிற்றுக்கிழமைகளில்
(9.00am - 3.00pm)
விரிவுரையாளர்
தவசேகருடன்துறைசார்
வளவாளர்கள்
**076 688 3394,**
**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ்நிலையத்திலிருந்து 100m இல்)

**விசேட கருத்தரங்கு**

SLAS,SLEAS பதிவாளர்,
முகாமைத்துவ உதவியாளர்,
LLB வருமான பரிசோதகர்,
புள்ளிவிவரவியாளர்
சமயபாட ஆசிரியர் மற்றும்
ஆசிரியர் போட்டிப்பரீட்சை
ஆகியவற்றுக்கு
தனித்தனியாக இடம்பெறும்
உளச்சார்பு,
பொது அறிவு,
மொழித்திறன், ஆங்கிலம்
முகாமைத்துவம்,
கல்விப் பொது அறிவு
**11.05.2019 சனி**
**9.00 am - 2.30pm**
P. கமல்தாசன் மற்றும்
துறைசார் 6 வளவாளர்கள்
**நாவலர்**
கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 111 6739, 076 166 1986

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

P.உமாசங்கர்
& வளவாளர்களின்
- SLAS,SLEAS (Open/Limited)
- நீதிமன்றபதிவாளர் (Open/Limited)
- புள்ளிவிபரவியலாளர் & அலுவலர்
- பாராளுமன்ற உத்தியோகத்தர்
- சிறைச்சாலை / புனர்வாழ்வு உத்தியோகத்தர்
- பட்டதாரி ஆசிரியர்
- சட்டக்கல்லூரி தெரிவு

P.உமாசங்கர் &
S.ஆனந்தன் மற்றும்
துறைசார் வளவாளர்கள்
பொது அறிவு, நுண்ணறிவு/
உளச்சார்பு, முகாமைத்துவம்,
முகாமை உளச்சார்பு
சட்டம், ஆங்கிலம்
**12.05.2019 ஞாயிறு**
**9am to 4.30 pm**
நவீன மாற்றத்திற்கு அமைய
முற்றிலும் எதிர்பார்க்கை
விடயங்களுடன்
தொடர்ந்து பிரதி
ஞாயிற்றுக்கிழமைகளில்
**நாவலர் கல்வி நிறுவனம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143,
077 394 2964, 071 813 0390

# ஹாட்ஸ்பர் இறுதியில்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் இறுதிக்குத் தகுதி பெற்றது ஹாட்ஸ்பர்.

3:2 என்ற கோல் கணக்கில் அஜாக்ஸை வீழ்த்தியே அந்த அணி இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)



**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கிநின்று பணி செய்ய பணிப் பெண் தேவை.
ஊதியம் 25,000/=
077 788 5175, 077 908 4950


**VACANCY IN JAFFNA**

வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கணனி, மற்றும் சேவைகளை வழங்கும் எமது நிறுவனத்தில் வரவேற்பாளர் சேவைக்குரிய வெற்றிடத்தை நிரப்புவதற்காக 45 வயதுக்கு மேற்பட்ட துடிப்பும் அனுபவமும் உள்ள பெண் ஒருவரை எதிர்பார்க்கின்றோம். விருப்பமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை info@stpjaffna.com எனும் மின்னஞ்சல் மூலமோ அன்றி தபாலிலோ 7 நாட்களிற்குள் விண்ணப்பிக்கவும்

STP *Your Partner in IT Solution*
49,1 st Cross Street, Jaffna. T.P: 021 222 2674

**யாழ் மண்ணில் முதன்முறையாக பாதுகாப்பு கருவிகள் விற்பனையில்**

**NALIN IT**
Technologies Pvt Ltd.



**உங்கள் பாதுகாப்பை உறுதி செய்ய பாதுகாப்பு கருவிகள்**

அரச ,தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள். வர்த்தக நிலையங்கள், வணக்கஸ்தலங்கள், கலாச்சாரமண்டபங்கள், அனைத்தினதும் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு. எமது நிறுவனம் (நளின்) சிறந்த தரமும், உத்தரவாதமும் கூடிய
Hand Held Metal Detector,
Walk Through Metal Detectors
போன்ற பாதுகாப்புக் கருவிகளை தற்போது முதன் முறையாக யாழ் மண்ணில் அறிமுகப் படுத்தியுள்ளது.



விசேட தள்ளுபடி
**15-25 வீதம்**
நிபந்தனைக்கு உட்பட்டது



Jaffna **CCTV**

**HIKVISION** Authorised Dealer Partner



**விசேட விலைக்கழிவுகளுடன் பெற்றுக்கொள்ள முடியும்**

**மேற் குறிப்பிட்ட பாதுகாப்பு கருவிகளை எமது காட்சி அறையில் பார்வையிட முடியும்**

- கண்காணிப்பு கமரா விற்பனை
- கண்காணிப்பு கமரா உதிரிப்பாக விற்பனை (Hard disk,Power supplies,Connectors, CCTV Cables,camara stands.DVR Cbinets,)
- கண்காணிப்பு கமரா நிறுவுதல்
- விற்பனைக்கு பிந்திய சேவை
- ஒப்பந்த அடிப்படையிலான பராமரிப்பு சேவை
- கண்காணிப்பு கமரா பழுது பார்த்தல்

No: 195/2,Parameswara Junction,Palaly Road,Jaffna. TP:077 766 7975,021 222 1121

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.